www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்

Registered as a News Paper in Sri Lanka
දිනමුරසු වාරමලර්
பக்கம் 20
ஜூன்.18-24.,1995
ரூபா 11/00

# வாரமலர் தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 106

## இந்தியாவின் கோரிக்கை!

## இனப்பிரச்சனை தீர்வில் புதிய நெருக்கடி!



பாரதம் வகுத்துள்ள புதிய வியூகம்!

அதிரடியான அலசல்

ஸ்ரீதேவி நழுவவிட்ட புளியங்கொம்பு

ஆளுக்குத் தகுந்த கூந்தல் அலங்காரம்

திரைமறைவுத் தகவல்கள்

## கேட்டது தனிநாடு கிடைத்தது தனிவீடு

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்

# முரசம்

## நவ இனவாதம்

அன்புள்ள உங்களுக்கு,
வணக்கம்.

யுத்தம் தனது அசுரகரமான
இரண்டாவது மாதத்தை
இனிதேயின்றிப் பூர்த்திசெய்கிறது.

எங்கே எது நடக்குமோ
என்ற பயம் எங்கெங்கும்
விஷக் காய்ச்சல் போலப் பரவியிருக்கிறது.

ஒரு குண்டு வெடித்தால் போதும்;
உடனடியாக தலைநகரில் உள்ள
தமிழர்கள் யாவரும்
கைதுகள் ஒரு புறமும்
கலவர வதந்திகள் மறுபுறமுமாக
தவித்துப் போகிறார்கள்!

தலைநகரில் அரசாங்கம்
வெகு ஜாக்கிரதையாக இருந்தாலும்
தலைநகரைச் சுற்றியுள்ள பகுதிகளில்
நிலமை சீர் என்று நிச்சயமாய் சொல்ல முடியவில்லை.

காரணம்,
கரணமடிக்கும் அரசியல் வாதிகள்
கையிலெடுத்துள்ள இனவாதம்!

திம்புலாகல தேரரின்
இறுதிச் சடங்கை
ஏறக்குறைய கட்சி மாநாடு போலவே
கருதிச், செயற்பட்டிருக்கிறது
பிரதான எதிர்க்கட்சி!

ரணில் இனவாத நொடி துளியுமின்றிப்
பேசி வந்தாலும் கூட,
தலையிருக்க வால் ஆடும்
காட்சி மெல்ல மெல்ல விரிகிறது.
கடிவாளத்தைத் தலைவர்
இறுக்கமாய் பிடித்துக் கொள்வது முக்கியம்!

ஆட்சிக்கு நெருக்கடி கொடுக்க
அருமையான வாய்ப்பு யுத்தம்,
ஏற்படும் இழப்பையெல்லாம்
ஆட்சிமீதான அதிருப்தியாக மாற்றலாம்
என்று பிரதான எதிர்க்கட்சியில்
உள்ள சிலருக்கு
நம்பிக்கைப் பிடிமானம் ஏற்பட்டிருக்கலாம்.

ஜனநாயக அரசியலில்
எதிர்க்கட்சி ஆட்சிக்கு வரத்துடிப்பது
புதிருமல்ல, தவறுமல்ல!

ஆனால், தலைகீழாக நின்றாவது
ஆட்சிக் கட்டில்மீது தாவியே தீருவது
என்று எவர் நினைத்தாலும்
அது அர்த்தமுள்ள அரசியலாகாது!

இந்த நாட்டில் ஒரு
துரதிஸ்டம் தொடர்ந்து கொண்டிருக்கிறது.

ஆளும்கட்சி இனவாதத்தை
எட்டி உதைத்தால் போதும்
எதிர்க்கட்சி அதே இனவாதத்தை
கட்டியணைத்துக் கொள்ளும்.

கொள்கையில் வறுமையா;
சொல்வதற்குச் சுலோகங்கள் இல்லையா?
அரசியல் அரங்கில்
ஆரோக்கியக் குறைச்சலா?
உடனே நாட இருக்கவே இருக்கிறது
இனவாதம்!

'சுதந்திர இலங்கையின்'
இதுவரை கால சரித்திரம் முழுவதும்
இனவாதச் சாக்கடை
அப்படித்தானே உற்பத்தியானது!

கடந்த பாராளுமன்ற-மற்றும்
ஜனாதிபதி தேர்தல்களில் மட்டும்
சற்றே வித்தியாசம் சாத்தியமானது.

நல்ல சகுனம் என்று
நாமெல்லாம் நினைத்தோம்.
அபசகுனம் என்று நினைத்தனர்
இனவாதம் பேசி
அரசியல் சுகவாசம் அடைவோர்!

மீண்டும் அந்தச் சக்திகள்
புலிகளை எதிர்ப்பதாகக் கூறியபடி
தமிழர் விரோத உணர்வை
தட்டி எழுப்ப நினைக்கின்றன.

நேரடியாக இனவாதம் பேசாமல்
சுற்றிவளைத்து வந்து நெருப்பு மூட்டுகிறார்கள்.
இது நவீன இனவாதம்!

வெளிப்படையான இனவாதத்தைவிட
மறைந்திருந்து தூண்டிவிடும்
இனவாதம் மா கொடிது!

பிரதான எதிர்க்கட்சியில் சிலரும்
அதற்குத் துணைபோவார்களேயானால்
அதைவிட அசிங்கம் வேறில்லை!

▫▫

மீண்டும் மறுமடலில்
வந்து கலக்கும்வரை என்றென்றும் அன்புடன்
—ஆசிரியர்—

# ஆன்மீகம்



## மன்னிக்கும் தெய்வம்

நாம் செய்த தவறுகள், குற்றங்கள் எல்லாவற்றையும் உண்மையாய் மனஸ்தாபப்பட்டு ஆண்டவரிடம் சொல்லி எம் பாவவாழ்க்கையை விட்டு விட்டால் உண்மையான விடுதலைகிடைக்கும். இதையே இரட்சிப்பு என்கிறோம்.

அந்த இரட்சிப்பை உலகிற்கு தரவே இறைமகன் இயேசு இவ்வுலகத்திற்கு வந்து தன்னைத் தானே சிலுவையில் ஈந்து உயிர் மீட்டதினால் எமது பாவங்கள் அவரின்மூலம் நீக்கப்பட்டது.

பாவிகளாகிய எம் ஒவ்வொருவருக்காகவும் கிறிஸ்து தன் இரத்தத்தைச் சிந்தினார். கண்ணீரோடும், கவலையோடும், பாவத்தில் வாழும் நாம் எமது வாழ்வை அவரிடம் ஒப்படைத்து மன்னிக்கும் தெய்வம் மூலம் வேண்டுவோமாக!

ஜே.ஏ.ஜே.ரட்னம்-கொழும்பு-13

## ஒரே ஒரு கேள்வி

ஒரு சமயம் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் சிலர் வந்து ஒரு தோழர் பற்றி விபரிக்கலாயினர்.

அதாவது, அத் தோழர் நாளெல்லாம் நோன்பு நோற்கிறார். இரவெல்லாம் இறை வணக்கத்தில் ஈடுபடுகிறார். எப்பொழுதும் இறை தியானத்திலே இருக்கிறார். இவர் எவருடனும் அதிகம் பேசுவதும் இல்லை என்று வள்ளல் நபியிடம் வாயாரப் பாராட்டினார்கள்.

இவற்றையெல்லாம் செவியுற்ற அண்ணல் நபி (ஸல்) அவர்கள் வாழ்த்துரை பாடியவர்களிடம் ஒரே ஒரு கேள்விதான் கேட்டார்கள். அவர் சாப்பாட்டுக்கு என்ன செய்கிறார் என்று.

அதற்கு அவர்கள் அவருடன் பிறந்த சகோதரர் ஒருவர் இருக்கிறார். இவருக்கும் சேர்த்து அந்தச் சகோதரர் தான் பாடுபட்டு உழைத்து பராமரிக்கிறார் என்றார்கள்.

அப்படியானால் அந்தச் சகோதரர்தான் இறைவனிடத்தில் இவரைவிட மேன்மையானவர் என்றுரைத்தார், உழைத்துண்ணும் இன்பத்தை உயர்வெனக் கருதிய உத்தம நபி (ஸல்) அவர்கள்.

எம்.சி.கலீல்- கல்முனை-05

## கவிதைப்போட்டி இல-103

### பரிசுக்குரிய கவிதை

### திரைகடல் திரவியம்

படைப்படகு புடைசூழ
கடல் வலயத்தடை மீறி
பறி நிறைய மீன் நிரப்ப
குறி தவறா வலை வீசி
எறிவலை மீட்கையிலே
சிக்கியதோ மனிதவுடல்.

திருமதி. உ. அழகையா-திருகோணமலை.

## இடமுள்ளவரை இடம்பிடித்துள்ள வியக்கவைத்த கவிதைகள்

### 'இரை தேடி'

கடல் வலயத்தடையோடு....
பசிக்கும் ஓர் தடையிருந்தால்;
புசிப்பதற்கு இரையை-நான்
கரை நீரில் ஏன் தேட?

ராஜன் சுமதி-நீர்கொழும்பு.

### உள்ளத்தின் உறுதி

ஊனக் காலுயர்த்தி
ஒரு காலை நிலம் பதித்து
அலைமோதும் கடலினிலே
வலை வீசும் மீனவனின்
உள்ளத்தில் உந்தி எழும்
உறுதியினைப் பாருமம்மா!

முஸ்தபா இஸ்ஸத்-ஏறாவூர்-01.

### பசிதீர்க்க!

சுற்றிவளைப்போடு
சோதனைகள் துன்புறுத்தல்
அத்தனையும் தாங்கிவந்து
கஞ்சிக்காய் வலைவீசி
குஞ்சுமீன் தேடுகிறேன்,
பிஞ்சுகளின் பசிதீர்க்க!

கனகசிங்கம் தர்சிக்கா-மட்டக்களப்பு.

### ஏற்றுக்கொள்

எல்லாம் இழந்தபின்
ஏன் இனிமேல் இந்தஉயிர்?
ஏற்றுக்கொள் ஆழியே
என்னுயிரை?

ஜி. முத்து-வெல்லம்பிட்டிய.

### கட்டுப்பாடு



கடலிலோ மீன் பிடிக்க
கட்டுப்பாடு...!
வீட்டிலோ உணவுக்கு
தட்டுப்பாடு..!
ஓடயிலாவது மீன் கிடைக்குமா?

எஸ். தயா-கந்தளாய்.

### கண்ணீர்

மீன்கள் அழுவது
தண்ணீருக்கு தெரியாது!
நாங்கள் அழுவது
யாருக்கும் தெரியாது!

மோகன்-மருதானை.

### ஏன் இந்த ஆசை?

கடல் குளிக்க
அவனுக்கு ஆசை.
காளையின் உடைமேல்
காற்றுக்கு ஆசை.
கால் இடறும்
அவன் உயிரில்
காலனுக்கும் ஆசை!

ஜெயந்தி ஜெய்சங்கர்-கொழும்பு-13.

### மாய்ந்திடுவேன்

வலை வீசி மீன் பிடிக்க
விலை பேசி விற்று விட
நிலையான சமாதானம்
இலையானால் இனியானே
வலையோடு பாய்ந்திடுவேன்
அலையோடு மாய்ந்திடுவேன்!

சுக்றா யூஸுப்-கொலன்னாவ.

### வி(ச)தியோ..?

கடல் வலயத்தடை
கதி கலங்க வைத்த போது;
கரையோரம் மீன்பிடிக்க
கை கொடுத்த
கை வலையும்
கை நழுவிப் போனதையா
கை யறுந்து போனேனையா!

ரி. ராஜேந்திரன்-கல்முனை.

### ஐயோ..!

வயிற்றுப் பிழைப்புக்கு
வைத்திருந்த வலையும்
கைதவறிப் போயிற்றே
கடலுக்குள்!

அ. குமணன்-பாண்டியூர்-01

### போதாதே....!

கடலன்னை மடிதனில் தடையானதாலே-ஆற்றங்
கரையோரம் வலைதனை வீசி
அடம் பிடித்த போதினிலும்-வருமானம்
அடுப் பெரியப் போதாதே..!

மஸ்மா ஹுசைன்-முள்ளிப்பொத்தானை.

## கவிதைப் போட்டி இல-106



**கவனியுங்கள்**

எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல் தபாலட்டையில் மட்டும் பதிவு செய்து அனுப்பி வையுங்கள். அனுப்ப வேண்டிய கடைசித் திகதி 24.06.1995

-முகவரி-

கவிதைப் போட்டி இல: 106
தினமுரசு வாரமலர்
த. பெ. இல-1772,
கொழும்பு.

# வாசகசாலை



முரசே! செவாலியே வரலாற்று நிகழ்வு பற்றி ஒரு சிறு துளி தந்தமைக்கு என் பல துளி நன்றிகள் உரித்தாகட்டும்.

அக்குறணை செல்வி. ரம்ஸானியா.

▫▫

முரசே நீ
முக்கனியிலும் முதுகனியாய்
முப்பாலிலும் மூலப்பாலாய்
மூவேந்தர் வளர்த்த
முத்தமிழில் முழங்குகிறாய்
என்றென்றும் நீ ஓங்கி முழங்க
என் நல்வாழ்த்துக்கள்!

திருமதி. ம. துளசிமணி-அக்கரைப்பற்று-07

▫▫

உண்மை சுமந்து
உலகெங்கும் சிறகடித்து
உள்ளம் மகிழ வைக்கும்
என் இனிய தின முரசே!
யெஸ், உனது ஆக்கங்கள் அனைத்தும்
வொன்டர்புல்!
கீப் இட் அப்!

Farzan H. shahul
208 Nagle Ave. #2B
New York, N.Y. 10034-U.S.A.

பர்ஸான் எச். சாஹுல் - நியுயோர்க்

▫▫

செவாலியே

வரலாற்று நிகழ்வில் பராசக்தி மன்னன் "செவாலியே" அவர்களை உலகம் வியக்கத்தக்க வகையில் பிரசுரித்தமைக்கும், இனிவரும் முரசில் முன்னணி கலைஞர்களையும் பிரசுரிக்கட்டும் என்று முரசுக்கு வாழ்த்துக் கூறுகின்றேன்.

கமல் நேசி, வீரசிங்கம் ஸ்ரீதரன்-
மல்லிகைத் தீவு

▫▫

அன்பின் முரசே!
நீ பல தூரம் தாண்டி வந்து
எத்தனையோ உள்ளங்களைக் கொள்ளை கொண்டுள்ளாய்!

அதில், என் இதயத்தையும் பறித்து விட்டாய். முரசே!

உன் ஆக்கங்கள் அனைத்திற்கும் நிகரேது?

குறிப்பாக பாப்பா முரசு, தேன் கிண்ணம், மகாபாரதம் அனைத்தும் தேனாய் பாய்கின்றன.

அ. வெலின்ரன்-தோட்ட வெளி

▫▫

எம். சுரேசின் சிறு கதைகள் நன்றாக உள்ளன. ஆனால் ஏதோவொன்று புரிந்தும் புரியாமலும் உள்ளது. ஒரு வேளை அனுபவத்தைத் தான் எழுதுகிறாரோ! பரவா யில்லை. தொடர்ந்து எதிர் பார்க்கிறோம்.

ஜெயசித்ரா- மோதரை

▫▫

நலம் வாழ என்னாளும் என் வாழ்த்துக்கள்
தமிழ் கூறும் பல்லாண்டு என் வார்த்தைகள்
இதயங்கள் உன்னாலே பயன் பெறுமே
இலங்கைக்கு தேவைதான் உன் சேவை.

செல்வி. எஸ். அனோஜா-களுவாஞ்சிக்குடி.

▫▫

எனதருமை முரசே,

நீ வாரா வாரம் சுமந்து வரும் அனைத்து அம்சங்களும் சுப்பர். எம்மனதை நெகிழவைக்கும் தாய் நாவல் தொடரும், சிந்தை கவரும் சினி விசிட்டும், துருவி தூள் பறக்க வைக்கும் எக்ஸ்ரே ரிப்போர்ட்டும், அரசியல் அலசலும் எம்மை அசத்துகின்றன.

எ.பி.எஸ். ரமேஷ்-பசறை

இலங்கை மட்டுமின்றி ஆசியா கண்டம் மற்றும் உலகம் பூராவும் நம்பிக்கையாகவும் நாணய மாகவும் வாரம் தோறும் நற் செய்திகளை குவியலாக குவியலாக தரும் தினமுரசுக்கு எனது வாழ்த் துக்கள் ஆயிரம் ஆயிரம்.

THAWZEER KHAN, S.B. GURUP CAMP,
AL. MADINA, K.S.A.

www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்

# "கடற்புலிகளுக்கும், விமான எதிர்ப்புப் படைக்கும் ஆள் தேவை!"

# பாடசாலைகளில் புலிகள் பரவலான ஆள் திரட்டல்!

## தனியார் கல்வி நிறுவனங்களுக்கு மூடு விழா

**வடபகுதியில் பரவலான ஆள்திரட்டல் நடவடிக்கையைப் புலிகள் முடுக்கி விட்டுள்ளனர். யாழ் குடாநாட்டை இராணுவத்தின் கையில் விழாமல் தடுக்க உடனடியாக இயக்கத்தில் சேரு மாறு அவசர வேண்டுகோள் விடுத்து பிரசுரங்களும் வெளியிடப்பட்டுள்ளன. பாடசாலைகளிலும், தனியார் கல்வி நிறுவனங்களிலும் புலிகள் போர்க்கால பிரசாரம் செய்து வருகின்றனர். பல தனியார் கல்வி நிறுவனங்கள் மூடப்பட்டுள்ளன.**

(நமது விஷேட நிருபர்)

### பாடசாலைகளில் பிரசாரம்

வடபகுதியில் குறிப்பாக யாழ் குடாநாட்டில் ஆள்திரட்டல் நடவடிக்கைகளை புலிகள் முடுக்கி விட்டுள்ளனர்

பாடசாலைகள் நடக்கும் நேரத்தில் உள்ளே செல்லும் புலிகள் அமைப்பினர் தம்மோடு உடனடியாக வந்து சேரும்படி மாணவர்களுக்கு அழைப்பு விடுக்கின்றனர்.

வீழ்த்தப்பட்ட 'அவ்ரோ'விமானங்களது உடைந்த பாகங்களில் சிலவற்றை கையோடு கொண்டு சென்று மாணவர்களிடம் காண்பிக்கிறார்கள்.

"உங்கள் அம்மாவோ, அப்பாவோ நாளை மீண்டும் விமானத்தாக்குதலில் கொல்லப்படலாம். அதனைக் காண விரும்புகிறீர்களா? விரும்பவில்லையானால் எமது விமான எதிர்ப்புப் படையில் சேருங்கள்" என்று புலிகள் அமைப்பினரால் கூறப் படுகிறது.

இயக்கத்தில் சேருவதற்கு முன்வரும் மாணவரோ மாணவியோ உடனடியாக புலிகளின் வாகனம் ஒன்றில் ஏற்றி அனுப்பப்படுகிறார்.

### குறைந்தது பத்துப்பேர்

இது தவிர, யாழ் குடாநாட்டில் உள்ள தனியார் கல்வி நிலையங்களுக்கு சென்ற புலிகள் அமைப்பினர், ஒவ்வொரு தனியார் கல்வி நிறுவனமும் குறைந்தது பத்துப் பேரையாவது தமக்குத் தரவேண்டும் என்று கூறிவிட்டுச் சென்றனராம்.

இதனையடுத்து யாழ் குடாநாட்டில் உள்ள பல தனியார் கல்வி நிறுவனங்கள் மூடப்பட்டு வருகின்றன.

போருக்கு ஆள்திரட்டும் நடவடிக்கைக்காக தமிழீழ விடுதலைப் புலிகளின் வெளியீட்டு வாரியத்தால் இரண்டு பிரசுரங்கள் வெளியிடப்பட்டுள்ளன.

"போர் செய்யத் துணிந்த மக்கள்தான் சுதந்திரமாக வாழ்வார்கள்" என்னும் தலைப்போடு ஒரு பிரசுரமும், "பலம்தான் வாழ்வு', கடற்புலிகளுக்கும் விமான எதிர்ப்பு படைப்பிரிவுக்கும் ஆள் தேவை." என்ற தலைப்போடு மற்றொரு பிரசுரமும் வெளியிடப்பட்டுள்ளன.

இராணுவத்தை எதிர்த்து வெல்ல முடியும் என்னும் நம்பிக்கையை உருவாக்கும் விதமான கருத்தோவியங்களும் (கார்ட்டூன்) இரு பிரசுரங்களிலும் இடம்பெற்றுள்ளன.

### பிரசுரத்தில் விளக்கம்

போர் செய்யத் துணிந்த மக்கள்தான் வாழ்வார்கள் என்னும் பிரசுரத்தில் பாடசாலை மாணவர்களுக்கு பின்வருமாறு கூறப் பட்டுள்ளது:

"பாடசாலையிலோ வீடுகளிலோ இருந்து ஒரு சண்டையைக் கற்பனை செய்து பார்க்கும்போது, போர்க்களம் என்பது கொலைக்களத்தைப் போலவே தென்படும்.

இல்லாததை எல்லாம் இருப்பதாகக் கற்பனை செய்துகொண்டு பார்த்தால், சண்டை என்பது பயங்கரமானதாகவே தோன்றும்.

எறிகணை விழும், விமானம் குண்டு போடும், டாங்கிகள் வரும், ஆமி வரும், அதற்குள் நின்று என்ன செய்வது என்று கற்பனை செய்து பார்த்தால் சண்டை என்பது கடினமாகவே தெரியும்.

'சண்டையின்போது ஆமிக்காரர் துணிச்சலுடன் துப்பாக்கியைப் பிடித்தபடி வருவார்கள்' என்று எமது இளைஞர்களும் யுவதிகளும் பொதுவாக நம்புகின்றனர்.

உண்மை அப்படி அல்ல. எதிரியை விரட்டி அடிப்பதும், பாய்ந்து பாய்ந்து அவர்களது ஆயுதங்களைப் பொறுக்குவதும் மகிழ்ச்சிக்குரிய விடயம். நீங்களும் இயக்கத்தில் இணைந்த பின்னர்தான் இதனை உணர்வீர்கள்.

### வடபகுதி முகாம்களை தாக்கலாம்.

போர் செய்யத் துணிந்த நாடு எதுவோ அதுதான் சுதந்திரமாக இருக்கும். போர் செய்யத் துணிந்த மக்கள் எங்கிருக்கிறார்களோ அவர்கள்தான் பாதுகாப்பாக, மானத்துடன் வாழமுடியும்.

சிறீலங்கா படையின் விமானங்களும், கடற் கப்பல்களும் இல்லாத இந்த நேரத்தில் நீங்களும் இயக்கத்தில் இணைந்தால் வடபுல முகாம்களை துடைத்தெறிந்து விடலாம்.

வாருங்கள், உங்களுக்கு அருகாமையில் உள்ள வட்ட, கோட்ட, மாவட்ட செயலகங்களில் சென்று இயக்கத்தில் சேர்ந்து கொள்ளுங்கள். புலிகளின் தாகம் தமிழீழ தாயகம்."

இவ்வாறு அந்தப் பிரசுரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

---

# ஐயாயிரம் இளைஞர்களுக்கு அவசர அழைப்பு!

## வட பகுதி முகாம்களைத் தாக்க திட்டம்!

இலங்கை விமானப்படையும் கடற்படையும் நவீனமாகும்வரை யாழ் குடாநாட்டில் பாரிய தாக்குதல் நடத்த அரசால் முடியாது. அவ்வாறு நவீனப்படுத்த பல மாதங்கள் எடுக்கும். அதற்கிடையில் வடபகுதியில் இருந்து படைகளை வெளியேற்ற வேண்டும்.

இவ்வாறு புலிகள் விடுத்துள்ள 'பலம்தான் வாழ்வு' என்னும் பிரசுரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் அப் பிரசுரத்தில் தெரிவிக்கப் பட்டுள்ளதாவது:

சிறீலங்காவில் 10 ஆயிரம் ஆட்களை படைக்கு சேர்க்க முற்சிகள் நடக்கின்றன. அவர்களை நாங்கள் முந்திக்கொள்ள வேண்டும்.

5 ஆயிரம் இளைஞர்கள் விரைவாகப் புலிகள் இயக்கத்தில் இணைந்தால் வடபுலத்திலுள்ள படை முகாம்களை முற்றாக அழித்துவிடலாம்.

இந்த நேரத்தில் நீங்கள் இயக்கத்தில் இணைந்தால் எமது விடுதலைப் போராட்டம் அபார வெற்றியைப் பெறும்.

இந்த அவசர அழைப்பை நீங்கள் நிச்சயம் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

ஆயிரம் வருடங்களுக்கு ஒருமுறைதான் இத்தகைய ஒரு அரிய வாய்ப்புக் கிடைக்கும்.

வடபகுதி மீதான போரை எப்படி நடத்துவது என்று சிங்கள அரசு குழம்பியபடி உள்ளது.

அதேவேளை வடபகுதியில் நிலை கொண்டுள்ள தனது 30 ஆயிரம் துருப்புக்களை எவ்விதம் பாதுகாப்பது என்றும் யோசிக்கிறது.

படைத்துறை தலைமையகத்தில் நடுநிசி தாண்டியும் விளக்குகள் எரிகின்றனவாம். முடிவு எதுவாக இருந்தாலும் அதை நடைமுறைப்படுத்த சிறீலங்கா அரசுக்கு காலம் எடுக்கும். அந்தக் கால அவகாசத்தை நாம் கொடுக்கவே கூடாது.

இவ்வாறு புலிகள் தமது பிரசுரத்தில் தெரிவித் துள்ளனர்.



விமான எதிர்ப்புப் படைப்பிரிவுக்கு ஆள் திரட்ட புலிகள் வெளியிட்ட பிரசுரத்தில் காணப்படும் கார்ட்டூன்.

---

# வான் மழைக்கு முன்னர் போர் மழை.

## படைகள் திட்டம் என்று புலிகள் தெரிவிப்பு

கடந்த 08.06.95 அன்று விடுதலைப் புலிகளின் அரசியல்பிரிவு அவசர அறிக்கையொன்றை யாழ்ப்பாணத்தில் வெளியிட்டுள்ளது.

வடபகுதியில் மழைக்காலம் வருவதற்கு முன்னர் பாரிய நடவடிக்கை ஒன்றை மேற்கொள்ளப் படைகள் திட்டமிட்டுள்ளதாக புலிகள் தெரிவித்துள்ளனர்.

வன்னிப் பிரதேசத்தில், அல்லது யாழ் குடாநாட்டில் அல்லது இரண்டும் ஒரே நேரத்தில் நடாத்தப்படக்கூடிய தாக்குதல் திட்டமொன்றை அரசு தயாரித்துள்ளது என்றும் புலிகள் கூறியுள்ளனர்.

யாழ் குடாநாட்டில் எதிர்வரும் அக்டோபர் மாதத்தில் மழைக்காலம் ஆரம்பித்துவிடும் என்பது குறிப்பிடத்தக்கது.

மழைக்காலத்துக்கு முன்னர் தாக்குதல் நடத்தப்படாவிட்டால், வடக்கில் உள்ள படை முகாம்களை மழைக்காலத்தில் புலிகள் தாக்கலாம் என்று படைத்தரப்பு நினைப்பதாகத் தெரிகிறது.

மழைக்காலம் கெரில்லாத்தாக்குதலுக்கு வசதியானகாலம் என்பதும் குறிப்பிடத்தக்கது.

தற்போது வடபகுதியில் படைமுகாம்களில் இருந்து படைகள் முன்னேறிச் செல்வதை தடுத்து நிறுத்துவதும், படைமுகாம்களுக்கான விநியோகத்தை கட்டுப்படுத்தி வைத்திருப்பதுமே புலிகளது நடவடிக்கையாக அமைந்துள்ளது.

மழைக்காலம் வந்த பின்னர் முகாம்களுக்குள் புகுந்து தாக்குதல் நடத்த புலிகள் முனையலாம் என்றும், அதற்காகவே அவர்கள் காத்திருக்கிறார்கள் என்றும் இராணுவ ஆய்வாளர்கள் கருதுகின்றார்கள்.

புலிகளின் திட்டத்தை ஊகித்தே தாம் முந்திக்கொள்ள படைத்தரப்பு நினைப்பதாக நம்பப்படுகிறது.

ஆயுத தளபாடங்கள் வந்து சேரும்வரை படையினர் காத்திருப்பதாகவும், தாக்குதல் திட்டம் ஏற்கனவே தயார் என்றும் ஒரு தகவல் கூறுகிறது.

வவுனியாவில் தாக்குதலுக்கான ஏற்பாடுகளில் படையினர் ஈடுபட்டுள்ளதை அவதானிக்க முடிகிறது.

இதேவேளை புலிகளின் அரசியல்பிரிவு விடுத்துள்ள அறிக்கையிலும் இளைஞர்களும், இளம் பெண்களும் தமது ஆட்சேர்ப்பு மையத்துடன் உடன் தொடர்புகொண்டு தமது பெயர்களைப் பதிவு செய்துகொள்ளுமாறு அறிவித்துள்ளது.

கல்விக்கு நாம் எதிரானவர்கள் அல்ல, ஆனால், கல்வியா போராட்டமா என்று மாணவர்கள் தெரிவுசெய்து கொள்வதை நாம் தடுக்க மாட்டோம் என்று புலிகளின் அரசியல் பிரிவு தெரிவித்துள்ளது.

---

# கிழக்கில் இராணுவ முகாம்கள் குறைப்பு!

## மறுபடியும் அகதிகளாகும் மீளக் குடியேறியோர்.

(ஏறாவூர் நிருபர்)

கிழக்கு மாகாணத்தில் புலிகளின் தொடர் நடவடிக்கைகளால் இராணுவ முகாம்களின் எண்ணிக்கையை படைத்தலைமை குறைத்து வருகிறது.

பல முகாம்கள் வாபஸ் பெறப்பட்டு வருகின்றன. கடந்த வார முரசில் பயணிகளை சிரமத்துக்கு உள்ளாக்கும் தம்மானம்வெளி இராணுவ முகாம் பற்றி குறிப்பிடப்பட்டிருந்தது.

தற்போது தம்மானம் வெளி இராணுவ முகாம் அகற்றப் பட்டுள்ளது.

புலிகளால் அடிக்கடி தாக்குதலுக்கு உள்ளான முகாம்களில் ஒன்று தம்மானம் வெளி இராணுவமுகாமாகும்.

13.06.95 அன்று காலை செங்கலடி-பதுளை வீதியில் படையினர்மீது புலிகள் நடத்திய தாக்குதலை அடுத்து கொம்மாதுறை இராணுவ முகாமில் இருந்து ஷெல் தாக்குதல்கள் நடத்தப்பட்டன.

செங்கலடி-பதுளை வீதியில் படைகளுக்கும் புலிகளுக்கும் இடையில் நடைபெற்ற மோதலில் பொதுமகன் ஒருவரும் பலியானார். ஐஸ்பழ வியாபாரியான ரகுமான் (வயது 22) என்பவரே துப்பாக்கிச் சூடு காரணமாகப் பலியானவராவார்.

செங்கலடி பொலிஸ் காவலரண் அருகே கைக்குண்டு ஒன்றும் கண்டெடுக்கப்பட்டது. காவலரணை நோக்கிப் புலிகள் வீசிய கைக்குண்டே அவ்வாறு கிடந்தது என்று கூறப்படுகிறது.

இதேவேளை புலிகள் வைத்த மிதிவெடிகளில் சிக்கி கடந்தவாரமும் கிழக்கில் படையினர் சிலர் கால்களை இழந்துள்ளனர்.

புலிகள் தாக்குதல் நடத்தினால் பொது மக்கள் மீதும் பதிலடி நடத்தும் நடவடிக்கைகளை கிழக்கில் படையினர் கைவிட வில்லை.

இதேவேளை, மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களில் பாரிய தேடுதல் நடவடிக்கைக்கு திட்டமிடப்பட்டுள்ளதாகவும் கூறப் படுகிறது.

தற்போது ஏற்பட்டுள்ள நிலை காரணமாக கிழக்கில் மீளக்குடியேறிய அகதிகள் பலர் மீண்டும் அகதிகளாக மாறியுள்ளனர்.

---

# ஜே.ஆர். மீது புலிகளின் குறியாம்!

## கைதானவர் வெளியிட்ட தகவல்

முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர். ஜயவர்த்தனாவைக் கொலை செய்வதற்கு விடுதலைப் புலிகள் திட்டமிட்டிருப்பதாக பாதுகாப்பு வட்டாரங்களில் செய்தி அடிபடுகிறது. இதற்காக ஐவர் கொண்ட குழு ஒன்று ஜயவர்த்தனாவை கொழும்பில் சுட்டுக் கொல்லுவதற்கென பிரத்தியேகப் பணியினை ஏற்றிருப்பதாக அறியப்படுகிறது.

சிரேஷ்ட பொலிஸ் அதிகாரியான ஆர்.என்.வீரக்கோனின் ஏற்பாட்டின் பேரில் ஜே.ஆரின் பாதுகாப்பு மும்மடங்காக அதிகரிக்கப்பட்டுள்ளதாகத் தெரிகிறது.

கடந்த மார்ச் 5ம் திகதி புலிப்படையின் உளவுப் பிரிவைச் சேர்ந்தவர் என்று சந்தேகிக்கப்படும் ரூபன் அல்லது மேனன் என்று அழைக்கப்படும் சிவப்பிரகாசம் சொரூபன் என்பவர் கைது செய்யப்பட்டார். அவரிடம் மத்திய புலனாய்வுப் பிரிவினர் பெற்ற தகவல்களிலிருந்தே ஜே.ஆர்.கொலைத் திட்டம் தொடர்பான செய்தி கிடைத்திருக்கிறது.

கொழும்பு-வார்ட் பிளேசில் உள்ள ஜயவர்த்தனாவின் வாசஸ்தலத்தின் புகைப் படங்களை சொரூபன் எடுத்து யாழ்ப் பாணத்துக்கு அனுப்பிவைத்திருப்பதை ஒப்புக் கொண்டுள்ளார் என்று பாதுகாப்பு வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன. கொழும்பு பத்திரிகை ஒன்று இச் செய்தியை வெளியிட்டுள்ளது.

---

# கொழும்புக் குண்டு வெடிப்புக்கள்!

## புலிகள் வெளியிட்டுள்ள கருத்துக்கள்!

வடக்கு-கிழக்கில் பாதுகாப்புப் படைகளின் நடவடிக்கைகள் தீவிரமானால், வடக்கு-கிழக்குக்கு வெளியே பரவலாக வெடிகுண்டுத் தாக்குதல்கள் நடைபெறும் என்பதற்கான முன் அறிவிப்பாகவே கொழும்பில் குண்டுகள் வைக்கப்பட்டதாக தெரியவருகிறது.

பாரிய குண்டுவெடிப்புக்கள் நடத்தப்பட்டால் பொதுமக்களும் பலியாகக்கூடும். வெளியுலகில் புலிகளுக்கு அது கெட்ட பெயரை ஏற்படுத்தும். எனவேதான் எச்சரிக்கை செய்வதை மட்டுமே நோக்கமாகக் கொண்ட குண்டுவெடிப்புக்கள் புலிகளால் நடத்தப்படுவதாக நம்பப்படுகிறது.

கொழும்பில் நடைபெற்ற குண்டு வெடிப்புக்கள் குறித்து, யாழ்ப்பாணத்தில் புலிகள் செய்திக் குறிப்பொன்றை வெளியிட்டுள்ளனர். புலிகளது நோக்கம் பற்றி அச்செய்திக்குறிப்பு சூசகமாக தெரிவித்துள்ளதாவது;

"கொழும்பில் தொடர்ச்சியாக வெடித்து வரும் குண்டுகளினால் அரச நிர்வாகத்தில் பெரும் பதட்டமும், குழப்பமும் ஏற்பட்டுள்ளது.

இக் குண்டுவெடிப்புக்கள் பாரிய சேதங்களை ஏற்படுத்தாவிட்டாலும் தேசிய ரீதியாக சிறீலங்கா அரசுக்கு பல நெருக்கடிகளை ஏற்படுத்தியுள்ளன.

தென்னிலங்கையின் பொருளாதார நிலை கேள்விக்குள்ளாகி உள்ளது."

இவ்வாறு அச்செய்திக் குறிப்பு தெரிவிக்கிறது.

வடக்கு-கிழக்குக்கு வெளியே இராணுவ கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளில் அரசின் பெரும்பகுதியான கவனம் குவிந்திருக்கும் வகையில் புலிகளது நடவடிக்கைகள் தொடரலாம் என்று கருதப்படுகிறது.

---

# திருமலையில் கொலை.

திருக்கோணமலையில் புலிகள் அமைப்பிலிருந்து விலகிவந்து படையினருக்கு உதவியாக செயற்பட்டுவரும் இளைஞர்கள் சிலர் புலிகளால் கொல்லப்பட்டு வருகின்றனர்.

கடந்த 10.06.95 அன்று பிற்பகல் இரண்டுமணியளவில் தமிழ் இளைஞர் ஒருவர் புலிகளால் சுட்டுக்கொல்லப்பட்டார்.

திருக்கோணமலை சம்பூரைச் சேர்ந்த நாகலிங்கம் கணேசலிங்கம் (வயது 22) என்பவரே திருமலை சிவன் கோவிலடியில் வைத்து சுட்டுக் கொல்லப்பட்டார். இவரும் முன்பு புலிகள் அமைப்பில் இருந்தவர். பின்னர் படையினரோடு செயற்பட்டவர்.

சன நடமாட்டம் அதிகமுள்ள சிவன் கோவில் பகுதியில் பாடசாலை மாணவர்களைப் போல உடையணிந்து வந்த புலிகள் அமைப்பினரே அவரைச் சுட்டுக் கொன்றனர்.

இவரது மரண விசாரணையை நீதவான் மு.கோ.செல்வராசா நடத்தினார்.

---

# மட்டு டிப்போ பஸ்ஸிற்கு பதுளையில் அனுமதியில்லை?

## குண்டும் கொண்டுவரும் என்று சந்தேகம்?

மட்டக்களப்பு இ.போ.ச.சாலையிலிருந்து பதுளைக்குச் செல்லும் பஸ் பதுளை பஸ் டிப்போவில் இராத் தங்கலுக்காகத் தரித்து நின்று காலையில் புறப்பட அனுமதிக்கப்படுவதில்லையாம். பஸ்ஸில் குண்டுகள் இருந்து வெடிக்கும் என்பதால் கடந்த 5 வருடங்களாக அவர்கள் அங்கு தமது பஸ்ஸை அனுமதிப்பதில்லை என்று மட்டு. இ.போ.ச.சாலையின் செயற்பாட்டு முகாமையாளர் (ஒப்பரேசன் மனேஜர்) திரு.சீ.எஸ்.வடிவேல் 'முரசு'நிருபருக்குத் தெரிவித்தார்.

இதனால் மட்டக்களப்பில் இருந்து பிபிலை மாத்திரம் சென்று திரும்பக் கூடியதாக ஒரு பஸ் சேவையிலீடுபட்டது. தற்சமயம் அந்த சேவையும் நிறுத்தப்பட்டு விட்டது. பிபிலைக்கு மட்டக்களப்பு பஸ்வரும் என எதிர்பார்த்து பதுளையிலிருந்து வரும் பயணிகள் ஏமாற்றத்துடன் திரும்பி பதுளைக்குச் செல்கின்றனர்.

கடந்த வன்செயல்களுக்கு முன் 14 பஸ்கள் மட்டக்களப்புக்கு பதுளை ஊடாகச் சேவைகளை நடாத்தின. தற்சமயம் ஒரேயொரு தனியார் மினிபஸ் ஒன்று விட்டொரு நாள் பதுளையிலிருந்து மட்டக்களப்புக்கு இரண்டு மடங்கு கட்டணங்களுடன் சேவையிலீடுபட்டுள்ளது.

பதுளைக்கான பஸ் சேவையில்லாததால் பசறை, லுணுகலை, பிபிலை, பதியத்தலாவ, மாஹறாஓயா, பெரிய புல்லுமலை போன்ற ஊர்களிலுள்ள மக்கள் மட்டக்களப்புக்கு சென்று வர முடியாதுள்ளது. அவசர மேற்பட்டால் இரண்டு நாள் பயணம் மேற்கொண்டு எங்காவது தங்கி நின்று அம்பாறை அல்லது கதுறுவெல வழியாக-பல சிரமங்களுக்கு மத்தியில்தான் மட்டக்களப்பு வரவேண்டியுள்ளதாகப் பயணிகள் தெரிவிக்கிறார்கள்.

# கலவரம் ஏற்படுத்தும் முயற்சி கண்டியில் பிசுபிசுப்பு!
# இரத்தம் என்று கூறி சாயத்தை ஊற்றினார்கள்!

(கண்டி நிருபர்)

காலி நகரில் இடம்பெற்ற சம்பவத்தைப் போன்றே கண்டி நகரிலும் சில விஷமிகள் அசம்பாவிதங்களை ஏற்படுத்தி இனக்கலவரத்தை உருவாக்க எடுத்த முயற்சிகளும் பிசுபிசுத்துவிட்டன.

கண்டியில் "சிங்கள பௌத்த சங்வி தானய" என்ற அமைப்பின் பேரில் அதன் பெயரைக் கூறிக்கொண்டு கண்டி நகரில் கடந்த கனிக்கிழமை 3ம் திகதி, திம்புலாகல நாயக்க தேரரின் மரணம் தொடர்பான இறுதிக் கிரியை தினத்தன்று கடைகளை மூடுமாறு கேட்டுக்கொண்டதன் மூலம் இனக் கலவரத்தைத் தூண்டத் துடித்தவர்கள் மண் கௌவியதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இதே தினத்தன்று கண்டி நகரில் உள்ள பிரபல முஸ்லிம் பள்ளிவாசல் ஒன்றுக்குள் ஜன்னல் ஊடாக "நாம் இரத்தத்தை ஊற்றுகிறோம்" எனக் கூறிக் கொண்டு ஒரு கும்பல் சிவப்புச் சாயத்தை உள்ளே வீசியது. முஸ்லிம்களை ஆத்திரம் கொள்ளச் செய்யும் சம்பவம் நீண்டகாலத்திற்குப் பின்னர் இடம் பெற்றமையானது வேண்டுமென்றே குழப்பங்களை ஏற்படுத்த எடுத்த நட்வடிக்கையாகவே முஸ்லிம்கள் கருதுகின்றனர்.

விஷமிகளின் செயலுக்குப் பலியாகி விடக்கூடாதென்று கருதிய பள்ளி நிருவாகிகள் இதனைப் பொலிஸாரின் கவனத்திற்கு கொண்டு வந்தனர். இனவெறியர்களைக் கண்டுபிடிக்க எடுத்த நடவடிக்கை குறித்து திருப்தி தெரிவிக்கப்படுகிறது.

பன்றி இறைச்சியை வீசுகிறோம் எனக்கூறி மாட்டின் தோலின் சிறு பகுதியை வாசலில் போட்டு விட்டு மேலும் கோபத்தை மூட்டவும் முயற்சி செய்யப்பட்டது. இவ்வாறான செயல்களை பெரிது படுத்தாத நிருவாகிகள், "இதன் பின்னர்தான் நாம் விழிப்பாக இருக்க வேண்டு"மெனக் கூறினர்.

இத்தகைய சம்பவங்கள் தொடர்பாக கண்டியிலும் இப்போது கண்காணிப்புக் குழுக்கள் சகல மாவட்டங்களிலும் ஏற்படுத்தப்படுகின்றன. மத்திய பிராந்திய பிரதி பொலிஸ் மா அதிபர் திரு.ஏ.ஏ.சமரசிங்க இவ்விடயத்தில் மிக்க உன்னிப்பாக இருந்து வருகிறார்.

# அவர்களின் பார்வையில்




தமிழக சஞ்சிகை 'குமுதம்' வெளியிட்டிருந்த கார்டூன்

# உள்ளூராட்சி ஆணையாளரின் மந்தமான செயற்பாடு
# வடக்கு-கிழக்கு மகாண ஊழியர்கள் திண்டாட்டம்!

(திருமலை நிருபர்)

வடக்கு-கிழக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளரின் நிர்வாகச் செயற்பாடு காரணமாகத் திணைக்கள ஊழியர்கள் பாதிக்கப்படுவதாக அறியவருகின்றது.

குற்றம் செய்தார் எனத் தீர்மானிக்கப்பட்டு களஞ்சியப் பொறுப்பாளர் ஒருவருக்கு உள்ளூராட்சி ஆணையாளரால் வழங்கப்பட்ட இடமாற்றமும் சம்பள ஏற்றமின்மையும் இரண்டு விருடங்களின் பின்னர் அவராலேயே திருத்தப் பட்டுள்ளது.

ஆரம்ப விசாரணை சரியாக நடத்தப் படவில்லை, காணப்பட்ட குற்றச்சாட்டு நிரூபிக்கப்படவில்லை. தண்டனை உத்தரவு தவறான வரியில் கையொப்பம் பெறப் பட்டுள்ளது. 09.12.93ல் வழங்கப்பட்ட தண்டனையை அனுபவித்த பிறகே களஞ்சியப் பொறுப்பாளருக்கு 18.02.95ல் தண்டனை நீக்கக் கடிதம் வழங்கப்பட்டுள்ளது.

இதேபோல் 27 வருடங்கள் கடமை யாற்றிய நூலகர் ஒருவரும் இதே அதிகாரியின் அசமந்தம் காரணமாக சேவையில் உறுதிப் படுத்தப் படாமல் இருக்கிறார்.

மட்டக்களப்பில் பணியாற்றும் இந்நூலகர் தான் ஓய்வூதியம் எதுவுமின்றி ஓய்வு பெற வேண்டி வரப் போகிறதே என அங்கலாய்க்கிறார்.

முறைப்படி தேர்வு நடத்தப்பட்டு 1991.01.01 ல் நியமனமான 26 எழுதுவினைஞர்கள் சேவையில் நிரந்தரமாக்கப் படாமல் இருக்கிறார்கள். இவர்கள் அனைவரும் சிற்றூழியர்களாக இருந்து பதவி உயர்வு பெற்றவர்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது.

வட-கிழக்கு மாகாணத்துக்குப் பொறுப்பாக இருக்கும் ஆணையாளர் திரு.க.சபாவதிப்பிள்ளையின் நடவடிக்கைகள் காரணமாக உள்ளூராட்சி சேவை ஊழியர்கள் பெரிதும் விரக்தியடைந்து காணப்படுகின்றனர்.

## திருக்கதவம் திறந்தது.

13.05.95 சனிக்கிழமை ஏற்பட்ட அசம்பாவிதங்களினால் பொத்துவில் கிராமத்து ஆலையடி பிள்ளையார் ஆலயம் பூஜைகள் இல்லாமல் மூடப்பட்டு மீண்டும் 25ம் திகதி வியாழக்கிழமை சிரமதானம் செய்யப்பட்டது. பொத்துவில் இந்துசமய மக்களால் 26ம் திகதி வெள்ளிக்கிழமை பிராயச்சித்த அபிஷேகமும் நடைபெற்று விசேட பூஜையுடன் கோயில் திறக்கப்பட்டு உள்ளது.

ஆலய நிர்வாகஸ்தர்களும் மற்றும் பிரதமகுரு ஸ்ரீ தே.வைத்தீஸ்வர சிவச்சாரியார் அவர்களும் இச்சமயப் பணிக்கு முன்னின்றார்கள்.

## வைரவிழாக் கல்லூரி

கண்டி கலஹா தமிழ் மத்திய கல்லூரி 1935ல் ஆரம்பிக்கப்பட்டு இவ்வருடம் அறுபது ஆண்டு நிறைவு செய்துள்ளமையை நினைவுகூரு முகமாக இவ்வித்தியாலய அதிபர் திரு.எம்.எம். சுப்பிரமணியம் தலைமையில் ஆசிரியர்கள், மாணவர்கள், பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினதும் பழைய மாணவர் சங்கத்தினதும் ஒத்துழைப்புடன் வைரவிழாவைக் கொண்டாடுகின்றார்கள். வைரவிழாவை முன்னிட்டு வைரவிழா சிறப்புமலர் ஒன்றினையும் வெளியிடுவதற்குத் தீர்மானித்துள்ளார்கள். வைரவிழாவின் இறுதி நிகழ்ச்சிகள் செப்டம்பர் மாத இறுதியில் நடைபெறவுள்ளன.

# புகார் பெட்டி




## அற்புத மலையாள மாந்திரீகம்

மலையாள மாந்தீக ஆவி உச்சாட்டங்களைக் கொண்டு வியாபாரத்தில் செல்வ விருத்தியா? அன்னியோர் நட்பா? வாழ்வில் நிந்திப்பா? வறுமையினால் கிலேச மனப்பான்மையா? பொன் பொருள் கையில் தங்கவில்லையா? பொறாமையினால் எதிர் நீச்சலா? சரியே வராது என முடிவெடுத்த தீரா ஆஸ்மாவா? தீரா நோயா, அல்லது தீரா மர்மநோயா, மனநோயா, பேயா, பில்லியா சூனியமா?

எவையென அச்சொட்டாக தெரிந்து அதற்கேற்ப நிவர்த்தி பெற்றவர்கள் எத்தனை எத்தனையோ?

இனி இல்லற வாழ்வு சிறப்பின்மையா?

கணவன் மனைவி பிணக்கா? காதல் தோல்வியா? காதலில் பிரச்சனையா? சவால் விடும் காதலா? விரும்பியவரை விரும்பியவாறு திருமணம் செய்விக்க வேண்டுமா? திருமணங்கள் கைகூடுவதில்லையா? அல்லது திருமணம் தடைக்கான திட்டவட்டமாக பரிகாரம் தேவையா? இனி கை கால் அசதியா? கையில் பணம் தங்கவில்லையா? கல்வி ஞான கவசமா, மகாலக்ஷமி வாசம் செய்வதற்கான வலம்புரி சங்கு, நவரத்தினம், இத்துடன் தங்கம் கலந்த பெரிய அளவிலான மகாலக்ஷமி இயந்திரம் தேவையா? ஞான திருஸ்டியில் ஜனன ஜன்ம கேள்வி பதில் தேவையா? காண்ட சாஸ்திர அடிப்படையில் ஆயுள் பூராகவும் புத்தக வடிவில் ஜாதகம் கணித்து அனுப்ப உள்நாட்டவரோ வெளிநாட்டவரோ ரூபா 700.00 அனுப்பினால் போதுமானது.

எம்மாதமும் என்னை 20 முதல் மாதக்கடைசிவரை கொழும்பு இல்லத்தில் சந்திக்கலாம். வெளிநாட்டு ஆடர்கள் உடனுக்குடன் கவனிக்கப்படும்.

தேவைகளுக்கு—

மலையாள மாந்திரிக சக்கரவர்த்தி பி.கே.சாமி (J.D.G.A.N.)
P.K.SAAMY ASSOCIATE (PVT) LTD
162, கொட்டாஞ்சேனைவீதி- கொழும்பு 13
T.P. 342463, 342464,434831,344832.
FAX 00941342463 EXT 25

தலைமையகம்

மளையாள மாந்திரிக சக்கரவர்த்தி பி.கே. சாமி
(J.D.G.A.N.)
P.K. SAAMY ASSOCIATE (PVT)LTD
இல 31,32,33
தினச்சந்தை கட்டிடம்
நு வெரலியா.
T.P. 052 2508 3093,3336.
FAX 0094523093 EXT 28





கலை அலங்கார வகுப்புக்கள்

★ சிகை அலங்காரம்
★ அழகுக்கலை
★ மணப்பெண் அலங்காரம்
★ 4 மாத கற்கை நெறி

ஆரம்பம்:-01.07.95

FASNAZ BEAUTY SALON

இல.142, டபிள்யூ.ஏ.சில்வா மாவத்தை,
கொழும்பு-06.
தொலைபேசி: 589457


## மயான இருள்

கல்முனை சேனைக்குடியிருப்பு பொது மயானம் பல வருடங்களாக இருளில் மூழ்கிக் காணப்படுகிறது. இலங்கை மின்சார சபையோ, கல்முனை பிரதேச சபையோ இவ்விடயமாக எதுவித நடவடிக்கைகளையும் இதுவரை மேற்கொள்ளவில்லை. இது ஒரு தமிழ் கிராமமாக இருப்பதே இதற்கான பிரதான காரணமாகும்.

ஒரு பிரசை.

## அடையாள அட்டை

கொழும்பு 15 அளுத்மாவத்தை வீதியில் டட்லீஹீத் என்பவர் அடையாள அட்டை ஒன்றை கண்டெடுத்து முரசு அலுவலகத்தில் ஒப்படைத்துள்ளார். செல்வநாயகம் ஜெயந்தி, எட்டியாந்தோட்டை என்பவரது அடையாள அட்டையே அதுவாகும். உரியவர் வந்து முரசு அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

நிர்வாகி

## இடமாற்றம் துரிதம்! இடப் பற்றாக்குறை அலட்சியம்!!

அண்மையில் நுவரெலியா மாவட்ட அம்பகமுவ பிரதேச சபைக்கு உட்பட்ட தமிழ்ப்பாடசாலைகளில் மத்திய மாகாண தமிழ்க் கல்வியமைச்சினால் மேற்கொள்ளப் பட்ட ஆசிரியர் இடமாற்றம் காரணமாக, இப்பாடசாலைகளில் பெரும் ஆசிரியர் பற்றாக்குறை நிலவுகின்றது.

இதற்கு மாற்றீடாக இன்னும் புதிய ஆசிரியர்கள் இப்பாடசாலைகளுக்கு நியமிக்கப்படவில்லை. இதனால் இப்பாடசாலைகளில் கல்வி கற்கும் மாணவர்கள் பெரும் சிரமத்துக்குள்ளாக்கப்பட்டுள்ளனர். எனவே இதனைக் கருத்தில் கொண்டு மத்திய மாகாண தமிழ்க் கல்வியமைச்சு உடனடியாக நடி வடிக்கை எடுக்கும்படி பெற்றோர் எதிர்பார்க்கின்றனர்.

சோ.ஸ்ரீதரன்-பொகவந்தலாவ.

## அங்கலாய்க்கும் ஆசிரியர்கள்!

கடந்த ஜனவரி மாதம் முதல் நடைமுறைக்கு வந்துள்ள ஆசிரியர் சேவைத் திட்டத்தின் கீழ் பல பயிற்சி ஆசிரியர்கள் சேர்க்கப்படாததையிட்டு விரக்தியடைந்த நிலையில் உள்ளனர். பயிற்சி ஆசிரியர் என்ற பதம் நீக்கப்பட்டு சகல ஆசிரியர்களும் சேவைத் திட்டத்தின் கீழ் கொண்டு வரப்படுவார்கள் என்று கல்வியமைச்சரும் பல தடவைகள் கூறியிருந்தார். பிறகு நான்கு வருடங்களை பூர்த்தி செய்து நிரந்தர நியமனம் பெற்றவர்களை மாத்திரம் சேவைத்திட்டத்தில் சேர்த்துக் கொள்வதாகக் கூறப்பட்டது. ஆனால் 94.10.06ம் திகதிக்கு முன்னர் நிரந்தர நியனம் பெற்றவர்களை மட்டுமே சேவைத் திட்டத்தில் சேர்க்கப்பட்டு புதிய சம்பள அதிகரிப்பும் வழங்கப்பட்டுள்ளது.

ஆனால் கடந்த ஜனவரி மாதத்தில் நான்கு வருடங்களை பூர்த்தி செய்து நிரந்தர நியமனம் பெற்ற ஆசிரியர்களின் நிலை குறித்து தெளிவற்ற நிலையுள்ளது.

ஆகவே குறைந்த சம்பளத்தில் பல்வேறு சிக்கல்களுக்கு மத்தியில் கடமையாற்றும் சகல பயிற்சி ஆசிரியர்களையும் ஆசிரிய சேவைத் திட்டத்தில் சேர்த்துக் கொள்ளல் வேண்டும். அல்லது நான்கு வருடங்கள் பூர்த்தியான திகதியி லிருந்து ஆசிரியர் சேவைத் திட்டத்தில் சேர்த்துக்கொள்ளுமாறு பாதிக்கப்பட்ட ஆசிரியர்களின் சார்பாக கல்வியமைச்சரையும், சம்பந்தப்பட்ட கல்வி அதிகாரிகளையும் தினமுரசு மூலம் வேண்டுகிறேன்.

கதிர்வேல் விஸ்வநாதன்-அப்புத்தளை.


"சுவைத்திரள்"

"சுவைத்திரள்", நகைச்சுவை பல்சுவை இதழின் 8ம் இதழ் வெளிவந்துள்ளது. பிரதி தேவையானோர் ரூபா 12/=க்கான இரண்டு ரூபா முத்திரைகளை கீழ்காணும் ஏஜன்டில் அனுப்பிப் பெற்றுக் கொள்ளலாம்.

M.M SANFAR, 75, JAWA ST.KINNIYA-06. Advt



வெளி வருகின்றது......................

ஆண்டு 4/5 மாணவர்களுக்கான புலமைப் பரிசில் போட்டிப் பரீட்சைக்கான மாதிரி வினாப் பத்திரிகை

வெற்றிக்கனி

BRIGHTன் கல்வி வெளியீடு

புதிய பாடத்திட்ட மாதிரி வினாவிற்கேற்ப தயாரிக்கப் பட்டது.
புதிய பாடத்திட்டமும் இணைக்கப்பட்டுள்ளது.

விலை : 50/- V.P.P. உண்டு

பிரதி மாதம் தோறும் வெளிவரும் வெற்றிக்கனி மாணவர்களின் வெற்றியை நிச்சயப்படுத்தும்

இதனுடன்
மாதிரி வினாவிடை - 100.00
பொதுவிவேகம் செயல்நூல்- 60.00
பொது விவேகம் பாடநூல் - 75.00

V.P.P. யில் பெற விரும்புவோர் 20/= முத்திரை அனுப்பி பெற்றுக் கொள்ளலாம்

Bright Book Centre
S-27, First Floor, Colombo Central Super Market Complex, P.O. Box -162, Colombo - 11. T.P: 434770


## நேரடியாக முரசு கரம் சேர இதோ ஒரு வாய்ப்பு!

தினமுரசு உள்ளூர் சந்தா விபரம்:

| | | |
|---|---|---|
| ஒரு வருடத்திற்கு ரூபா | 505/= | (52 வாரங்கள்) |
| ஆறு மாதங்கள் ரூபா | 258/= | (26 வாரங்கள்) |
| மூன்று மாதங்கள் ரூபா | 132/= | (13 வாரங்கள்) |

சந்தாதாரராக விரும்புவோர் தங்களது சுயமுகவரியிட்ட கடிதமூலம் தொடர்பு கொள்ளவும். சந்தாப்படிவம் எம்மால் அனுப்பிவைக்கப்படும்.

தினமுரசு வாரமலர் THINAMURASU VAARAMALAR
த.பெ.இல:1772 P.O.BOX: 1772
கொழும்பு COLOMBO

என்ற முகவரிக்கு கடிதங்களை அனுப்பிவைக்கும்படி கேட்டுக் கொள்கிறோம்.

# தூதுவராக சம்சுதீன்?

(துபாயிலிருந்து ஏ.எல்.எம். நயீம்)

ஐக்கிய அரபு எமிரேட்ஸிலுள்ள இலங்கை தூதுவராலயத்திற்கு ஒரு தூதுவர் தேவை என்ற செய்தி மார்ச் மாத 5-11 தினமுரசில் வெளி வந்தது குறிப்பிடத்தக்கதாகும்.

ஒரு வருடமாக தூதுவர் நியமிக்கப்படாமை என்ற குறையை தினமுரசு சுட்டிக்காட்டியதைத் தொடர்ந்து ஒரு சில நாட்களின் பின்னர் எமது செய்தியாளர் அபுதாபியிலுள்ள இலங்கை தூதுவராலயத்தைச் சேர்ந்த உயர் அதிகாரி ஒருவருடன் தொடர்பு கொண்டார். அப்போது அம்பாறை மாவட்டத்தைச் சேர்ந்த முன்னைநாள் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் பிரதிநிதியும், சுதந்திரக் கட்சியின் அம்பாறை மாவட்ட அமைப்பாளருமான சட்டத் தரணி ஜனாப்.ஏ.எம். சம்சுதீன் அவர்கள் எமிரேட்ஸின் தூதுவராக நியமனம் செய்யப்படலாம் என்றும் இதனை அண்மையில் மத்திய கிழக்கு நாடுகளுக்கு விஜயம் மேற்கொண்ட அமைச்சர் குழு ஒன்றின் பிரதி அமைச்சர் ஒருவர் உறுதி செய்ததாகவும் குறிப்பிட்டார்.

உயர் பீட முடிவு கிடைத்ததும் தூதுவர் நியமனம் நடைபெறும் எனவும் தெரிய வருகிறது.

www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்

# இந்தியா வீசியுள்ள வலை!

எதிர்பார்த்தது போலவே பேச்சு வார்த்தை முறியும் வரை பிரபா விவகாரம் குறித்து இந்தியா வாய் திறக்கவில்லை.

அரசு, புலிகள் பேச்சுவார்த்தையின் இறுதிக் காட்சி நெருங்கும் போது இந்தியா ஒரு காரியம் செய்தது.

சர்வதேச பொலிஸ் அமைப்பான இன்டர்போலிடம் பிரபாகரனையும் மேலும் இருவரையும் பிடித்துத் தர வேண்டும் என்று கோரிக்கை விடுத்திருந்தது.

இலங்கை அரசுக்கும் அது தெரியும். ஆனாலும் இன்டர் போலிடம் விடுத்த கோரிக்கை பற்றி இந்திய அரசோ, இலங்கை அரசோ வெளியே பேசவில்லை.

பேச்சுவார்த்தைக்கு குறுக்கே நிற்ப தாக தன் மேல் பழி விழுந்துவிடக் கூடாது என்பதில் இந்தியா மிக அவதானமாக இருந்தது.

இப்போது பேச்சு முறிந்து போர்க் காலம் சூடாக ஆரம்பித்து விட்டது.

பிரபாகரனையும், புலிகள் அமைப் பின் உளவுப் பிரிவுத் தலைவர் பொட்டு அம்மானையும், அகிலாவையும் தம்மிடம் ஒப்படைக்குமாறு இந்தியா பகிரங்கமாக கேட்டுள்ளது.

கோரிக்கை விட்டிருப்பது மூலம் பிரபாகரனை பிடித்து விடலாம் என்று இந்திய அரசு சீரியஸாக நினைப்பதாகக் கருதிவிடக்கூடாது.

இந்தியப் பிரதமர் நரசிம்மராவின் தலைமையை எதிர்ப்பவர்கள் தங்களை ராஜீவ் காந்தியின் விசுவாசிகளாகச் சொல்லிக் கொள்கிறார்கள்.

இந்திய காங்கிரஸ் கட்சியின் வாக்கு வங்கிகளில் நேரு குடும்பத்தின் செல்வாக்கு கணிசமான அளவு இருக்கிறது.

அது தவிர, ராஜீவின் மனைவி சோனியாவும் அரசியலுக்கு வர 'ஆம்' என்று ஒரு வார்த்தை சொன்னால் போதும், அகில இந்தியத் தலைவியாகக் கூடிய வாய்ப்பு இருக்கிறது.

ஆக, மொத்தத்தில் இந்தியாவின் மத்திய அரசியல் நேரு குடும்பத்தின் பிடியில் இருப்பதால் நரசிம்மராவும் தன்னை நேரு குடும்பத்தின் நலன் விரும் பியாக வெளிப்படுத்த வேண்டியிருக்கிறது.

அவ்வாறு வெளிப்படுத்த நினைப்ப தின் ஒரு கட்டம்தான் பிரபாவை ஒப்படைக் குமாறு இந்தியா விடுத்த கோரிக்கை.

இனிமேல் ராஜீவின் ஆதரவாளர் களால் தமது பிரதமர் மீது ராஜீவ் கொலையில் அக்கறையற்றவர் என்று குற்றம் சாட்ட முடியாது.

இலங்கை அரசின் கட்டுப்பாட்டில் இல்லாத பகுதியில், கிட்டத்தட்ட ஒரு தனி அரசாங்கமே நடத்திக் கொண்டிருப் பவரை ஒப்படைக்குமாறு இலங்கையிடம் இந்திய அரசு கேட்டிருப்பது ஒரு ஜோக் மாதிரியே தோன்றும்.

பிரபாகரன் எப்படியிருப்பார், எங்கிருக்கிறார் என்பதையெல்லாம் தெரியாத ஒரு அரசாங்கம் பிரபாவை ஒப்படைப்பதா இல்லையா என்று சீரியஸாக ஆராய்கிறது என்பதும் ஒரு ஜோக் மாதிரியே தெரியும்.

ஆனால், நீண்டகால அடிப்படையில் பார்க்கும் போது இலங்கையின் உள்நாட்டு விவகாரத்தில் இந்தியாவுக்கு ஒரு பிடியும், இலங்கை அரசுக்கு ஒரு நெருக்கடியும் பிரபாவை ஒப்படைக்கும் கோரிக்கையில் அடங்கியுள்ளது.

இந்தியாவின் கோரிக்கைக்கு 'முடியாது' என்று ஒரே வார்த்தையில் பதில் சொல்லக் கூடிய நிலையில் இலங்கை அரசு இல்லை.

அப்படிச் சொன்னால் இந்தியாவின் வெறுப்புத்தான் மிஞ்சும்.

புலிகளோடு போரை நடத்த இந்தியா வின் உதவி இலங்கை அரசுக்கு பெரிதும்



தேவையாக உள்ளது.

அது தவிர, பிரபாகரன் விடயத்தில் கரிசனம் காட்டுவதாக தென்னிலங்கை மக்கள் கருதிவிடக் கூடாது என்பதிலும் அரசு கவனமாகவே இருக்கும்.

தற்போதைய நிலையில் இந்தியாவின் கோரிக்கையும் இலங்கை அரசுக்கு ஒரு வகையில் சாதகம்தான்.

புலிகள் அமைப்பின் மீது சர்வதேச அரங்கில் பயங்கரவாத தோற்றப்பாட்டை தக்க வைத்துக் கொள்ள இந்தியாவின் கோரிக்கை உதவும்.

பிரிட்டன், கனடா போன்ற நாடுகளிடம் அங்குள்ள புலிகளது நடவடிக்கைகள் பற்றி இலங்கை அரசு கவலை தெரிவித்துள்ளது.

சர்வதேச ஆதரவை முற்று முழுதாக தம் பக்கம் வென்றெடுப்பதிலேயே ஜனாதிபதி குறியாக இருக்கிறார்.

புலிகளும் சர்வதேச சமூகத்தின் ஆதரவைத் திரட்ட பிரசாரக் களத்தில் இறங்கியிருக்கிறார்கள்.

சர்வதேச அளவிலான பிரசாரப் போரில் தற்போதைக்கு இலங்கை அரசின் குரலே மேலோங்கியுள்ளது.

புலிகள் தாமாகவே போரை ஆரம்பித்த விடயம் புலிகள் முரண்டு பிடிப்பவர்கள் என்று வெளியுலகில் அரசு சொல்லிக் கொள்ள சாதகமாக இருக்கிறது.

இந் நிலையில் இந்தியாவுக்கு வேண்டப் படும் ஒருவராக பிரபாகரன் இருப்பது புலிகளை சர்வதேச ரீதியில் மேலும் பலவீனப்படுத்தும் என்று அரசு கருதும்.

ஆனால், இனிப் போரைத் தவிர புலிகளோடு பேச வேறு மொழி கிடையாது என்பதுதான் முடிந்த முடிவா என்பதை அரசு உடனடியாகத் தீர்மானித்துக் கொள்ள வேண்டும்.

**பிரபாவை ஒப்படைப்போம் என்று இலங்கை அரசு கூறுவதும் ஒன்றுதான், புலிகளுடனான பேச்சுவார்த்தைக் கதவை நிரந்தரமாக மூடிவிடுவதும் ஒன்றுதான்.**

ஒப்படைக்கத் தயார் என்றுவிட்டு ஏதாவது அவசியம் கருதி எதிர்காலத்தில் புலிகளோடு அரசு பேச்சு நடத்த நினைத்தால் இந்தியாவோடு உள்ள உறவு இனிப்பாக இருக்காது.

வார்த்தை தவறிவிட்டார் சந்திரிக்கா என்று இந்தியா முகத்தைத் திருப்பிக் கொள்ளும்.

அத்தோடு, பிரபாவை ஒப்படைப்போம் என்று அரசு வாக்குறுதி கொடுப்பதை இந்தியா ஒரு பிடியாக வைத்துக் கொள்ளும்.

தனது உள்நாட்டு அரசியல் நிலவரம் காரணமாகவே பிரபாவை ஒப்படைக்குமாறு இந்தியா கேட்டது மெய்தான்.

ஆனால், இந்தியாவின் நலன் தொடர்பான அதன் அயலுறவுக் கொள்கைக்கு அதே கோரிக்கை சாதகமாகி விட்டது.

அது எப்படி? இலங்கை அரசு போரை நடத்த இந்தியாவிடம் மட்டும் உதவி கேட்கவில்லை. அமெரிக்கா உட்பட பல நாடுகளிடம் உதவி கேட்கப்பட்டுள்ளது. அதில் பாகிஸ்தானும் அடக்கம்.

இந் நிலையில் நாளை அமெரிக்காவோ அல்லது வேறு நாடோ இலங்கைப் பிரச்சனையில் தீர்க்கமான பங்கு வகித்தால் அது இந்தியாவுக்குப் பிடித்தமான காரியமாக இருக்காது.

ஆகவே, ஆரம்பத்திலிருந்தே ஒரு பிடியை வைத்திருப்பதே இந்தியாவுக்கு லாபம்.

முன்பெல்லாம் இலங்கைப் பிரச்சனையில் தலையிடுவதை நியாயப்படுத்த இந்தியா சில காரணங்களைக் கையில் வைத்திருந்தது.

இலங்கையில் உள்ள இந்திய வம்சாவழி மக்கள், தமிழ் நாட்டுக்கு தஞ்சம் தேடிப் போன தமிழ் அகதிகள் பிரச்சனை, தமிழ் நாட்டு தமிழ் மக்களின் கொந்தளிப்பு.

இப்போது மேற்கண்ட காரணங்கள் வலுவிழந்து விட்டன.

இந் நிலையில் தமது தலைவரை படுகொலை செய்த ஒருவர் இலங்கையில் இருக்கிறார். புலிகளின் அச்சுறுத்தல் இந்தியா வுக்குள்ளும் இருக்கிறது–போன்ற காரணங் களை இந்தியா இப்போது கையிலெடுத் துள்ளது.

புலிகளை பொது எதிரியாகக் கருதி இலங்கை அரசோடு நெருக்கமாக நிற்கக் கூடிய கூட்டாளி தானே என்று நிரூபிக்கவும் இந்தியா முன்வந்துள்ளது.

அதன் ஒரு கட்டமாக போரை நடத்த இலங்கை அரசுக்கு சில ஆலோசனை களையும் இந்தியா நான் முந்தி நீ முந்தி என்று தயாரித்துள்ளது.

இலங்கை விவகாரத்தைப் பொறுத்த வரை இந்தியாவின் வியூகத்திற்குள் தெரிந்தே சிக்கிக் கொள்வது தவிர இலங்கை அரசுக்கு வேறு மார்க்கம் இருப்பதாகத் தெரியவில்லை.

இனிமேல் புலிகளோடு பேச்சு நடத்துவதானால் இந்தியாவிடம் முதலில் ஒரு வார்த்தை கேட்டுவிட வேண்டும் என்ற நிலை அரசுக்கு ஏற்படும்.

இலங்கையில் புலிகள் விவகாரத்தில் முடிவெடுக்கும் உரிமையில் பாதியை பெற்றுக் கொள்வதே இந்தியாவின் நோக்கம்.

உதவி தேவையானால் அமெரிக்கா விடமோ அல்லது வேறெந்த நாட்டிடமோ இலங்கை தாராளமாக பெற்றுக் கொள்ளலாம்.

ஆனால், இந்தியாவை மறந்துவிட்டு அதன் எதிரியுமாக இருக்கும் புலிகளோடு இலங்கை அரசு கணக்குத் தீர்க்க முடியாது.

இந்தியாவிடம் பிரபாகரனை ஒப்ப டைக்கக் கூடிய நிலை இலங்கை அரசுக்கு ஏற்படப் போவதில்லை. ஏனெனில் பிரபாகரன் அந்த வாய்ப்பை வழங்கப் போவதில்லை.

அது இலங்கை அரசுக்கும் தெரியும். இந்திய அரசுக்கும் தெரியும்.

ஆனால், பிரபாகரனை ஒப்படைக்கு மாறு விடுக்கப்பட்டுள்ள கோரிக்கை இலங்கை அரசுக்கு வீசப்பட்டுள்ள வலையாகிவிட்டது.

'பிரபாவை ஒப்படைக்கத் தயார்' என்று இலங்கை அரசு வாக்குறுதி கொடுப்பது இலங்கை விவகாரத்தில் தலையிட இந்தியா வுக்கு கிடைக்கும் வரப்பிரசாதம் மாதிரித்தான்.

இந்தியாவை ஓரம் கட்டிவிட்டு மேற் கத்திய நாடுகளை நோக்கி நட்புக்கரம் நீட்டிய புலிகளுக்கு, இந்தியா தனது ராஜ தந்திரம் மூலம் பதிலடி கொடுக்க நினைத்திருக்கிறது.

இதில் உள்ள விசயம் யாதெனில், இலங்கை அரசுக்கு புலிகள் இராணுவ ரீதியில் கொடுக்கும் நெருக்கடி தான் இலங்கை அரசை இந்தியா தனது பக்கம் இழுத்துக் கொள்ள உதவுகிறது.

இன்னொரு விடயம் என்னவென்றால், இலங்கைக்குள் இந்தியப் படை எப்போது வேண்டுமென்றாலும் வரக் கூடும் என்ற கருத்து பரவியிருக்கிறது.

இலங்கை அரசு விரும்பினாலும் கூட இந்தியப்படை இப்போதைக்கு வரக் கூடிய அரசியல் வானிலை இந்தியாவில் இல்லை.

ஆனால், இந்தியா படை அனுப்பக்கூடும் என்ற கருத்து பரவலாக அடிபடுவதை இந்தியா விரும்பவே செய்யும்.

இல்லாவிட்டால் அந்தக் கருத்தை இந்தியா எப்போதோ அடித்து மறுத்திருக் கலாம். ஆனால் செய்யவில்லை. இரண்டு லாபங்கள் அந்த செய்தியால் உண்டு.

அப்படி ஒரு கருத்து நிலவுவது இலங்கையில் இந்தியாவுக்கு மட்டுமே உள்ள சிறப்புரிமை போலவும் மறைமுகமாக அர்த்தப்படும். இது இந்தியாவுக்கு நல்லதுதான்.

ஏனெனில், அமெரிக்கப் படை வரும் என்றோ, பாகிஸ்தான் படை வரும் என்றோ எவரும் பேசுவதில்லையல்லவா.

அது மட்டுமல்ல, இந்தியப் படை வரலாம் என்ற கதை 1977 இனக் கலவரத்தின் பின்னர் ஆரம்பித்து, 83 கலவரத்தில் சூடுபிடித்த கதையாக அடிபட்டதுதான்.

அப்போதெல்லாம் தமிழ் மக்கள் மட்டுமே இந்தியப் படை வருவதை விருப்பத்தோடு எதிர்பார்த்தார்கள்.

இந்தியா என்றால் அது தமிழர் களுக்கு சார்பாக வரும் என்ற கருத்தின் அடிப்படையில் இந்தியப்படை வரும் என்ற பேச்சுக்கு சிங்கள மக்களிடம் வரவேற்பிருக்கவில்லை.

1971 இல் தெற்கில் ஜே.வி.பி கலகத்தை அடக்க இந்தியா உதவியது. ஆயினும் கூட இந்தியா என்றால் கிட்டத்தட்ட தமிழர்களின் நாடு என்பது போல நிலவிய கருத்து சிங்கள மக்களிட மிருந்து முற்றாக மறையவில்லை.

இப்போது நிலமை மாறிவிட்டது. இந்தியா புலிகளுக்கு எதிரானது என்பது தென்னிலங்கையில் உள்ள குக்கிராமங்கள் வரை தெரிந்த செய்தி.

புலிகளை எதிர்க்க வெளியில் இருந்து யாராவது வந்தால்தான் உண்டு என்று நம்பும் அளவுக்கு படைகளின் பலவீனம் வெளிப்பட்டுள்ளது.

ஆகவே, இந்தியா புலிகளை எதிர்க்க வருமானால் சிங்கள மக்கள் முன்பு போல முகம் சுளிக்கப் போவதில்லை.

தமிழ் மக்களைப் பொறுத்தவரை இந்தியாவை வெறுக்காவிட்டாலும், அதன் படைகள் செய்த அத்துமீறல்களை மறக்க முடியவில்லை. அதனால் இந்தியப் படை வரும் என்ற செய்திகள் பரவும் போது தமிழர்களுக்கு அது முன்பு போல இனிப்பானதாக இல்லை.

இதுதான் தற்போதைய மாற்றமான சூழ்நிலை. எனவே, இனிமேல் தமிழர் களை காப்பாற்றப் போவதாக கூறிக் கொண்டு இந்தியப் படை வரமுடியாது.

எனினும், வரலாம்-வரக்கூடும் என்ற செய்திகளை புலிகள் இந்தியாவுக்குள் மீண்டுமொரு பாரிய நடவடிக்கை எடுக்காமல் தடுக்கும் அச்சுறுத்தலாக இந்தியா பயன்படுத்தும்.

எனவே-இந்தியப் படை வரலாம் என்ற செய்தி ஈரம் காயாமல் இருப்பது இந்தியாவைப் பொறுத்தவரை ஒரே கல்லில் இரு மாங்காய்.

இனப் பிரச்சனை தீர்வு விடயத்தில் புலிகளின் பலத்தை கணக்கிலெடுத்தே தீரவேண்டும் என்ற நிலை உள்ளவரை, புலிகளை முற்றாகவே பகைக்கும் விதமான கோரிக்கை நீண்ட கால நோக்கத்தில் புதிய நெருக்கடிக்கு தளம் போட்டிருக்கிறது என்பதும் உண்மை.

சில கோரிக்கைகள் தற்காலிகமாக சுகம். நீண்டகால அடிப்படையில் தீராத தலைவலி. பிரபாகரனை ஒப்படைக்கக் கோரும் இந்தியாவின் கோரிக்கையும் இலங்கை அரசைப் பொறுத்தவரை அப்படித்தான்.

****

## குண்டு வெடிப்புக்கள் சொல்லும் செய்தி

எக்ஸ்ரே ரிப்போர்ட்

தலைநகரின் பாதுகாப்புக்கு புலிகள் விடுத்துள்ள அச்சுறுத்தலுக்குப் பின்னால் பல நோக்கங்கள் உள்ளன.

கட்டுநாயக்கா விமானத் தளத்தில் வைக்கப்பட்ட வாகனக் குண்டு வெடித் திருந்தால் விமான நிலையமே தரை மட்டமாகியிருக்கும் என்றெல்லாம் உடனடியாக ஊகங்கள் கிளம்பின. அவற்றில் உண்மை இல்லை.

வாகனக் குண்டு முழுமையாக வெடித்திருந்தால் கூட விமான நிலைய வெளிப்புறக்கட்டிடங்களில் சேதங்கள் ஏற்பட்டிருக்கலாமே தவிர பெரும் நாசம் ஏற்பட்டிருக்காது.

அப்படியானால் ஏன் குண்டு வைக்கப்பட்டது? வடக்கு-கிழக்கில் போரை நடத்திக் கொண்டே தலைநகரில் பாதுகாப்பை நிலைநிறுத்த அரசால் முடியும் என்ற நம்பிக்கையை தரைமட்ட மாக்குவதும் ஒரு நோக்கம்.

வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்கு கொழும்பு பாதுகாப்பான இடம் அல்ல என்ற செய்தியை தெரிக்க விமான நிலையத்தை தவிர வேறு சிறந்த இடம் இருக்க முடியாது என்று புலிகள் நினைத்திருக்கலாம்.

எனவே, ஒரு அடையாளத் தாக்குதலாகவே விமான நிலையக் குண்டுவெடிப்பை புலிகள் திட்டமிட்டார்கள் என்று நம்பமுடிகிறது.

விமான நிலையத்தை குண்டு வெடிப்பில் இருந்து பாதுகாக்கவே, வாகனத் தரிப்பிடங்கள் யாவும் விமான நிலைய உள் மண்ட பத்திலிருந்து நீண்ட தூரத்தில் அமைக்கப் பட்டிருந்தன.

அப்படியிருக்க குண்டு வெடிப்பால் விமான நிலையமே தரைமட்டமாயிருக்கும் என்ற வதந்தி எப்படிப் பரவியதோ தெரியவில்லை.

வடக்கு-கிழக்குக்கு வெளியே பரவலான வெடிகுண்டுத் தாக்குதல் மூலம் தெற்கில் கலவரம் ஏற்பட்டால்கூட அதில் அரசுக்கு நஷ்டம். புலிகளுக்கு லாபம்.

மனிதாபிமானம் கொண்ட பெண் ஜனாதிபதி என்னும் 'இமேஜ்' மீது மாற்றம் ஏற்படுத்த கலவரங்கள் உதவக்கூடும் என்று புலிகள் கணக்குப் போடலாம்.

இதனால் தெற்கில் அரசுக்கு இரண்டு பாரிய பொறுப்புக்கள் ஏற்பட் டுள்ளன, ஒன்று-வெடி குண்டுத் தாக்குதலை தடுப்பது, இரண்டு-இனக்கலவரத்தை தூண்டும் தென்னிலங் கையில் உள்ளன சக்திகளை அடக்கி வைத் திருப்பது.

தினமும் அரசின் தோளில் புதிய புதிய சுமைகளை புலிகள் ஏற்றிக் கொண்டிருக்கிறார்கள்.

—நாரதர்

## அதிரடி அய்யாத்துரை



இப்பவெல்லாம் யாழ்ப்பாணத்தில் பெற்றோர்களும் பள்ளிக்கூடங் களுக்குப் போகினம். முதியோர் கல்வித் திட்டமாக்கும் எண்டு நினைப்பியள். அப்படியெல்லாம் ஒண்டுமில்லை. இளையோரையெல்லாம் பள்ளிக்கூடம் விடும் நேரம் பாதிவழியில் வைத்தே ரெண்டு எழுத்தார் கூட்டிக்கொண்டு போயிடுவினம் எண்ட பயம்தான் காரணம். அதுதான் கண்ணும் கருத்துமாய் பள்ளிக்கூட வாசலில் காவலிருக்கினமாம்.

விமான நிலையத்துக்கு தமிழ் ஆக்கள் போய் வாறதெண்டால் சந்திர மண்டலத்துக்குப் போய் வாற மாதிரி பெரிய காரியமாய் போச்சுதாம். தமிழ் வெகுஜனப் பிரதிநிதி ஒருவர் தனது நண்பரை அனுப்ப வாகனத்தில் போனவராம். வாகனத்தில் வெடிகுண்டு இருக்கும் சோதனை போடவேணும் எண்டு சீருடையினர் பிடிவாதம் பிடிச்சவையாம். முடியாது எண்டு போட்டாராம் 'ஜனநாயகக் கட்சி' வெகுஜனப் பிரதிநிதி. பிறகு மேலதிகாரி வந்து 'சரி போங்கோ' எண்டு சொன்னவராம். வெகுஜன பிரதிநிதியோ சாதாரண வெகுஜனமோ பேசறது தமிழ் எண்டால் சீருடையினர் சிலருக்கு வெடிகுண்டு வாசம் மூக்கைத் தொடுறது மட்டும் உண்மையிலும் உண்மை பாருங்கோ.

ரெண்டு எழுத்துத் தலைவரை அயல்நாடு கேட்டாலும் கேட்டுது விவாதப் பிரியர்களுக்கு மெல்ல அவல் கிடைச்சிட்டுது. ஒப்படைக்கலாமோ கூடாதோ, அதனால் லாபமோ நஷ்டமோ எண்டு மயிர்பிளக்கும் விவாதம் தொலைக்காட்சி வரை நீளுது. பிறக்காத பிள்ளைக்கு பேர் வைக்க பேயாய் அலைவானேன்? அது சரி இதே தொலைக்காட்சியிலை சில மாதங்களுக்கு முன்பு ரெண்டு எழுத்தாரை போராளிகள் எண்டு சொல்லி வாழ்த்தி விவாதங்கள் நடந்தது மாதிரி ஒரு ஞாபகம்.

காலியில் நடந்த ஆட்டத்திலை பெரிய வர்த்தகர்கள் சிலரை வறட்சியாக்கும் நோக்கமும் இருந்தது எண்டு ஒரு தகவல். இனவாதத்துக்கு பல புற்றுகள். எந்தப் புற்றில் எந்தப் பாம்பு இருக்குமோ? யார் கண்டது.

யாழ்ப்பாணம், ஊர்; புங்குடுதீவு. மொழி; தமிழ். தொழில்; சந்ததி சந்ததியாய் காலியில் கடை. மதிப்பு, மரியாதை, விலாசம். கனுமாத்தையா எண்டு பெயரும் சிங்களமாய் மாறிப் போச்சு. யுத்தம் வந்து மினிக் கலவரம் காலியில் வர அவரின் பெயரைப் பார்க்காமல் நதிமூலம் ரிஷிமூலம் பார்த்து கடையைக் கொளுத்திப் போட்டினம். இப்படி நடக்குமெண்டு கனுமாத்தையா கனவிலும் நினைக்கேல்லை. பசி வந்தால் மட்டுமில்லைப் பாருங்கோ; இனவாதக் குசி வந்தாலும் பத்தும் பறக்கும்.

கைதுகளிலும் பல ரகம். ரெண்டு எழுத்தார் எண்ட சந்தேகத்திலை மாட்டுப்படுறது ஒரு ரகம். இன்னொரு ரகம் குசி 'மூட்' வந்து மாட்டுறது. அமெரிக்காவில் இருந்து கொழும்பு வந்த யாழ் வாலிபர் ஒருவர் உறவினர்களைப் பார்த்துப் போட்டுப் போயிருக்கலாம். கெட்ட காலம், பெண்மணி ஒருவரைக் கிண்டல் செய்து போட்டார். கிண்டல் செய்யப்பட்டவர் பாதுகாப்புத் துறை அதிகாரி ஒருவரின் பாரியார். அவ்வளவுதான் வாலிபரை சுண்டல் பொதி மாதிரி தூக்கிப் போய் உள்ளே போட்டுப் பூட்டிப் போட்டினம். இடம், பொருள், காலம் அறியாமல் கிண்டலடிக்கும் வாலிபர்களே ஜாக்கிரதை.

காலிச் சம்பவத்தை படமாக்கி ரெண்டு எழுத்தார் வெளிநாடுகளில் பிரசாரம் செய்யினம் எண்டு கதை வந்தது. அதாலை காலிப் பக்கம் யாராவது கமராவோடு வருகினமோ எண்டு பலத்த கண்காணிப்பு. சேதமான கட்டிடங்களை படம் பிடிக்கவும் முன் அனுமதி கட்டாயத் தேவை. வெள்ளம் வர முன்னர் அணைகட்டி இருந்தா இப்படிக் கஷ்டப்பட்டுக் கண்காணிக்கும் வேலை வந்திருக்காதல்லோ.

நல்ல கருத்தை நகைச்சுவையோடு கவிதையாலும் சொல்லலாம். தமிழகத்தின் உவமைக் கவிஞர் சுரதா 70களில் எழுதிய கவிதை இது. அப்ப இளைஞர்களில் வாணிஸ்ரீக் காய்ச்சல் பரவியிருந்தது.

"நடிகை வாணிஸ்ரீ நாள்தோறும் வீட்டில்
குடிப்பது பாலாம்! படிப்பது நாவலாம்!
பழைய புராணம் படிப்பதைக் காட்டிலும்
நாவல் படிப்பது நல்லதே எனினும்
திருக்குறள் படித்தால் திருந்தி வாழலாம்!
சாக்கடை நூல்களைச் சாத்திரம் என்போர்
பூக்கடை நூல்களைப் புரட்டுவதில்லையே!.."

www.padippakam.com

நன்றி - நூலகத்திட்டம்

# ஒரு நாளில் ஒரு வங்கியில்; தொடர் கொள்ளை!



# அல்பிரட் துரையப்பா முதல் காமினி வரை

31

அரசியல் தொடர்

அற்புதன் எழுதுவது



கூட்டணித் தலைவர் மு. சிவசிதம்பரத்தின் பாரியார் தனிவீட்டுச் சாவி பெறுகிறார்.



வன்னியின் எல்லைக் காவலருக்கு சென்னையில் தனிவீட்டுச் சாவி. (தா.சிவசிதம்பரம்)



கூட்டணியின் திருமலை முன்னாள் பா.உ. இரா. சம்பந்தனின் பாரியாரிடம் சேருகிறது சாவி.

# கேட்டது தனிநாடு கிடைத்தது தனிவீடு

## இருபுறத் தாக்குதல்

1984 ஆகஸ்ட் 5ம் திகதியும் இராணுவ நடவடிக்கைகள் தமிழர்களுக்கு எதிராக தொடர்ந்து கொண்டிருந்தன.

இஸ்ரேலிய 'மொசாட்' பிரிட்டனிலிருந்து வரவழைக்கப்பட்ட 'எஸ்.ஏ.எஸ்' என்றழைக்கப்படும் படையினர் ஆகியோரின் ஒத்துழைப்போடு வேட்டைகள் தொடர்ந்தன.

வடபகுதி வீதிகளில் தமிழர் பிணங்களும், தமிழர்களின் வாகனங்களும் எரிந்து கொண்டிருந்தன.

அதே நாள் மாலை 5.30 மணியளவில் முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள ஒட்டிசுட்டான் பொலிஸ் நிலையம் புலிகளால் திடீர் தாக்குதலுக்கு உள்ளானது.

பொலிசார் 50 பேர்வரை அங்கு இருந்தனர். அதில் 30 பேர் கெரில்லாத் தாக்குதலுக்கு எதிரான பயிற்சி பெற்றவர்கள்.

மாடிக்கட்டிடத்தோடு அமைந்திருந்த பொலிஸ் நிலையத்தின் பின்புறமாய்ச் சென்று புலிகள் பதுங்கு நிலையில் இருந்தனர்.

அதே சமயம் முன்புறமிருந்து புலிகளது இன்னொரு கெரில்லா அணி தாக்குதலை ஆரம்பித்தது.

முன்புறமிருந்தே தாக்குதல் வருவதாக நினைத்து பொலிசார் பதில் தாக்குதல் தொடுக்க முற்பட்டனர். அதே நேரம் ஏற்கனவே பின்புறம் நிலைகொண்டிருந்த புலிகள் தாக்குதலை ஆரம்பித்தபடி உள்ளே புகுந்தனர்.

இரு புறமும் இருந்து கண்ணிமைக்கும் நேரத்தில் நடைபெற்ற தாக்குதலுக்கு ஈடுகொடுக்க முடியவில்லை. பொலிசார் ஆயுதங்களை கைவிட்டுத் தப்பிச் சென்றனர்.

பொலிஸ் நிலையம் புலிகளின் வசம் வீழ்ந்தது. பொலிஸ் இன்ஸ்பெக்டர் கனேமுல்ல உட்பட எட்டு பொலிசார் கொல்லப்பட்டனர்.

பொலிஸ் நிலையத்தில் கைப்பற்றப்பட்ட ஆயுதங்களின் விபரம் இது: நான்கு இயந்திரத் துப்பாக்கிகள், மூன்று 303 ரக ரைபிள்கள், நான்கு ரிப்பீட்டர் ரக துப்பாக்கிகள், இரண்டு .38 ரக ரிவோல்வர்கள் மற்றும் துப்பாக்கி ரவைகள்.

பொலிஸ் நிலையமும் குண்டு வைத்துத் தாக்கப்பட்டது.

இத்தாக்குதலையடுத்து படையினரின் நடவடிக்கைகள் மேலும் உக்கிரமாயின.

தமது கோபத்தையெல்லாம் தமிழ் மக்கள் மீதும், அவர்களது உடமைகள் மீதும் கொட்டித்தீர்த்தனர் படையினர்.

## வங்கி ஒன்று கொள்ளை இரண்டு

யாழ்ப்பாணம் ஸ்ரான்லி வீதியில் இருந்த வங்கியிலும் கொள்ளையொன்று நடந்தது.

இக் கொள்ளை நடவடிக்கை பற்றிய சுவாரசியமான விசயம் ஒன்று சொல்லுகிறேன்.

ஒரே நாளில் இரண்டு தடவை ஒரே வங்கி கொள்ளையிடப்பட்டது.

அது எப்படித் தெரியுமா? ஸ்ரான்லி வீதியில் இருந்த வங்கி மீது ஈ.பி.ஆர்.எல்.எஃப். பின் மக்கள் விடுதலைப்படையும் கண் வைத்திருந்தது.

அதே சமயம் தமிழ் மக்கள் ஜனநாயக விடுதலை முன்னணி (என்.எல்.எஃப்.ரி) என்னும் இயக்கமும் குறி வைத்திருந்தது.

மக்கள் விடுதலைப்படை தமது தளபதி டக்ளஸ் தேவானந்தாவின் உத்தரவுக்காக தாமதித்திருந்தது. டக்ளஸ் தேவானந்தா அப்போது இந்தியாவில் இருந்தார்.

என்.எல்.எஃப்.ரி. முந்திக் கொண்டது.

வங்கிக்குள் புகுந்த என்.எல்.எஃப்.ரியினர் கொள்ளை நடவடிக்கையில் ஈடுபட்ட போது இரும்புப் பெட்டிக்குள் இருந்த நகைகளை எடுக்க முடியவில்லை.

அதனை உடைத்துத் திறப்பது உடனே நடக்கக்கூடிய காரியமல்ல. தாமதித்தால் பொலிசார் வந்து சேர்ந்து விடலாம். அதனால் வெளியே இருந்த பணத்தையும், நகைகளையும், திரட்டிக் கொண்டு அவர்கள் தப்பிச் சென்று விட்டனர்.

இந்தச் செய்தி மக்கள் விடுதலைப் படைக்கு எட்டிவிட்டது. உடனே செயலில் இறங்கினார்கள். வங்கிக்குள் புகுந்து இரும்புப் பெட்டியை தூக்கிவந்து உழவு இயந்திரம் ஒன்றில் ஏற்றினார்கள்.

இரும்புப் பெட்டி பலத்த கனமாக இருந்தது. பொது மக்களும் ஆளுக்கு ஒரு கைகொடுத்து உழவு இயந்திரத்தில் ஏற்றி விட்டார்கள்.

இரகசிய இடம் ஒன்றுக்கு கொண்டு சென்று இரும்புப் பெட்டியை உடைத்து நகைகளையும், பணத்தையும் திரட்டிக் கொண்டனர்.

இரும்புப் பெட்டிக்குள் சில காணி உறுதிகளும் இருந்தன. அதில் ஒன்று யாழ். தொகுதி எம்.பியாகவிருந்த யோகேஸ்வரனின் காணி உறுதி.

இச்சம்பவங்கள் எல்லாம் நடந்து முடிந்த பின்னர் வந்து சேர்ந்தனர் இராணுவத்தினர்.

ஸ்ரான்லி வீதியால் சென்று கொண்டிருந்த பொதுமக்கள் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர்.

8வயது சிறுவன் உட்பட பொதுமக்கள் சிலர் கொல்லப்பட்டனர்.

## வவுனியாவில் கோரம்

இதே நேரம் வடபகுதி யெங்கும்இராணுவத்தினரின் கண்மூடித்தனமான நடவடிக்கைகள்தலைவிரித்தாடிக் கொண்டிருந்தன.

வவுனியாவில் நாலு தமிழ் பெண்கள் விமானப்படை யினரால் பிடித்துச் செல்லப்பட்டனர். பின்னர் அவர்கள் பலாத்காரப் படுத்தப்பட்ட நிலையில் வீதியில் பிணமாகக் கிடந்தனர்.

## கவசவண்டி நாசம்

1984 ஆகஸ்ட் 6ம் திகதி யாழ்ப்பாண பொது மருத்துவமனைக்கு அருகில் கவச வண்டியோடு வந்திறங்கினார்கள் இராணுவத்தினர்.

கவசவண்டியின் பீரங்கியால் அருகிலுள்ள கட்டிடங்களை நோக்கி தாக்குதல் நடத்தினார்கள்.

தாக்குதல் நடத்திவிட்டு கவச வண்டி சகிதம் ரோந்து சென்ற படையினர்மீது புலிகள் தாக்குதல் நடத்தினார்கள்.

கவச வாகனத்தை நோக்கி புலிகள் கைக்குண்டுகளை வீசித் தாக்கினார்கள்.

கவச வாகனம் சேதமடைந்தது. ஒரு இராணுவ அதிகாரி கொல்லப்பட்டார்.

மன்னார் நகரில் படையினர் நடத்திய தாக்குதல் காரணமாக மன்னார் நகரில் இருந்த பல கடைகளும் வீடுகளும் எரிந்து சாம்பலாயின.

அடம்பன் கிராமத்திலும் பல வீடுகள் தீக்கிரையாக்கப்பட்டன. ஆயிரக்கணக்கான மக்கள் அகதிகளாயினர்.

## முஸ்லிம் கடைகளும் மொசாட்டும்

முருங்கன், சிலாவத்துறை, அநுராதபுரம் ஆகிய பகுதிகளில் பத்துக்கும் மேற்பட்ட தமிழர்கள் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

மன்னாரில் இராணுவத்தினரால் எரிக்கப்பட்ட கடைகளில் பெரும்பாலானவை முஸ்லிம்களுக்குச் சொந்தமானவை.

'மொசாட்' குழுவினரை சந்தோசப்படுத்தவே முஸ்லிம் கடைகளையும் இராணுவத்தினர் கொளுத்தியதாக நம்பப்பட்டது.

மன்னாரில் இராணுவத்தினரால் கொல்லப்பட்டவர்களில் ஆறு பேர் இந்தியப் பிரஜைகள்.

ஆறு பேரில் ஒருவர் சேதுராமலிங்கம். சில நாட்களில் அவர் இந்தியா செல்ல இருந்தார்.

திருகோணமலையில் இருக்கிறது தம்பலகாமம் சிவன் கோவில்.

சினம் கொண்ட இராணுவத்தினருக்கு சிவன் மீதும் கோபம். கோவிலையும் நொருக்கிவிட்டு, பிரதம குருக்களையும் பிடித்துச் சென்றனர்.

யாழ்ப்பாணம் அச்சுவேலியில் இருந்த கடைகளையும், வீடுகளையும் இராணுவத்தினர் கொளுத்தியபோது நீதிபதியின் வீட்டையும் விட்டு வைக்கவில்லை.

மல்லாகம் மாஜிஸ்ரேட் திரு. பாலசிங்கத்தின் வீடுதான் தீக்கிரையானது.

## நிருபர்கள் பட்ட அவலம்

கனடா வானொலி நிறுவனம் ஒன்றின் நிருபர் ஜோன் தன்மன்.

வடபகுதிக்கு நேரில் சென்று நிலமையை அறிய விரும்பினார்.

அனுமதி கொடுக்க பாதுகாப்பு அதிகாரிகள் மறுத்து விட்டனர். அதனால் கூட்டணி செயலதிபர் அமிர்தலிங்கத்தோடு அவர் தொடர்பு கொண்டார்.

அமிர்தலிங்கமும் வடக்கில் நடைபெறும் சம்பவங்கள் குறித்து விளக்கம் கொடுத்தார்.

அவர் சொன்னதையெல்லாம் தொலைபேசி ஒலிப்பதிவு கருவி மூலம் பதிவு செய்து கொண்டார் நிருபர்.

நன்றி சொல்லி தொலைபேசி றிசீவரை வைத்துவிட்டு திரும்பிய நிருபருக்கு அதிர்ச்சி காத்திருந்தது.

ரிவோல்வர்களோடு சி.ஐ.டி யினர் நின்றனர். கனடா நிருபர் கொழும்பில் உள்ள சி.ஐ.டி தலைமையகத்திற்கு கொண்டு செல்லப்பட்டார்.

ஒலிப்பதிவு நாடாக்கள், செய்திக் குறிப்புக்கள் அனைத்தும் பறிமுதல் செய்யப்பட்டன.

ஒப்புதல் வாக்குமூலம் கேட்டனர் சி.ஐ.டியினர். நிருபர் மறுத்ததால் ஏழரை மணிநேரம் கூண்டுக்குள் அடைக்கப்பட்டு, பின்னர் விடுதலை செய்யப்பட்டார்.

விமானம் ஏறுமுன் கனடா நிருபர் சொன்னது இது: "மனித உரிமைகளுக்கு இலங்கையில் இடமே இல்லை".

இலங்கையில் பணியாற்றிய 'இந்திய டுடே' சஞ்சிகையின் நிருபர் பெயர் வெங்கட்ரமணி.

அவரையும் இராணுவத்தினர் கைது செய்தனர். இந்தியத் தூதர் தலையிட்டு அவரை விடுவித்தார்.

இத்தனைக்கும், அவர் இலங்கை அரசுக்கு சாதகமாக எழுதிய கட்டுரை ஒன்று கைது செய்யப்படும் முன்னர் இந்திய டுடேயில் வெளிவந்திருந்தது.

வடபகுதி நிலவரம் அறியச் சென்ற 'இந்தியன் எக்ஸ்பிரஸ்' பிரதம ஆசிரியரும், மேலும் மூன்று பத்திரிகையாளர்களும் இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டனர்.

ஒரு மணிநேரம் தடுத்து வைக்கப்பட்ட பின்னர் அவர்கள் விடுதலை செய்யப்பட்டனர்.

தாக்குதல்கள், வெறியாட்டங்கள் பற்றியே அதிகம் கூறிவிட்டதால் இடையில் மேலும் ஒரு சுவாரசியமான சங்கதி.

## தனிநாடும் தனிவீடும்

"தனிநாடு அல்லது சுடுகாடு" என்று முழங்கியவர்கள் கூட்டணித் தலைவர்கள்.

1984இல் அவர்களில் சிலர் தமிழக அரசிடம் "தனிவீடு அல்லது வாடகை வீடு" கேட்டார்கள்.

அப்போது தமிழக முதல்வராக இருந்தவர் எம்.ஜி.ஆர்.

கூட்டணியினரின் தனிவீட்டுக் கோரிக்கையை எம்.ஜி.ஆர் ஏற்றுக் கொண்டார்.

கூட்டணித் தலைவர்கள் மூவருக்கு தனிவீடு தர முன்வந்தார்.

**கூட்டணித் தலைவர் மு.சிவசிதம் பரம், திருமலைக் காவலர் என்றழைக் கப்பட்ட இரா.சம்பந்தன், எல்லைக் காவலர் என்று அழைக்கப்பட்ட வவுனியா தா.சிவசிதம்பரம் ஆகியோருக்கே தனிவீடுகள் கிடைத்தன.**

இந்த விடயம் இலங்கைப் பத்திரிகைகளில் வந்த போது தலைவர் மு.சிவசிதம் பரம் சங்கடப்பட்டார்.

உடனே ஒரு அறிக்கை விட்டார். அந்த அறிக்கை இது:

"...உண்மையான எங்கள் நிலை இப்படிச் சீர்கேடாக இருக்கும்போது ஏதோ தமிழக அரசு வீடுகளைச் சும்மா கொடுத்து விட்டதாகப் பிரமாதமாக சிலர் இங்கு கதை கட்டியிருக்கிறார்கள்..."

## வாழும்வரை வாழலாம்

திரு.மு.சிவசிதம்பரம் சொன்னது தவறு என்று தமிழக பத்திரிகைச் செய்தி ஒன்று வெளிச்சப்படுத்தியது. அந்தச் செய்தி இதுதான்;

"மு.சிவசிதம்பரம், தா.சிவசிதம்பரம், இரா.சம்பந்தன் ஆகியோருக்கு இப்போது வீடுகள் அளிக்கப்பட்டுள்ளன.

சென்னை நடிப்பிசைப் புலவர் கே.ஆர்.ராமசாமி குடியிருப்பில் டி-4, டி-5, பி-5 எண்ணுள்ள வீடுகள் வழங்கப் பட்டுள்ளன.

**இந்த வீடுகளில் அவர்கள் தங்கள் வாழ்நாள் முழுவதும் வாடகையின்றிக் குடியிருக்கலாம் என்ற மாண்புமிகு தமிழக முதல்வரின் செய்தியையும் வீட்டு வசதி வாரியத் தலைவர் தெரிவித்தார்".**

இந்தச் செய்தி வந்தது தமிழக அரசினால் வெளியிடப்படும் 'தமிழரசு' என்னும் பத்திரிகையில்.

எனவே செய்தி பொய்யல்ல. தலைவர் சிவா சொன்னதுதான் பொய்!

இனி மீண்டும் 84 ஆகஸ்ட் மாத வன்முறை நாட்களுக்குச் செல்வோம்.



## அத்துலத்தின் அறிவிப்பு

"தமிழீழத்தை எதிர்க்கும் சகல சிங்கள மக்களிடமும் ஆயுதம் வழங்குவோம்" என்று பாதுகாப்பு அமைச்சராக இருந்த அத்துலத் முதலி கூறினார்.

"தமிழகத்தில் 5 கோடி தமிழர்களும், தமிழக அரசியல்வாதிகளும், எம்.ஜி.ஆரும் இல்லையானால் தமிழ் தீவிரவாதிகளின் கதையை என்றோ முடித்திருப்போம்" என்றும் அத்துலத் முதலி கூறியிருந்தார்.

எம்.ஜி.ஆர் உயிருக்கு தமிழகத்தில் தங்கியிருக்கும் போராளிகளால் ஆபத்து என்று ஒரு கட்டுக் கதையையும் இலங்கை அரசு பரப்பியிருந்தது.

அதற்கு பதிலடிபோல எம்.ஜி.ஆர் சொன்னது இது;

**"எனது உயிருக்காகப் போலிக் கண்ணீர் வடிக்கும் இலங்கை அரசு யாழ்ப்பாணத்தில் எனது உடன் பிறப்புக்களான தமிழர்கள் மீது இராணுவத்தை ஏவிவிட்டு பல்லாயிரம் தமிழர்களை கொன்று குவிப்பது ஏன்?**

எந்தக் கண்டனத்தையும் ஜே.ஆர். அரசு தனது காதில் போட்டுக் கொள்ளவில்லை.

படுகொலை நடவடிக்கைகள் தொடர்ந்தன.

அந்தப் படுகொலை நடவடிக்கைகளுக்கு சிகரம் வைத்தது போன்ற ஒரு சம்பவம் சுன்னாகத்தில் நடந்தது.

இரத்தத்தை உறைய வைக்கும் அந்தப் பயங்கரம் அடுத்த வாரம்.

(தொடர்ந்து வரும்...)

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்

## அலசுவது-இராஜதந்திரி

# காலியில் 1915 இல் முஸ்லிம்கள்! 1995 இல் தமிழர்கள்!!

## சமாதான-சகவாழ்வுக்கு ஒவ்வாதவை தலை விரித்தாடும் அபாயம்

இலங்கையின் ஆட்சியாளர்கள் இன சௌஜன்யம் பற்றி எத்தகைய கருத்துக்களை வெளியிட்ட போதிலும் 'கொடிய இனவாதமும், அதனோடு சேர்ந்த வன்முறையும், பேரினவாத சக்திகளிடம் தொடர்ந்து குடிகொண்டிருப்பதனையே காலிப் பிரதேச வன்செயல்கள் புலப்படுத்துவனவாக இருக்கின்றன.

தமிழ் வர்த்தகர்களுடைய உடமைகள், சொத்துக்கள் உட்பட பெருமளவிலான தமிழர்களுடைய உடமைகள் காலியில் இடம்பெற்ற கலவரத்தில் நாசமாக்கப்பட்டுள்ளன. இதன் காரணமாக அங்கே எதுவுமறியாத அப்பாவித் தமிழர்கள் அகதிகளாக மாறியிருக்கக் காணப்படுகின்றனர்.

இனரீதியாக முதல்தடவையாக இலங்கையில் 1915ம் ஆண்டிலேயே வன்முறைகள் வெடித்திருந்தன. அன்று முஸ்லிம் மக்களையே பேரினவாதக் கும்பல்கள் தாக்கின.

எப்.ஆர்.சேனநாயக்கா, டி.எஸ்.சேனநாயக்கா போன்ற அன்றைய முன்னணித் தென்னிலங்கை அரசியல்வாதிகளே நேரில் குதித்து கலகங்களை தூண்டியிருந்தனர்.

அப்போது காலியில் வர்த்தகர்களாக இருந்த முஸ்லிம்கள் பெருமளவில் தாக்கப்பட்டு இம்சிக்கப்பட்டிருந்தனர். இதுதவிர கொழும்பு, கண்டி ஆகிய இடங்களிலும் 1915ம் ஆண்டு கலவரம் பரவியிருந்தது.

1958ம் ஆண்டு முதல் கொண்டு பெரியளவிலான வன்முறையாக வெடித்த இனத்துவேசம், 1977ம் ஆண்டிலும் பின்னர் 1983ம் ஆண்டிலும் தொடர்ந்து, தற்போது உள் நாட்டு மோதல் என்ற போர்வையில் ஒரு யுத்தமாகவும் வெடித்திருக்கக் காணப்படுகின்றது.

இலங்கை சுதந்திரமடைந்த பின்னர் காலத்துக்குக் காலம் பதவிக்கு வந்த அனைத்துத் தேசியக் கட்சிகளும் தமது உறுதிப்பாட்டைப் பேணுவதற்கு இனவாதத்தையே உறுதுணையாகக் கொண்டிருந்தன.

இலங்கையின் தமிழ் பேசும் மக்கள் தமது அடிப்படை உரிமைகள் ஒவ்வொன்றையும் வென்றெடுப்பதற்கு போராட்டங்களையே நடத்தவேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டவர்களாக இருக்கின்றனர்.

ஆரம்பத்தில் காந்தீய அணுகுமுறைகள் மூலமாக நியாயம் கேட்ட தமிழ்த்தலைவர்கள் நையப்புடைக்கப்பட்டு வஞ்சிக்கப்பட்டனர்.

அப்பாவித் தமிழர்களின் உயிர், உடமைகள் பேரினவாதக் காடையர் கூட்டத்தினால் சூறையாடப்பட்டன. கத்திகள், பொல்லுகள், தீப்பந்தங்களுடன் ஆரம்பமான வன்முறைகளே இன்று விமானக் குண்டு வீச்சுக்களாகவும், யுத்த டாங்கிகள், பீரங்கிகளின் வேட்டுக்களாகவும் மாற்றமடைந்துள்ளன.

இந்நிலையில் இன்றைய தீவைப்புப் பேர்வழிகள் பகிரங்கமாகவே வீதியில் இறங்கி தமது கைவரிசையைக் காட்டியுள்ளனர். பொலிஸாரும், பாதுகாப்புப் படையினரும் நன்கு தீபரவி, கடைகள் மற்றும் உடமைகள் வெந்து, பொசுங்கி நாசமான பின்னரே செயலில் இறங்கியுள்ளதாக காலியிலிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

சராசரித் தெருவோரக் காடைத்தனத்தையே தடுத்து நிறுத்தி, உரிய வகையில் சட்டத்தையும் ஒழுங்கையும் பேண முடியாத பாதுகாப்புப் படையினர், வடக்கு-கிழக்கு யுத்தத்தில் வெற்றியீட்டுவதென்பது வெறும் 'பகற்கனவே' என்று சிந்திக்கச் செய்வதாகவே காலிச் சம்பவங்கள் விளங்குகின்றன.



வடக்கு-கிழக்குப் பிரதேசங்களில் ஆயுதப்போராட்டத்தில் ஈடுபட்டுள்ள தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தினர் இராணுவ ரீதியான அணுகுமுறைகள் மூலமாகவே தம்மை இனம்காட்டியிருக்கின்றனர். அந்த இயக்கத்தின் தலைவர் வே.பிரபாகரன் உட்பட அனைத்து உறுப்பினர்களும் பூரண ஆயுதபாணிகளாகவே இருக்கின்றனர்.

இந்நிலையில் இலங்கையின் ஆட்சியாளர்கள் தாம் பதவிக்கு வந்த காலம் முதல், கடந்த ஏப்ரல் 19ம் திகதி மோதல் தவிர்ப்பு ஒப்பந்தம் முறிவடைந்தது வரை மேற்கொண்ட சமரச முயற்சிகளை பின்நோக்கிப் பார்க்க வேண்டியது இன்றியமையாததாகின்றது.

எவ்வகையிலும் நிரந்தர சமாதானத்திற்கான உறுதியான நடவடிக்கைகளை அரசதரப்பினர் மேற்கொண்டிருக்கவில்லை. எல்.ரி.ரி.ஈயினருடன் நடத்திய பேச்சு வார்த்தைகள் கூட உரிய உத்வேகத்துடன் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

கடந்த ஜனவரி மாதம் கொண்டுவரப்பட்ட மோதல் தவிர்ப்பு ஒப்பந்தத்தை மட்டும் தமக்குக் கிடைத்த ஒரு பெரு வெற்றியாக கருதிய தோரணையில் சந்திரிகா ஆட்சியாளர்கள் இருந்தனர்.

மோதல் தவிர்ப்பு அமுலில் இருந்த மூன்றுமாத காலத்தில்கூட நம்பிக்கை தரக்கூடியவகையில் ஆட்சியாளர்கள் எதுவித காத்திரமான பங்களிப்பையும் வழங்கியிருக்கவில்லை.

இலங்கையை ஆட்சி செய்த பிரிட்டிஷ் படையினர் நிலைமையைக் கையாள இந்தியாவிலிருந்தும் துருப்புக்களைக் கொண்டுவந்திருந்தனர்.

1915ம் ஆண்டு கலவரத்தின் போது பிரிட்டிஷ் ஆட்சியாளர்களால் எப்.ஆர்.சேனநாயக்கா, டி.எஸ். சேனநாயக்கா உட்பட பல அரசியல் பிரமுகர்கள் சிறையிலடைக்கப்பட்டனர்.

இவர்களை சிறைமீட்கும் முயற்சியில் அன்று சேர்.பொன்னம்பலம் இராமநாதன் ஈடுபட்டிருந்தார். பிரிட்டனுக்கு கப்பலில் சென்று, பிரிட்டிஷ் ஆட்சியாளர்களுடன் பேச்சுக்களை நடத்தி தமது முயற்சியில் சேர். பொன் இராமநாதன் வெற்றிகண்டிருந்தார்.

இதனையடுத்து புளகாங்கிதம் அடைந்த சிங்கள அரசியல் பிரமுகர்கள் சேர்.பொன் இராமநாதன் பிரிட்டனிலிருந்து தாயகம் திரும்பி கொழும்பை வந்தடைந்த போது, கொழும்பு துறைமுகத்தில், அவரை குதிரை வண்டியில் ஏற்றி தமது கையினாலேயே அவ்வண்டியை இழுத்துச் சென்றிருந்தனர்.

எனவே முஸ்லிம்களுக்கு எதிரான கலவரத்தில் ஈடுபட்டு சிறையிலடைபட்ட சிங்களத் தலைவர்களை அன்று சேர்.பொன். இராமநாதன் காப்பாற்றி அவர்களது அரசியல் எதிர்காலத்தைப் பாதுகாத்தார்.

ஆனால் இன்று இனவாதம் என்பது எந்தவகையிலும் பேரினவாதிகளை விட்டு விலகாத தொன்றாகவே இருப்பதுடன், இலங்கையின் தமிழ் பேசும் சிறுபான்மை இன மக்களை தொடர்ந்து பந்தாடுவதாகவுமே இருக்கின்றது.

வடக்கு-கிழக்குப் பிரச்னைபற்றி ஆட்சியாளர்களும், புத்திஜீவிகளும் பல்வேறு கருத்துக் கண்ணோட்டங்களை, பல்வேறு கோணங்களிலிருந்து வெளியிட்டுள்ள போதிலும், அடிப்படைப் பிரச்னை என்பது கொடிய இனவாதம் சார்ந்ததாகவே இருக்கின்றது.

காலித் தாக்குதல் சம்பவங்கள் விரிவடைவதைத்தடுத்துள்ளதாக அரசு அறிவித்துள்ளது. அத்துடன் காலி வன்முறையில் ஈடுபட்டோர் மீது நடவடிக்கை எடுக்கப்படுமென்றும், பாதிக்கப்பட்டோருக்கு நஷ்டஈடு வழங்கப்படும் என்றும் ஆட்சியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இருந்த போதிலும் காலிச் சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தியிருக்கின்றது. ஏனெனில் இன்றைய சந்திரிகா ஆட்சியாளர்களின் 'கோட்டை'யாகவே காலி, மாத்தறை போன்ற இடங்கள் விளங்குகின்றன.

சென்ற ஆண்டில் இடம்பெற்ற பாராளுமன்றப் பொதுத் தேர்தல், ஜனாதிபதித் தேர்தல் ஆகியனவற்றில் காலி, மாத்தறைப் பகுதிகளிலேயே ஜனாதிபதி சந்திரிகாவின் பொது ஜன ஐக்கிய முன்னணி அரசு பெருமளவிலான வெற்றிகளைப் பெற்றிருந்தது.

எனவே பொது ஜன ஐக்கிய முன்னணி ஆட்சியாளர்கள் தாம் இனவாதிகளல்லர்; நாட்டில் சமாதானத்தையே ஏற்படுத்தப் பாடுபடுவதாகக் கூறிவருகின்ற போதிலும் காலி வன்முறைகள் பொதுஜன ஐக்கிய முன்னணிக் கட்சியினரின் போக்குக் குறித்து விசனமடையச் செய்வதாகவே இருக்கின்றது.

காலியில் தமிழர்களின் கடைகள் நன்கு திட்டமிடப்பட்டு எரிக்கப்பட்டுள்ளன. ஒரே நிரையில் இருந்த கடைகளில், தமிழர்களின் கடைகள் எரிக்கப்பட்ட போது, ஏனைய இனத்தவர்களின் கடைகள் நீர்த்தெளித்துக் காப்பாற்றப் பட்டுள்ளன.

மோதல் தவிர்ப்பு ஒப்பந்தம் முறிவடைந்து இரண்டு மாதங்கள் பூர்த்தியாகின்றன.. இந்த இரு மாதகாலத்தில் யுத்த நிலவரம் ஏற்படுத்திய சங்கட நிலையைச் சமாளிக்க முடியாதவர்களாகவே ஆட்சியாளர்கள் பாதுகாப்பு வரியை 3.5 சதவீதத்திலிருந்து 4.5 சதவீதமாக அதிகரித்துள்ளனர்.

இது தவிர யுத்தச் செலவீனங்களை ஈடுசெய்யும் பொருட்டு பல்வேறு வகையிலும் நிதிசேகரிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள ஆட்சியிலிருப்போர் சட்ட, திட்டங்களை வடிவமைத்துள்ளனர்.

தொலைக்காட்சி, வானொலி என்பவற்றில் இராணுவ சேவைக்கு ஆட்களைச்சேர்க்கும் பிரசாரங்கள் மீண்டும் அடிக்கொரு தடவை தோன்ற ஆரம்பித்துள்ளன.

இராணுவ உயர்மட்டங்களிலும் பல்வேறு மாற்றங்கள் கொண்டுவரப்பட்டு, பூரண யுத்தகால நிலவரத்துக்கே ஆட்சியிலிருப்போர் தயாராகி வருவதனைக் காணமுடிகின்றது.

இந்நிலையில் வடக்கு-கிழக்குப் பிரச்னைக்கான அரசியல் தீர்வு என்பது இன்று ம(றை)றந்து போயுள்ள விடயமாகவே இருக்கின்றது.

அவர்களின் இத்தகைய நிலைப்பாடு தெட்டத்தெளிவாக உலகறிந்ததொன்றாகும். இன்றைய ஆட்சியாளர்கள்கூட எல்.ரி.ரி.ஈயினரின் ஆயுதப் போராட்டத்தை நியாயப்படுத்திய நிலையிலேயே அவர்களுடன் சமரச நடவடிக்கைகளை மேற்கொள்ள முன்வந்திருந்தனர்.

ஆனால் இன்று மோதல் தவிர்ப்பு ஒப்பந்தம் முறிவடைந்த நிலையில் ஆட்சியாளர்கள் எல்.ரி.ரியினரைப் பயங்கரவாதிகள் என்று மீண்டும் சாட ஆரம்பித்துள்ளனர்.

அண்மையில் இலங்கைக்கு விஜயம் செய்த கனேடிய இராஜாங்க அமைச்சரான திரு.ரேமன்ட்சான் (Raymond Chan) இலங்கை நிலவரம் குறித்துக் கருத்துவெளியிட்ட போது, சமாதானம் என்பது எடுத்த எடுப்பிலேயே ஏற்பட்டுவிடக்கூடியதொன்றல்ல. ஏற்ற, இறக்கங்கள் தடங்கல்கள், இடையூறுகள் என்பன அவ்வப்போது தோன்றும். ஆனால் சமாதானத்தில் ஆர்வம் உள்ளோர் அதன் மீது அசைக்கமுடியாத நம்பிக்கையை கொண்டிருக்க வேண்டும். இதன் மூலமே சமாதானம் குறித்த அணுகுமுறைகளை அர்த்தமுள்ளவையாக்க முடியும் என்று குறிப்பிட்டிருந்தார்.

இந்நிலையில் மீண்டும் எல்.ரி.ரியினரைச் சாடிய நிலையில் ஆட்சியாளர்கள் யுத்த முஸ்தீபுகளை ஆரம்பித்திருக்கக் காணப்படுகின்றனர்.

எல்.ரி.ரி.ஈயினர் மோதல் தவிர்ப்பை முறித்துக் கொண்டிருப்பது ஆட்சியாளரைப் பொறுத்தவரை ஒருதலைப்பட்சமான ஒரு நடவடிக்கையாக இருக்கலாம்.

ஆனால் மோதல் தவிர்ப்பு நிலையில் நாட்டை வைத்திருந்த போது உறக்கத்தில் இருந்த எரிமலை யொன்றின்மீது தாம் உட்கார்ந்திருந்த உணர்வையே ஆட்சியாளர்கள் கொண்டிருக்க வேண்டும்.

இன்று மீண்டும்போர்; நிதிசேகரிப்பு, படைக்கு ஆட்சேர்ப்பு, அவசரகாலம், கைதுகள், தடுப்புக்காவல்கள் என்று சமாதான சகவாழ்வுக்கொவ்வாதவை தலைவிரித்தாட ஆரம்பித்துள்ளன.

ஜனநாயகம், மற்றும் அரசியல் அணுகுமுறைகளில் அசையாத நம்பிக்கையை உண்மையிலேயே இன்றைய ஆட்சியாளர்கள் கொண்டிருந்தால் மேற்குறிப்பிட்ட கெடுபிடிகளையே முதலில் முடிவுக்குக் கொண்டுவருவது அவசியமாகின்றது.

இதன்மூலமே அரசியல் அணுகுமுறைகளை தெளிவாகச் சிந்தித்து வடிவமைக்க முடியும்.

# கொல்-கொல்

## கிரைம் ஸ்பெசல்

# டி காலை கொல்

"ஹிட்லரின் தளபதியும் சயனைட் குப்பியும்"

நாடக வடிவில் அசத்தல் என்று பாராட்டுக் குவித்த அனைவருக்கும் நன்றி. அதனால் ஆயிரம் யானைப் பலம்!

இம்முறை பிரான்ஸ் அதிபராக இருந்த டி.கால் வாழ்வில் நடந்த திடுக் சம்பவங்களில் ஒன்று.

30 தடவைகள் அவரது உயிருக்கு குறிவைக்கப்பட்டது.

30 தடவையும் சாவு அவரை நோக்கி வந்து ஒரு சென்ரி மீற்றருக்கும் குறைவான இடைவெளியில் விலகிப்போனது.

இங்கு விபரிக்கப்போவது 31 வது குறி! குறி இலக்கை அடைந்ததா? இல்லை டி கால் தப்பினரா? அறியலாமே!





## தருவது- ரசிகன்

1962 ஆகஸ்ட் மாதத்தின் ஆரம்ப நாட்களில் ஒன்று. ஃபிரான்ஸ் நாட்டின் தலைநகரமான பாரிஸ் நகரத்திற்கு நெருக்கமான புற நகரில் ஒதுக்குப் புறமாய் இருந்த வீடு.

வெளியே இருந்து பார்த்தால் வீடு அடக்கமாய் தெரியும். உள்ளே இருந்தவர்கள் அபாயகரமானவர்கள்.

அவர்கள் மொத்தம் 14 பேர் அந்த அறையில் கூடியிருந்தார்கள்.

அறைக்குள் மெல்லிய வெளிச்சம் மட்டும்! முகங்களை அடையாளம் காணக்கூடிய அளவுக்கு மட்டும் மட்டுப்படுத்தப்பட்ட வெளிச்சம்.

14 பேரும் யாரையோ எதிர்பார்த்துக் காத்துக் கொண்டிருந்தார்கள். சிலர் தமது மணிக்கட்டுத் திருப்பி கடிகாரத்தில் நேரம் பார்த்துக் கொண்டார்கள்.

"சிகரெட் புகைக்கலாமா?" என்றவனை "வேண்டாம், கேணலுக்கு பிடிக்காது, நெடி வீசும்." என்று தடுத்தான்; மழு மழு முகத்தில் சின்னதாய் ஒரு மச்சத்தோடு இருந்தவன்.

தடுக்கப்பட்டவன் சலித்துக் கொண்டான்.

வெளியே காலடி ஓசை கேட்டது. "கேணல்தான்" என்று உள்ளே முணுமுணுப்புக்கள் கேட்டன.

உள்ளே வந்தவர் நல்ல உயரம். தலையின் முன்புறம் முடி உதிர்ந்திருந்தது. மீதியிருந்த முடியை படிய வைத்து அழகாக வாரியிருந்தார். உதட்டில் மீசையில்லை. 'ஹலோ' என்று புன்னகைத்தார்.

பதினாலு பேரும் மரியாதைக்காக எழுந்து, அவர் அமர்ந்தபின்னர் தாமும் அமர்ந்து கொண்டார்கள்.

"மன்னிக்க வேண்டும், இடையிலே ஒரு காரியம் தாமதிக்க வேண்டியதாகி விட்டது."

என்றார் சுத்தமான ஃபிரான்ஸ் மொழியில். அவரை 'கேணல்' என்று அழைத்தார்களே தவிர, அவரது சொந்தப் பெயர் எவருக்குமே தெரியாது.

எங்கே இருக்கிறார், என்ன செய்கிறார் என்பதெல்லாம் இரகசியம்.

அதை அறிய முயல்வது இரகசிய இயக்க விதிகளுக்கு புறம்பானது.

பதினாலுபேருக்கும் ஒரு பொது எதிரி இருந்தார். அவர்தான் ஃபிரான்ஸ் அதிபர் டி.கால்!

டி.கால் மீது ஏன் கோபம்?

ஃபிரான்ஸின் ஆதிக்கத்தில் அடக்க ஒடுக்கமாக இருக்க வேண்டும் அல்ஜீரியா என்று ஃபிரான்ஸ் மக்களில் ஒரு சிறு தொகையினருக்கு கொள்ளை ஆசை.

ஆனால் அதிபர் டி.கால் அல்ஜீரிய நாட்டுக்கு சுதந்திரம் கொடுத்து விட்டார்.

அன்று முதல் டி.கால்மீது "துரோகி" என்று வசை பொழியத் தொடங்கி விட்டவர்களில் மகா துடிப்பானவர்கள் இந்த பதினாலு பேரும்.

இவர்களை இயக்கும் சூத்திரதாரி 'கேணல்'. கேணலுக்கு இன்னொரு புனைபெயர் 'லியோறி'. கேணலுக்கு மேல் இன்னொருவரும் இருந்தார். அவர் பெயர், புனைபெயர், அவர் தோற்றம் எப்படி இருக்கும் என்பதெல்லாம் கேணலுக்கு மட்டுமே தெரியும்.

கேணல் தொண்டையைச் செருமி குரலைச் சரிப்படுத்திக் கொண்டார்.

"நண்பர்களே...துரோகத்தின் உச்சத்தில் நின்று ஊஞ்சலாடிக் கொண்டிருக்கிறார் அதிபர் டி.கால்!

நம் முன்னவர்கள் உதைபந்து போல அடித்து விளையாடிய அல்ஜீரியாவை பத்திரமாக திருப்பிக் கொடுத்த பாதகச் செயல் பற்றி ஒரு மில்லிமீற்றர் வருத்தம் கூட டி.காலுக்குக் கிடையாது."

சொல்லிவிட்டு எல்லோர் மீதும் தனது விழிகளை ஓட விட்டார் கேணல்.

எல்லோர் முகங்களும் இறுக்கமாகியிருந்த திருப்தியில் தொடர்ந்து பேசினார் கேணல்;

"ஏற்கனவே ஏழு தடவைகள் குறிவைத்தோம். அதிஷ்டம் அதிபருக்கு சாதகமாக இருக்கிறது. தப்பிக்கொண்டார்! அதனால் உங்களுக்கும் சோர்வு வந்திருக்கலாம். தவறு! முயற்சியே உயர்ச்சி!"

14 பேரில் ஒருவன் பொறுமையை தொலைத்து விட்டதால், சலிப்பான குரலில்;

"அதெல்லாம் ஓ.கே. கேணல்! காதலிக்கு ஒரு முத்தம் கொடுக்கவே எத்தனை முயற்சி தேவையாக இருக்கிறது. சாவால் முத்தமிடும் முயற்சிக்கு அதைவிட முயற்சி தேவைதானே"

சிரிப்பொலி அறையை நிரப்ப கேணலின் பார்வை அவர்களின் சிரிப்பை ஒத்தி அணைத்தது. அவனும் சிரிப்பை மூடி விட்டு,

"கேணல், புதிய திட்டம் இருந்தால் சொல்லுங்கள். விளையாடி ரொம்ப நாளாகிறது."

கேணல் புன்னகைத்தார்.

"குட்! இதற்காகத்தான் இளைஞர்களை நான் நம்புகிறேன். நேசிக்கிறேன்! திட்டம் ரெடியாக இருக்கிறது நண்பர்களே!"

எல்லோர் முகங்களிலும் பளிச்சென்று உற்சாகம் தெரிந்தது. பெறுமதியான திட்டத்தைக் கேணல் கையோடு தான் கொண்டுவந்திருக்கிறார். திட்டம் இப்போது அவிழப்போகிறது. காணும் ஆவல் அறை முழுக்க ஆக்கிரமித்தது.

"ஒரு நிமிஷம் மன்னித்துக் கொள்ளுங்கள்."

கேணல் எழுந்து தொலைபேசி அருகே சென்றார். தான் சுழற்றும் இலக்கங்களை அவர்கள் பார்த்துவிடக் கூடாதென்ற ஜாக்கிரதையோடு தொலைபேசியை தன் முதுகு மறைக்கக்கூடியதாக நின்று இலக்கம் சுழற்றி "ஹலோ" என்றார்.

"திட்டத்தை இன்றே விளக்கலாம் என்றே நினைக்கிறேன். மாற்றம் எதுவும் இல்லையே?"

"........." மறுமுனை ஏதோ சொல்லியது.

"மாற்றம் கிடையாது" என்றிருக்க வேண்டும்.

கேணல் "ஓ.கே. இம்முறை மரணத்தின் முத்தச் சுவையை டி.கால் அறிவார். ஆனால் ஒரு...ஒரேயொரு கவலை..." என்றார்.

"......."

"சுவை எப்படி என்று சொல்ல டி.கால் இருக்கமாட்டாரோ!" சிரித்து "ஓ.கே....தாங்யூ" என்று றிசீவர் சாத்திவிட்டு வந்து அமர்ந்துகொண்டார்.

"அனுமதி கிடைத்து விட்டது, சொல்லப் போகும் திட்டம் நெஞ்சில் மிகப் பத்திரமாக இருக்க வேண்டும்."

"சந்தேகமா?"

"நோ..நோ..முன்னெச்சரிக்கை.

உங்கள் நெஞ்சில் மேயும் காதலியின் உதடுகளுக்கும் காதிருக்கலாம் என்பதை மறந்து விடக்கூடாது. ஏன் சொல்கிறேன் என்றால் உங்கள் வயது அப்படி. பொல்லாத குளிர் வேறு!"

கேணல் கண்ணடித்தார். தொடர்ந்தார்.

"ஆகஸ்ட் 22..."

மிக இரகசியமான குரலில் சொல்லிவிட்டு கேணல் மர்ம நொடிகளை ஏற்படுத்தினார். 14 இல் ஒருவன்.;

"அன்று என்ன நடக்கப் போகிறது?"

"பிரியமான எங்கள் எதிரிக்கு பிரியாவிடை!"

"நீண்டநேர அவஸ்தைக்கு பின்னர் ஒரு சிகரெட் புகைத்தது போல் இதமாக இருக்கிறது"

அடுத்தவன் குறுக்கிட்டு;

"மடையா, நீண்ட நேரம் போராடி காதலியிடம் அனுமதி வாங்கியது போல் இருக்கிறது என்று சொல். அதுதான் நல்ல உதாரணம்."

"எதற்கு அனுமதி?" கேலியாய் இன்னொருவன் கேட்க, கேணல் சினமானார்.

"டியர் நண்பர்களே, இந்த இடத்தில் மட்டும்தான் இளைஞர்களை எனக்குப் பிடிப்பதில்லை. கவனத்தை சிதறவிட்டு விடுகிறீர்கள். தப்பு. மகா தப்பு! திட்டத்தைக் கேளுங்கள்."

அனைவரும் சீரியசாகி "சொல்லுங்கள் கேணல்" என்றனர் ஆவலாய் ஒரே குரலில்.

கேணல் திட்டத்தை விபரித்தார்.

கேட்டவர்கள் உறைந்து போயினர்.

***

ஆகஸ்ட் 22, இரவு சரியாக எட்டு மணி.

கம்பீரமான தோற்றத்தோடு அதிபர் டி.கால் தனது அலுவலகத்திலிருந்து புறப்பட ஆயத்தமானார். கூடவே டி.காலின் மனைவியும் வந்தார்.

"நீயும் நம்மோடு வரலாமே"

என்றார் தன் மருமகனைப் பார்த்து டி.கால். அவர் புறப்பட்டார்.

பாதுகாவலர்கள் உஷாரானார்கள்.

டி காலின் ஒவ்வொரு பயணத் திட்டமும் மிக இரகசியமாக வைக்கப்பட்டிருக்கும்.

டி காலின் பாதுகாப்புக்கு பொறுப்பான பாதுகாவலர்கள் அடங்கிய குழுவில் உள்ள முக்கிய அதிகாரிகள் சிலருக்கு மட்டுமே தெரிந்த இரகசியம் அது.

காரில் விமான நிலையம் சென்று அங்கிருந்து ஒரு விமானம் மூலம் தனது வீட்டுக்கு டி கால் செல்வதுதான் பயணத் திட்டம்.

அலுவலகத்தில் இருந்து விமான நிலையம் அருகில்தான் இருந்தது. பாரிஸ் நகரில் இருந்து 150 மைல் தொலைவில் பாதுகாப்பான இடத்தில் டி காலின் வீடு இருந்தது.

விமான நிலையத்திற்கு அழைத்துச் செல்ல கறுப்புநிறக் கார் தயாராக நின்றது.

அதிபர் டி காலும், அவர் மனைவியும் காரின் உள்ளே பின்புறம் அமர்ந்து கொண்டனர். முன்புற இருக்கைகளில் அதிபர் டி காலின் மருமகனும், மெய்ப்பாதுகாவலர் ஒருவரும் அமர்ந்தனர். சாரதி வண்டியைக் கிளப்பினார்.

வண்டியின் முன்புறம் இரு மோட்டார் சைக்கிள்களில் பாதுகாவலர்கள் சென்று கொண்டிருந்தனர். வண்டியை தொடர்ந்து பின்புறமும் இரு மோட்டர் சைக்கிள்களில் பாதுகாவலர்கள்.

விமான நிலையம் அண்மிக்கப் போகிறது, 'அப்பாடா இடையில் ஒரு பிரச்சனையுமில்லை' என்று டி காலின் கார் சாரதி நினைத்த நொடியில், மஞ்சள் நிற வண்டி ஒன்று வேகமாக வந்துகொண்டிருந்தது.

டி காலின் காரை முந்திச் செல்ல அந்த மஞ்சள் வண்டி அவசரப்பட்டது.

மஞ்சள் வண்டிக்குள் இருவர் அமர்ந்திருந்தனர். ஒருவன் இயந்திரத் துப்பாக்கி வைத்திருந்தான்.

மஞ்சள் வண்டிக்கு இடம் கொடுத்து டி காலின் கார் ஒதுங்க,

மஞ்சள் வண்டி டி காலின் கார் அருகே வந்தபோது, அதற்குள் இருந்து இயந்திரத் துப்பாக்கி நீண்டது.

டி காலுக்கு குறிவைத்து இயந்திரத்துப்பாக்கி வேட்டுக்களைத் தீர்த்தது.

அதே சமயம் டி காலின் காருக்கு பின்புறமாய் இன்னொரு கார் வந்து, அதற்குள் இருந்தும் துப்பாக்கிகள் முழங்கின.

டி காலின் காரின் பின் சக்கர ரயர்களைக் குறிவைத்து பறந்து வந்தன வேட்டுக்கள்.

ரயர்கள் இரண்டும் வெடித்தன. ஆனாலும் டி காலின் சாரதி வண்டியை நிறுத்தவில்லை.

காருக்குள் இருந்த டி கால் மகா துணிச்சலாய் நிதானமாய் இருந்தார்.

மருமகன் கத்தினார்.

"வேட்டுக்களைப் பொழிகிறார்கள். தலையைக் குனிந்து கொள்ளுங்கள்!"

டி கால் காதில் விழாதது போல அப்படியே அமர்ந்திருந்தார்.

தொடர்ந்து பொழியப்பட்ட வேட்டுக்களில் ஒன்று டி காலின் தலையை நோக்கி கச்சிதமாகப் பறந்து வந்தது.

அப்போது டி கால் என்ன செய்தார்?

**(வரும் வாரமும் வரும்)**

---

அறிந்து கொள்ளுங்கள்—ஆரோக்கியம் பெறுங்கள்—ஆனந்தமாய் வாழுங்கள்

# மருத்துவ ╋ விந்தைகள்

## தெரியுமா



★ சளித் தொல்லையா? தூங்கச் செல்லும் முன்பு சிறிதளவு வெந்தயம் சாப்பிட்டு ஒரு டம்ளர் வெந்நீர் குடித்தால் சளித் தொல்லை நீங்கிவிடும்.

★ காலையில் வெறும் வயிற்றில், ஊறவைத்த வெந்தயத்தை சாப்பிட்டு விட்டு எவ்வளவு நேரம் வெய்யிலில் நின்று வேலை செய்தாலும் நாக்கு வறண்டு போகாது.

★ நெல்லிக்கனிகளை அரைத்து அதில் எலுமிச்சம் பழச் சாற்றைக் கலந்து தலையில் தேய்த்துக் குளித்தால் முடி உதிர்வது நின்று விடும்.

★ வாய்ப்புண்ணா....மணத்தக்காளி சாப்பிட்டால் வாய்ப்புண், குடற் புண் போன்றவை குணமாகும்.

★ மழை நேரத்தில் நட்டுவாக்காலி தொல்லை இருக்கும். நட்டுவாக்காலி கொட்டி விட்டால் உடனே ஒரு துண்டு தேங்காயை மென்று விழுங்கி விடுங்கள். விஷம் இறங்கிவிடும்.

★ அடிக்கடி கோபப்படுவது எதைப்பார்த்தாலும் ஏக்கம் கொள்வது அதிகமான கவலை மன உளைச்சல் இவையெல்லாம் நீரிழிவு நோய்க்கு வழிவகுக்கும்.

★ வெண்டைக்காய், பீற்றூட், பொடி செய்த கரட், வெங்காயம், தக்காளி, வெள்ளரிப்பிஞ்சு போன்றவைகளை பச்சையாக சாப்பிட்டால் உடம்புக்கு நல்லது.

★ எலுமிச்சை இலைகளை நசுக்கி சாறெடுத்து தண்ணீருடன் கலந்து சிறிது உப்புப் போட்டுக் குடித்தால் பித்த வாந்தி நிற்கும்.

★ மாதுளம் பூ மொட்டுக்களை வெய்யிலில் உலர்த்தி இடித்துப் பொடியாக்கி தினமும் ஒரு சிட்டிகை அளவு சாப்பிட்டால் தீராத இருமலும் தீர்ந்து விடும்.

★ ஆவாரம் பூவை பச்சைப் பயறுடன் சேர்த்து சமைத்துச் சாப்பிட்டால் சிறுநீருடன் இரத்தம் வெளிவருவது நின்றுவிடும். தணியாத தாகமும் தணியும்.

★ வாய்ப்புண்ணுக்கு கொப்பரைத் தேங்காயை மென்று தின்றால் குணமாகும்.

★ பாம்பு கடித்தவர்களுக்கு வாழைப்பட்டையை நன்றாகப் பிழிந்து அந்தச் சாற்றை அவர்களுக்கு குடிக்கக் கொடுத்தால்... விஷம் உடனே இறங்கும்.

★ குழந்தை கொழு கொழுவென ஆரோக்கியமாக வளர பாலில் மூன்று காய்ந்த திராட்சையைப் போட்டு வடிகட்டி கொடுத்து வந்தால் குழந்தை திடகாத்திரமாக இருக்கும்.

★ வெள்ளரித்துண்டுகளை கண்கள் மீது வைத்துக் கட்டினால் கண்கள் புத்துணர்ச்சி பெறும்.

★ முட்டையின் வெள்ளைக் கருவை தலையில் தேய்த்துக் குளித்து வந்தால் தலைமுடி உதிர்வது நிற்கும். முடியும் அடர்த்தியாக வளரும்.

★ தெளிந்த மழைநீரில் முகம் கழுவினால் முகம் புத்துணர்ச்சி பெறும்.

---

## மூலிகையால் சாகசம்
## 106 வயதில் ஒரு வாலிபர்



முதுமூப்பன்

இந்தியாவில் கேரள மாநிலத்தில் இருப்பது பாலக்காடு ஜில்லா.

அங்கே ஒரு கில்லாடி வைத்தியர் இருக்கிறார். அவர் பெயர் முதுமூப்பன்

நாட்டு மூலிகையை வைத்து பயங்கரமான நோய்களை எல்லாம் குணப்படுத்தி வருகிறார்.

மூப்பனுக்கு வயது 106.

மூலிகை உபயத்தில் இன்னும் இளமையோடு இருப்பதற்கு சாட்சி, அவர் சேமித்து வைத்துள்ள 14 மனைவிகள்.

மூலிகைகளை எக்கச்சக்கமாக நம்பும் மூப்பன் இன்னமும் திருமணம் செய்யத் தயார் என்கிறார்.

மூப்பன் சொல்லியுள்ள மற்றொரு இரகசியம் கேளுங்கள்; "மூலிகைகளை வைத்துத்தான் பெண்களை மயக்கினேன்" என்கிறார் 106 வயது இளைஞர்.

இந்திய ஜனாதிபதி சஞ்சீவ ரெட்டிக்கும் மூலிகை மருந்து கொடுத்துள்ளாராம் மூப்பன்.

மூப்பனுக்கு கேரள ஆளுநர் ராச்சையா பொன்னாடை போர்த்தி பாராட்டியுமிருக்கிறார்.

ஆனால் ஒரு விசயம்; எந்த மூலிகையால் எந்த நோய் குணமாகும் என்ற விசயத்தை மட்டும் வெளியே சொல்லவே மாட்டார். மூச்!

மதம் பிடித்த யானையைக் கூட மூலிகையைப் பயன்படுத்தி அடக்க முடியும் என்று மூப்பன் சொல்வது 'கப்ஸா' அல்ல.

ஊருக்குள் வந்து அட்டகாசம் செய்த காட்டு யானையொன்றை அடக்க மூப்பனைக் கூப்பிட்டார்கள். மூலிகையோடு போனார் மூப்பன். யானை சரண்டர்!

வாழ்க மூப்பன் 14 பாரியார்களோடும்! (தற்போதைய நிலவரம் மட்டுமே 14)

www.padippakam.com

நன்றி - நூலகத்திட்டம்

# பிறந்தது இங்கே-பிரசவித்தது அங்கே!



இரண்டுக்கு மேலே எப்போதும் வேண்டாம் என்று இவர்களும்தான் நினைத்தார்கள். ஆனால் கொடுக்கும் தெய்வத்துக்கு குடும்பக் கட்டுப்பாடு தெரியவில்லையே! ஒரே 'டிலிவரி'யில் மூன்று வெளியீடுகளை அனுப்பி விட்டானே. கனடாவில் மூன்று குழந்தைகளை ஒரே பிரசவத்தில் வெற்றிகரமாகப் பிரசவித்த தாய்மார்களுக்கு ஒரு விழா நடந்தது. அதில் நாம் பெருமைப்படவும் நியாயம் உண்டு. படத்தில் இடதுபுறத்தில் இருப்பவர் இலங்கைத் தமிழ்ப் பெண். பெயர் திருமதி கலைமதி கோபாலபிள்ளை. மூன்றும் பெண் குழந்தைகள். வைஷ்ணவி, ராகவி, பார்கவி என்று அழகாகப் பெயர் வைத்துள்ளார்கள். பிறந்தது இங்கே. பிரசவித்துச் சாதனை அங்கே. கைகொடுங்கள் கலைமதி!

## தகவல் பெட்டி

ஒலிம்பிக் விளையாட்டுப் போட்டிகள் பல்லாயிரம் டொலர்களை விழுங்கிவிட்டுத்தான் களை கட்டத்தொடங்குவதுண்டு.

ஒரு சில விநாடிகள் மட்டுமே அரங்கில் தோன்றி நமது விழிகளை விரியவைக்கும் நிகழ்ச்சிகளும் ஒலிம்பிக்கில் உண்டு.

அந்த விநாடிகளுக்காக ஒத்திகை பார்க்கவே பல நூறு மணிநேரம் கரைந்து போகிறது. பணம் தண்ணீராய் பாய்கிறது.

ஆனாலும், சாகசம் செய்யும் வீரர்களுக்கு காசுபணம் பெரிதல்ல, கண்விரிந்து மெய் மறந்து பார்வையாளர்கள் அம்மாடியோவ் என்று வியப்பின் உச்சம் தொட்டு கரேகாசம் செய்வதுதான் பெரிதிலும் பெரிது.

படத்தில் இருப்பது 1982 இல் மொஸ்கோவில் நடந்த ஒலிம்பிக்கில் பல நூறு ஆண்களும், இளம் பெண்களும் இணைந்து செய்து காட்டிய அரியசாகசம். படத்தில் பார்க்கும் போதே மனதுக்குள் 'அம்மாடியோவ்' என்று கூவல் கேட்கிறதா?

## பணம் என்னடா பணம் - பணம். பரவசம் தானடா பெரும் தரம்!





## இளம்கன்றில் துடிப்பிருக்கு

வெளிநாடுகளில் அநேகமாக வீட்டுக்கு ஒரு தொலைபேசி இருந்தாலும் வீதிகளிலும் தொலைபேசிக் கூண்டுகள் இருக்கும்.

கடைக்குச் சென்றபோது வாங்கவேண்டிய பொருட் பட்டியல் மறந்து விட்டது. போனில்கேட்கலாம் அம்மாவிடம். கூண்டோ உயரத்தில். இளம்கன்று துடிப்பானது. ஒரே தாவல். "ஹலோ அம்மா"

## ஆளைவிட உயரமான பெருமை



உயரம் எப்படித்தான் அளந்தாலும் 20 அங்குலத்திற்கு மேல் போகாது. உலகில் மிகவும் குள்ள மான பெண்களின் பட்டி யலில் தன் பெயரும் இருப் பதில் மகா உயரமான பெருமை. பெயர்; கார்சி பவ். 1958 இல் இந்தோனேசியாவில் பிறக்கும் போது எடை 4 இறாத்தலும் இரண்டு அவுன்சும். இப்போதும் ஒன்றும் அதிகமில்லை, 12 இறாத்தல் மட்டும். திருமணம் பற்றிக் கேட்டால்; வறட்சியாய் சிரித்து விட்டு மழுப்பலாய் சொல்வது; "எனக்கா -திருமணமா? நான் என்றும், என்றென்றும் குழந்தை."சரிதான்!

# சினி விசிட்

## பாடல் இல்லாத படம்

கமலஹாசன் தமிழ், தெலுங்கு மொழிகளில் தயாரித்து நடிக்கும் 'துரோகி' படத்தில் பாடல்களே கிடையாதாம்.

சத்யராஜ் நடிக்க கமல் தயாரித்து வெற்றிகரமாக ஓடிய படம் 'கடமை, கண்ணியம், கட்டுப்பாடு.' அந்தப் படத்திலும் பாடல்களே இருக்கவில்லை.

துரோகி படத்தின் திரைக்கதை, வசனத்தை கமலஹாசன் எழுதியுள்ளார் நாயகன், தேவர் மகன் படங்களில் சிறப்பாக ஒளிப்பதிவு செய்து கமலின் பாராட்டுப் பெற்றவர் பி.சி.ஸ்ரீராம். துரோகி படத்தில் பி.சி.ஸ்ரீராம் ஒளிப்பதிவும் செய்து, படத்தையும் இயக்குகிறார்.

பதவி உயர்வு!

## கௌரவ அர்ஜுன்!

கமலஹாசனுடன் தெலுங்கில் 'துரோகி' படத்தில் கௌரவ வேடத்தில் நடித்துள்ளார் அர்ஜுன். "கமல் எவ்வளவு பெரிய நடிகர். அதனால் தான் கௌரவ வேடத்தில் நடிக்கச் சம்மதித்தேன்" என்கிறார் அர்ஜுன்.



இந்திரஜா
படம்-இருட்டு ராணி 420



பொன்மகள் காதல் அன்னம்
பூ மகள் கண்கள் மின்னும்
நெஞ்சமே துள்ளும் வண்ணம்
கொஞ்சவாள் தங்கக் கிண்ணம்!
கவியரசு கண்ணதாசன்.

ரகுவரன்
படம்-மா...

## நக்மா ஏன் போனார்?

கவர்ச்சிப் புயல் நக்மா தற்போது மையம் கொண்டிருப்பது சென்னையில். அங்கேயே ஒரு வீடுபிடித்து தங்கியிருக்கிறார்.

அவரது அயல் வீட்டில் திருமணம். திருமண உபயோகத்திற்காக தன் வீட்டை இரவல் கொடுத்துவிட்டு நட்சத்திர விடுதியில் போய் ஒரு மூன்று நாட்கள் தங்கினாராம் நக்மா.

நக்மாவின் தாராள நெஞ்சத்தைப் புரிந்து கொள்ளாமல் சிலர் கதை கட்டிவிட்டார்களாம். 'நட்சத்திர விடுதியில் கும்மாளம்' என்று கிசு-கிசு. அதை நினைத்து இப்போதும் வருத்தப்படும் நக்மா நிருபர்களைக் கண்டால் முகம் சுளிக்கிறாராம்.



'மருமகன்' படத்தில் கார்த்திக்-மீனா

## வடிவேலு...

'நான் ஒரு இந்தியன்' ... வருகிறார் வடிவேலு. துப்... போது விதம் விதமாக வேடம் ... வடிவேலு நடிக்கும் அந்த ... வருகிறதல்லவா.

வெளிநாட்டுப் பெண், கிராமத்து ... பிச்சைக்காரன், மாணவன், கிராமத்து ... பெண் வேசம் தான் அதிகம் ... சுவாரசியம்.

கணவன் வடிவேலுவும், மனைவி ... காட்சி உண்டாம்.

சொந்தக் குரலில் வடிவேலுவே ... குரல் கொடுத்திருக்கிறார்

ஏற்கனவே 'நவராத்திரி' படத்தி...

## கை நிறைய

தற்போது பிஸியாகவுள்ள இசை... வித்யாசாகர். அவர் இசையமைத்து ... 'விலாதி வில்லன்', 'செங்கோட்டை' ... கொடி' 'இந்தியன் 1995', 'மாஸ்டர்' ...

## மினி சினி

- தெலுங்கு 'நாட்டாண்மை'யான 'பெத்தராயுடு'வில், தமிழில் விஜயகுமார் நடித்துள்ள வேடத்தில் நடித்துள்ளார் ரஜினி. 'எஜமான்' படத்தில் துண்டைச் சுழற்றித் தோளில் போடும் ஸ்டைலை 'பெத்தராயுடு'வில் ரஜினி செய்கிறார்.
- பிரியதர்ஷன் இயக்கத்தில் மலையாளத்தில் பிரபு-மோகன்லால் நடிக்கும் 'காலாபாணி' படத்தில் இந்தி நடிகை தபு கதாநாயகியாக நடிக்கிறார். அத்துடன் இந்தி நடிகர் அம்ரீஷ்பூரி 'சேனாபதி'வில்லன்றும் நடிக்கிறார்.
- ரகுமான்-நிரோஷா ஜோடியாக நடிக்கும் 'வசந்தம்' என்ற படத்தைத் தயாரித்து வரும் டி.என்.ரவிமாறன், இந்தப் படத்தில் நகைச்சுவை வேடமொன்றில் கோவை சரளாவுடன் இணைந்து நடிக்கிறார்.
- தெலுங்கில் சிரஞ்சீவி நடித்து வெற்றிகரமாக ஓடிக்கொண்டிருக்கும் 'அல்லுடு மஜாகா' தமிழில் 'மாஸ்டர் பிளான் 95' என்ற பெயரில் மொழி மாற்றப்படவிருக்கிறது. ஏற்கெனவே அருண்பாண்டியன் நடிக்க 'மாஸ்டர் பிளான்' என்ற பெயரில் தமிழில் ஒரு படம் தொடங்கப்பட்டுள்ளது.
- 'பம்பாய்' படத்தில் அரவிந்தசாமியின் தங்கையாக நடித்த ப்ரீஷா 'இளையராகம்' என்னும் படத்தின் மூலம் கதாநாயகியாகிறார். 'செந்தூரப்பூவே' படத்தை இயக்கிய பி.ஆர்.தேவராஜ் இந்தப் படத்தை இயக்குகிறார்.
- 'புதிய மன்னர்கள்' எதிர்பார்த்தளவு வெற்றியைப் பெறாத நிலையில் கைவசம் படங்கள் எதுவும் இன்றி இருந்த இயக்குநர் விக்ரமனுக்கு, சுப்பர் குட் பிலிம்ஸ் நிறுவனம் படம் ஒன்றை இயக்கித் தரும்படி கேட்டுள்ளது.
- 'கிழக்குக் கரை' படத்தில் பிரபுவுக்குத் தங்கையாக அறிமுகமாகி 'தங்கராசு', 'தாமரை' போன்ற படங்களில் நடித்துள்ளார் பூரணி. தற்போது இவர் நடித்து வரும் 'டேக் இட் ஈசி ஊர்வசி' என்ற படத்தில் தனது பெயரை ராஜேஸ்வரி என்று மாற்றிவைத்துள்ளார்.
- சரத்குமார் நடிப்பதாக இருந்த 'மூக்குத்திகாசி' கைவிடப்பட்டதைத் தொடர்ந்து, பவித்ரன் அடுத்து இயக்கும் படத்தில் மலையாள நடிகர் சுரேஷ்கோபி நடிக்க இருக்கிறார்.
- 'சிருஷ்டி' என்ற பெயரில் தமிழ்-தெலுங்கு ஆகிய இரு மொழிகளில் புதிய படமொன்று தயாராகி வருகிறது. இந்தப் படத்தில் மதுபாலா கதாநாயகியாக நடிக்கிறார்.
- விஜயகாந்த் நடிக்கும் 'காந்தி பிறந்தமண்' படத்தை ஆர்.சுந்தர்ராஜன் இயக்குகிறார். இந்தப்படத்தில் ஆர்.சுந்தர்ராஜன் மகன் மாஸ்டர் அசோக் குட்டி விஜயகாந்தாக நடிக்கிறார்.
- 'மிஸ்டர். ரோமியோ' படத்தில்ஒரேயொரு பாடல் காட்சியில் நடனமாட முன்னணி கதாநாயகிகளை அணுகினார் தயாரிப்பாளர். பலர் மறுப்பு தெரிவித்து விட்டனர். கடைசியாக சங்கவி நடனமாட ஒப்புக் கொண்டுள்ளார்.
- மணிரத்தனத்தின் எல்லாப் படங்களுக்கும் கலை இயக்குநராகப் (ஆர்ட் டைரக்டர்) பணியாற்றிய, தோட்டாதரணி ஒரு படத்தினைத் தயாரிக்கவுள்ளார். இப்படத்தை பரதன் இயக்குவார்



www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்

# ஸ்ரீதேவி நழுவ விட்ட புளியங்கொம்பு.

சென்னையில் இப்போதெல்லாம் அதிக நாட்கள் தன்து வீட்டில் இருக்கிறார் ஸ்ரீதேவி. பென்றால் எப்போதாவது ஒரு முறைதான் சென்னைப்பக்கம் தலைக்காறுப்பைக் காட்டுவார். பம்பாயில் நம்பர் வன் இடத்தில் இருந்தபோது அந்த மாதிரி பிஸி.

இப்போது ஸ்ரீதேவியின் இடத்தை நிரப்ப பல நடிகைகள் புகுந்துவிட்டார்கள்.

ஸ்ரீதேவிக்கு அதனால் பாரிய மனக்கவலைகள் இல்லை என்று சொல்லப்பட்டாலும் ஸ்ரீதேவியின் வீட்டாருக்கு ஒரு குறை.

ஸ்ரீதேவி பிஸியாக இருந்த போது டென்னிஸ் வீரரும் ஹொலிவூட் படத்தயாரிப்பாளருமான அசோக் அமிர்தராஜுடன் அவரை இணைத்துக் கிசு கிசு பரவியது.

கிசு கிசுவில் உண்மை இல்லாமலில்லை.

அசோக் அமிர்தராஜும், ஸ்ரீதேவியும் நெருக்கமாய் பழகினார்கள். இருவருக்கும் டும் டும் கொட்ட ஸ்ரீதேவி வீட்டாருக்கும் விருப்பம்தான். ஆனால் மோகம் முப்பதுநாள் என்பதுபோல அசோக் அமிர்தராஜ் ஸ்ரீதேவியிடமிருந்து விலகிக்கொண்டார். அப்போது அது ஒரு பெரிய விசயமாக தெரியவில்லை.

இப்போது மார்க்கெட் டல்லடிக்கும்போதுதான் புளியங்கொம்பையும் தவறவிட்டுவிட்டோமே என்று ஸ்ரீதேவி வீட்டாருக்கு லேசான வருத்தமாம்.

இன்னொரு தகவல், ஸ்ரீதேவிக்கு மணமகன் தேடும் படலம் நடக்கிறது. நல்ல வரன் அமைய வேண்டும் என்று ஸ்ரீதேவி வீட்டார் விசேஷ பூஜை ஒன்றும் நடத்தியுள்ளார்களாம்.

## முறைமாமன்

கதை என்று பாராட்ட பெரிதாக ஒன்றுமில்லை. ஜெயராம்-குஷ்பு-கவுண்டமணி கூட்டணிதான் பிரதான பங்கு வகிக்கிறது.

ஜெயராமும், கவுண்டமணியும் அண்ணன் தம்பிகள். இருவரும் சேர்ந்து போடும் கும்மாளம் படம் முடியும்வரை நீள்கிறது. அதனால் அறியப்படுவது யாதெனில், நகைச்சுவையை அதிக பட்சமாக நம்பி படமெடுத்துள்ளார்கள்.

வில்லன் காசன்கான் நிறைவாகச் செய்திருக்கிறார். குஷ்பு இதில் குடும்பப் பூவாக வந்தாலும் பாடல் காட்சிகளில் கிளு-கிளு பண்ண வாய்ப்புக் கிடைத்திருக்கிறது. மனோரமாவுக்கு வழக்கம் போல அம்மா வேசம். அது அவருக்கும் அலுக்காது. நமக்கும் அலுக்காது. ஆச்சியா கொக்கா?

இயக்குநர் சுந்தருக்கு இதில் லாபம் இரண்டு. ஒன்று அபாரமாக இயக்குநர் தகுதி. இரண்டு குஷ்புவின் நட்பு.

இசை வித்யாசாகர். ஜெய்ஹிந்த், கர்ணா படங்களின் பின்னர் முறைமாமனும் அவருக்கு கைகொடுக்கும்.

## யாருக்கு வெற்றி

பெயர்களைக் குறித்துக் கொள்ளுங்கள்: மீனா, ரோஜா, நக்மா, ரம்யா, சவுந்தர்யா,

ஊஹா (சிவரஞ்சனிதான்) ஆம்னி, எல்லோருமே தமிழ் பட ரசிகர்களுக்கு அறி உடலான...மன்னிக்கவும் அறிமுகமான நடிகைகள்தான்.

இவர்கள் எல்லோரும் இப்போது தெலுங்குப் படவுலகில் கவர்ச்சிப் போட்டியால் ரசிகர்களை திணறவைத்துக் கொண்டிருக்கிறார்கள். சரி, வெற்றி யாருக்கு என்பீர்களே: சொன்னால் நம்பமாட்டீர்கள், வெற்றி ஆம்னிக்குத்தான். அசத்தல் அந்த மாதிரியாம்!

## விலகலாம்..... ஆனால்..

ஆடியது போதும் என்று ... நடவைகள் முடிவுசெய்திருக்கிறார் சில்க்கு சுமிதா. ஒரு முறை கூட முடிவு உறுதியாக இருந்தது விடையாது... இப்போது மீண்டும் விலகும் முடிவு பற்றி பேசத் தொடங்கியிருக்கிறார். விலகலாம்தான் ஆனால் ரசிகர்கள் தாங்க மாட்டார்களே என்று வருத்தப்படுகிறாரோ சில்க்கு!

## ஷர்மிளி மறக்காதது

நடிகை ஷர்மிளியிடம் "நீங்கள் நடித்த படங்களில் மறக்க முடியாத காட்சி எது என்று கேட்டால் வெட்கப்படுகிறார். வெட்கம் ஏன்? அவரே விளக்குகிறார்:

"சினிமாவைப் பொறுத்தவரை நான் நடித்த முதலிரவுக் காட்சி ஒன்றை மறக்க முடியாது.

'மணிக் குயில்' படத்தில் எனக்கும் கவுண்டமணிக்கும் முதலிரவுக் காட்சி. அவர் எதைக் கேட்டாலும் என் காதில் விழாது. காதுகேளாத பெண் வேசம் தன... கேள்விகளுக்கு நான் செய்... சைகைகளைப் பார்த்துவிட்டு கவுண்டமணி "ஆ... பெண்ணுக்கு என்ன அடக்கம்" என்று பாராட்டுவார். ஆனால் நானோ "நான் ரெடி நீங்கள் ரெடியில்லையா?" என்பேன். அப்போதுதான் நா... செவிட்டுப் பெண் என்று கவுண்டமணிக்கு தெரியு... காட்சி படு அமர்க்களமா... முடியும்." என்ற ஷர்மிளியின் முகத்தில் எக்கச்சக்கமா... வெட்கம். அட இதுக்குப் போய் வெட்கப்படலாமா?


விஜயகுமார்-ஸ்ரீவித்யா
படம்-தமிழச்சி

## ரஜினியின் பொலிசி

தான் நடிக்கும் பட... களின் பாடல் காட்சி கள... தமிழநாட்டில் வைத்துப் படமெடுக்க ரஜினி விரும்புவதில்லையாம். ரசிகர்கள் மொய்த்துக் கொள்வார்கள் என்பதால் வெளி மாநிலங்களில் படப்பிடிப்பு நடத்த விரும்புகிறாராம்.


மனீஷா கொய்ராலா
படம்-எல்லாமே என் காதலி

## முகப்பில்

ரவீனா டாண்டன்

ஸ்ரீதேவி


எம்.ஜி.ஆர்-சரோஜாதேவி

## ...ன்பது பேர்?

... ஒன்பது வேடங்களில் நடித்து ... ரோக நடிக்கிறார். துப்பறியும் ... துப்பறிகிறாராம்.

... வேடங்கள் என்னவென்று அறியும் ஆசை

... அலி, ஐம்பது வயதுக் கிழவி, குறவன், பாதிரியார், ... என்று ஒன்பதும் ஒன்பது விதம்.

... கணவன், மனைவியாகவும் இருப்பதுதான்

... பாட்டுப் பாடி சண்டை போடுவது போலவும்

...கிறார். மனைவி வடிவேலுவுக்கு மட்டும் ஜானகி

... ஒன்பது வேடங்களில் நடித்தார். அந்தளவுக்கு நடிக்க முடியாவிட்டாலும் வடிவேலு தூள் கிளப்பட்டும்.

## ...வாய்ப்பு

...களில் ஒருவர் ... படங்களின் விபரம் ... 'தாயின்மணிக் ... மெட்ரான்'

## ஒரு நற்செய்தி

குஷ்பு நடிக்க வந்ததுக்கு காரணம் என்னவென்று நினைக்கிறீர்கள். குழந்தை நட்சத்திரமாக நடித்தபோது படப்பிடிப்பில் நிறைய 'சாக்லெட்' கொடுத்தார்களாம். அதனால்தான் நடிப்பு மீது நாட்டம் வந்தது என்கிறார். இதில் என்ன நற்செய்தி என்று பொறுமை இழந்தவர்கள் அடுத்தவாரம் வரை பொறுத்திருந்தால் குஷ்புவின் இளமைக்கால அசத்தல் போஸ் ஒன்றை கண்ணாரக் காணலாம். ஹி..ஹி..ஹி. செய்தி அதுதான்.


ராம்கி-வினிதா-யாமினி
படம்-சாம்ராட்

## அந்த நாள் ஞாபகம்

## 42வருட நாயகனும் ஒரு பாதிரியாரின் கடிதமும்

1936 இல் சதிலீலாவதி. சிறிய வேடம்தான். 194... இல்தான் கதாநாயகன் வாய்ப்பு. நடித்த மொத்த படங்கள் 136. 42 ஆண்டுகள் திரையுலகில் இருந்தார். அதில் 31 ஆண்டுகள் கதாநாயகனாக இருந்தார்.

யார் என்று பட்டென்று புரிந்திருக்குமே. ஆம் மக்கள் திலகம் எம்.ஜி.ஆர். தான்.

சான்ஸ் கேட்டு அலைந்த நாட்களில் கூட அப்போதிருந்த பிரபல நடிகர்களை கொப்பி அடிக்க நினைத்ததில்லை. வாத்தியாரல்லவா. கற்றுக் கொடுக்கத் தெரிந்தவர். அவரது தனித்துவம் 47... பளிச், பளிச்! 1978 வரை அவராக விலகும்வரை திரையுலகில் அவரை அசைக்க ஆளில்லை.

1973 ஜூன் மாதம் பிலிம்பேர் என்னும் இந்தி சஞ்சிகையில் ஒரு கடிதம் வெளியாகி இருந்தது. கடிதம் இது தான்.

"கிழவிகள் முதல் குமரிகள் வரை உங்கள் (எம்.ஜி.ஆர்) போட்டோவை பத்திரப்படுத்தி பார்த்து மகிழ்ந்து முத்தமிடுகிறார்கள்.

பம்பாய் ஒலிப் பகுதியில் சமையல் வேலைகளையும் பாலூட்ட வேண்டிய பச்சிளம் சிசுக்களையும் வீட்டிலே போட்டுவிட்டு உங்கள் சினிமாவின் முதல் காட்சியை பார்க்க வருகிற இளம் தாய்மார்களை நான் பார்த்திருக்கிறேன்."

இந்தக் கடிதத்தை அந்தப் பத்திரிகைக்கு எழுதியவர் பெயரைச் சொன்னால் திறந்தவாய் மூடாது. அவர் ஒரு பாதிரியார். பெயர் வணக்க... திற்குரிய டிராபர்ட் ஆச்சரி... மாக இருக்கிறதல்லவா... அதுதான் எம்.ஜி.ஆரின் வெற்றி இரகசிய...

மஞ்சள் வண்ண வெயில் பட்ட
கொஞ்சும் வண்ண வஞ்சிச் சிட்டு
அஞ்சி அஞ்சிக் கொஞ்சும் போது
ஆசையில்லையா?........
- கவியரசு கண்ணதாசன்

## "மீண்டும் சாவித்திரி"

தலைப்பைப் பார்த்தவுடன் சாவித்திரி எப்படி மீண்டும் வரமுடியும் என்று நினைப்பவர்கள் தவறுக்கு வருந்தலாம். விசு கதை, வசனம் எழுதி புதிதாக இயக்கும் படத்தின் பெயர்தான் 'மீண்டும் சாவித்திரி'

தன் கணவன் சத்தியவானின் உயிரைக் காப்பாற்றினாள் அந்தகால சாவித்திரி. விசு உருவாக்கும் கதையில் வரும் சாவித்திரி இன்னொரு பெண்ணின் கணவனது உயிரைக் காப்பாற்றுகிறாள்.

சாவித்திரியாக நடிப்பவர் ரேவதி. ரமேஷ் அரவிந்த், ரகுவரன், ராதாரவி, நிழல்கள் ரவி ஆகியோரும் நடிக்கின்றனர்.

இசை: தேவேந்திரன். இம்மாதம் படப்பிடிப்பு ஆரம்பமாகிறது.

www.padippakam.com



# லேடீஸ் ஸ்பெஷல்

## அங்க அழகுகள் சிறக்க தங்கமான சில யோசனைகள்

### முகம்

குளிர் காலங்களில் முகத்திலுள்ள நரம்புகள் சிவந்து காணப்படும். இக்காலங்களில் முகத்துக்கு அடிக்கடி அழுத்தம் கொடுக்கப்படலாம். ஒவ்வொரு பாகத்தையும் விரல்களால் அழுத்தி 'மஸாஜ்' செய்யப்பட வேண்டும்.

முகத்துக்கு ஒப்பனை செய்வதற்கு முன் 'கிளென்சிங்' கிறீம்-துப்பரவு செய்யும் களிம்பு தடவி சுத்திகரிக்கலாம். புருவங்களையும் சீராக்கிக் கொள்ளுதல் வேண்டும். காலையிலும் மாலையிலும் முகத்தை துப்பரவாகக் கழுவிக் கொள்ள வேண்டும்.



சில பெண்களுக்கு முகத்தில் முடி வளர்ந்து அழகைக் கெடுப்பதுமுண்டு. இதற்கு பல களிம்பு வகைகளுண்டு. தரமானவற்றை அறிந்து வாங்கிப்பயன் படுத்தலாம். தற்போது நவீன 'எலக்ரோலிஸிஸ்' முறை நடை முறைக்கு வந்திருக்கிறது. இதனையும், வசதி படைத்தவர்கள் பயன்படுத்தலாம்.

### நகம்

பெண்களுக்கு ஏனைய அவயவங்கள் அழகுகாட்டுவதுபோல் அவர்களுடைய நகங்களும் அழகாகவும் கவர்ச்சியாகவும் அமைய வேண்டும். நகத்தை வெட்டும் போது மிகவும் அவதானமாக இருத்தல் அவசியம். நகங்களை நறுக்குவதற்கு முன்னர் சிறிதளவு எண்ணையைத் தடவி மஸாஜ் செய்யலாம். நகத்தின் நடுப்பாகத்தை குறிவைத்து வெட்ட வேண்டும். இரு ஓரங்களையும் நேர் பார்த்து அமைப்பாக வெட்டவேண்டும். இதன் பின்னர் உரிய களிம்பு பூசி மஸாஜ் செய்தபின்னர் 'கியூரெக்ஸ்' பூசலாம்.

நகம் வெட்டுவதில் போதுமான கவனம் செலுத்தாவிட்டால் அவை பலம் குன்றி உடைந்து விட நேரிடும்.

### பாதங்கள்

பாதங்களும் கால்களும்கூட ஏனையோரின் பார்வையைக் கவரும் பாகங்களாகும். இவை எப்போதும் துப்பர வாகவும் பளபளப்பாகவும் இருக்க வேண்டும். குதிகளில் சிலருக்கு வெடிப்புகள் தோன்றி அழகைக் கெடுக்கும். இதனால் தாங்க முடியாத வேதனையும் ஏற்படலாம். இதற்கு வெண்ணெய் அல்லது வெஸ்லின் என்ற களிம்பு பூசினால் தற்காலிக நிவர்த்தி கிடைக்கும். மருதோன்றி இலையினை அரைத்துப் பூசி வந்தால் சில நாட்களில் வெடிப்பு மறைந்து நோவும் நீங்கிவிடும்.

### தலை முடி

காலநிலை மாற்றங்கள் உடலுறுப்புக்களைப் பாதிப்பதைப் போன்று தலை முடியையும் பாதிக்கிறது. முக்கியமாக சூரிய ஒளியினால் தலைமுடியில் வெடிப்புக்கள் ஏற்படுகின்றன. இதனைத் தவிர்ப்பதற்கு தலையில் குளித்தபின் தலைக்கு 'கண்டிஷனர்' போட்டுக் கோள்ள வேண்டும். நல்ல தைலங்கள் எண்ணெய் முதலிய வையும் பயன்படுத்தப்படலாம்.

புரதச்சத்துள்ள உணவுவகைகள் உட்கொள்ள வேண்டும். காய்கறி, கீரை வகைகள், புதிய பழங்கள் ஆகியன போதுமானவரை உண்ணவேண்டும்.

### சருமத்தின் நிறம்

இயற்கையாக ஒவ்வொருவரும் பெற்றுள்ள நிறத்தினை மாற்றுவது முடியாத காரியம். எனினும் கறுப்பு நிறமானாலும் கவர்ச்சியாக்கிக் கொள்ள முடியும். இதற்கு நாம் உட்கொள்ளும் உணவுப் பழக்கங்களும் உதவுகின்றன. சூரிய வெளிச்சம் அதிகம் படுவதனாலும் முகம் கருமையடைகிறது. இதற்கு சில களிம்புகளின் உதவியை நாடலாம். இரவில், படுக்கைக்குச் செல்வதற்கு முன் முகத்தை நன்றாகக் கழுவியபின் 'கிறீம் E 45' என்ற களிம்பினைத் தடவலாம்.

## தாய்ப்பால் தரும் நன்மைகள்

தாய்மைக்கு இறைவன் அளித்த அற்புதப் பரிசு-அமுது குழந்தை பிறந்ததும் சுரக்கும் தாய்ப்பால். மார்பில் குழந்தை சுவைப்பதால் ஏற்படும் இன்ப இனிய போதையை, மயக்கத்தை, கிறக்கத்தை தாயும், சேயுமே உணர முடியும்.

சேயின் பரிபூரண உணவாகும் தாய்ப்பால். உடலின் முழு வளர்ச்சிக்கு உறுதுணை புரிகிறது. மனவளர்ச்சிக்கு உதவுகிறது. குழந்தைக்குத் தாயின் மீது அன்பும் பாசமும் ஏற்பட, தாய்க்குப் பிள்ளை மீது நேசமும் உருத்தும் இரத்த பந்த சொந்தம் இணைக்கப்பட-பிணைக்கப்பட சிறந்த விருந்து தாய்ப்பாலே!

முதன் முறையாக மார்பகங்களில் சுரக்கும் அமுதை சீம்பால் என்பர். அந்த சீம்பால்தான் குழந்தைக்கு அழகையும் ஆரோக்கியத்தையும் வழங்கி நோய் எதிர்ப்புச் சக்தியை உண்டு பண்ணுகிறது. உள் உறுப்புக்களைச் சீராகச் செயல்பட, ஜீரண சக்தியை ஏற்படுத்தத் தூண்டுதலாக அமைகிறது.

குழந்தை தாய்ப்பால் அருந்தும் போதுதான் தாயின் கர்ப்பப்பை ஒழுங்காக சுருங்க வழி வகுக்கிறது. தாய்ப்பால் செலவில்லாதது. பாதுகாத்துப் பக்குவப் படுத்தத் தேவையில்லை. கெட்டுப்போகாது. தேவைப்படும்போது தேடித் திரிய வேண்டியதில்லை. காய்ச்சி சுட வைத்து வடிகட்ட வேண்டாம். சுத்தமானது. தூய்மை வாய்ந்தது. சீனி சேர்க்கும் செலவில்லை. குழந்தையைத் தூங்கச் செய்யும் அற்புத மருந்து தாய்ப்பால்!

தாய்ப்பாலில் நிறைந்துள்ள சத்துக்கள் 6.5 சதவீதம், புரதம் 2.2 சதவீதம், கொழுப்பு 4.0 சதவீதம், உப்பு 3.0 சதவீதம், நீர் 84.3 சதவீதம்.

**பால் கொடுப்பது எப்படி?**

குழந்தைக்குப் பால் கொடுக்குமுன் தன் மார்பகங்களையும், காம்புகளையும்



அழுக்கின்றி சுத்தமாக வைத்துக் கொள்ள வேண்டும். மனதை ஒரு நிலைப்படுத்தி அமைதியுடனும், சாந்தமாகவும் இருந்து பால் புகட்ட வேண்டும். பரபரப்பாகவோ, கவலையாகவோ, துயரத்துடனோ, கெட்ட சிந்தனையுடனோ பால் கொடுக்கக் கூடாது.

டி.வி, வீடியோ, சினிமா பார்த்துக் கொண்டோ பால் கொடுக்காதீர்கள். அசுத்தமான இடங்களில் அமர்ந்து கொண்டு, பலர் பார்வைபடும் இடத்திலோ பால் கொடுக்காதீர்கள். பால் கொடுக்கும் போது அதனுடன் காற்றையும் குடித்து விடும். பாதிப் பால் அருந்தியதும், இறுதியிலும் ஒரு முறை பிள்ளையை வாரி எடுத்து தோள் மீது போட்டுக் கொண்டு குழந்தையின் முதுகைத் தடவி மெதுவாகத் தட்டி நீவி விடுங்கள்.

பால் குடித்ததும் குழந்தையின் வாய், கழுத்து, நெற்றி இவைகளை சுத்தமான பஞ்சினால் அல்லது மெலிதான நூல் துணியினால் இதமாகத் துடைத்து விடுங்கள்.

தாய்மார்கள் அணியும் ரவிக்கை, பிரா, சேலை போன்ற உடைகளைச் சுத்தமாக வைத்துக் கொள்ளவும்.

குழந்தைக்கு சளி பிடிக்காதிருக்கவும், தகுந்த வளர்ச்சி வனப்புப் பெறவும் தாய்மார்கள் பால், கீரை, பழவகைகள், ஒரேஞ்ச், அப்பிள், எலுமிச்சை, முட்டை, கரட், முட்டைக்கோவா, முள்ளங்கி போன்ற உயிர்ச்சத்து நிறைந்த உணவுகளை உட்கொள்ளுங்கள். வாரம் ஒருமுறை டெட்டோல் போன்ற கிருமி நாசினிகள் கலந்த வெது வெதுப்பான நீரால் மார்பகங்களையும், காம்புகளையும் கழுவி விடுங்கள். பால் கொடுக்கும் நேர அட்டவணைப்படி பால் புகட்டுங்கள்.

தாய்ப்பால் கொடுப்பதால் தாயின் மார்பகத்தில் புற்றுநோய் ஏற்படுவதில்லை. பேறுகால இடைவெளி தள்ளிப்போகிறது. மாத விலக்குக் கோளாறுகள் தோன்றுவதில்லை. தாய்க்கு மன அழுத்தம், கவலை குறைகிறது. ஹிஸ்டிரியாவை விரட்டுகிறது. மனது மகிழ்கிறது. அன்பு சுரந்து பெருகுகிறது. தாய்மை பரிபூரண நிலை அடைகிறது.

## கார்மேகக் கூந்தல் சிறந்திருக்க ஆசையா? ஆளுக்குத் தகுந்த கூந்தல் அலங்காரம்

ஒரு பெண்ணின் அழகுக்கு அழகூட்டுவதே அவள் கூந்தல்தான் இல்லையா? பட்டுப்போன்ற ... பளபள கூந்தல் 'டிவி' விளம்பர மங்கையருக்கும், சினிமா நடிகைகளிடமும் தான் பார்க்க முடிகிறது... ஹூம்... நம் கூந்தல் அப்படி இல்லையேன்னு ஏக்கமா இருக்கா? இனி உங்கள் கூந்தலையும் பளபளன்னு... மென்மையா... பட்டுப்போல ஆக்கிடுவோம்.

பொதுவாக மாமிசம் உண்பவர்களுக்கு கூந்தல் எளிதில் கொட்டுவதில்லை. அதில் நிறையப் புரதப் பொருளும் விட்டமின்களும் கிடைக்கின்றன.



♦ கூந்தலை எப்பொழுதும் சுத்தமாக வைத்துக் கொள்ள வேண்டும்.

♦ கூந்தல் பளபளப்பாக இருக்க... எண்ணையை காய்ச்சி தலையில் தேய்த்து விட்டு ஒரு டவலால் தலையைக் கட்டியபடி இரவில் படுத்துவிட வேண்டும். காலையில் எழுந்து வெந்நீரில் சோறு வடித்த கஞ்சியுடன் சியக்காய் சேர்த்து தலை குளிக்க வேண்டும்.

♦ இயற்கையிலேயே கூந்தலை பளபளப்பாக வைத்துக் கொள்ள நல்ல விட்டமின் சத்துள்ள பொருட்களை சாப்பிட வேண்டும். டாக்டரின் ஆலோசனைப்படி விட்டமின் மாத்திரைகளையும் சாப்பிடலாம்.

♦ அன்றாட உணவில் கருவேப்பிலைகளை அதிகமாக சேர்த்துக் கொண்டால் கூந்தல் கருமை நிறம் பெறும்.

♦ சிறிதளவு வெந்தயத்தை தண்ணீர் விட்டு அரைத்து தலையில் தேய்த்து அரைமணிநேரம் கழித்து தலை குளித்தால் கூந்தல் கொட்டுவது நின்று விடும்.

♦ அதிகாலையில் ஒரு தேக்கரண்டி இஞ்சி சாறில் இரண்டு துளி தேன்விட்டுத் தொடர்ந்து சாப்பிட்டால் பித்த நரை மறைந்து முடி கறுப்பாகும்.

♦ மருதாணி இலையைத் தேங்காய் எண்ணையில் போட்டு காய்ச்சி வடிகட்டி வைத்துக் கொண்டு கூந்தலில் பூசிவந்தால் செம்பட்டை முடி மாறி கருநிறக் கூந்தலாகும்.

**இப்போ கூந்தலை எப்படி அழகு படுத்துவதென்று பார்க்கப்போறோம். இப்போ யார் யார் என்ன மாதிரி ஹேர் ஸ்டைல், பண்ணினால் நன்றாக இருக்கும் என்று பார்ப்போம்.**

♦ உயரமான நெற்றி உடையவர்கள் கூந்தலின் ஒரு பகுதி, நெற்றியை ஓரளவு மறைப்பது போல் பார்த்துக் கொள்ள வேண்டும். சுருள் முடியிருப்பவர்கள் சில சுருள்கள் அழகாக நெற்றியில் வந்து புரள்வது போல் சீவினால் அழகாக இருக்கும்.

♦ குறுகலான நெற்றியும் மூக்கு நீளமாக இருப்பவர்கள் வகிடு எடுக்காமல் தலையை பின்னால் இழுத்து "நதியா ஸ்டைலில்" வார வேண்டும்.

♦ மூக்கு சப்பையாக இருப்பவர்கள் முன்புறம் உயர்த்தி வாராமல் முடி நெற்றியில் வந்து படும்படியோ அல்லது தற்போதைய ரேவதி ஸ்டைலில் 'ஹேர்கட்' பண்ணிக் கொள்ளலாம்.

♦ நீண்ட மெல்லிய கழுத்துடைய பெண்கள் ஒற்றைப் பின்னல் போட்டுக் கொள்வது நல்லது. நீளக் கூந்தலாக இருந்தால் இன்னும் சிறப்பாக இருக்கும். அல்லது போய்ஸ்கட் 'பொப்' பண்ணிக் கொள்ளுங்கள். சுப்பராக இருக்கும்.

♦ குறுகிய பருத்த கழுத்துடைய பெண்கள் தலையைத் தூக்கி வாரி, சற்று தூக்கலாகவே இருக்கும்படி பார்த்துக் கொள்ளவும். இவர்களுக்கு 'ரொப் நொட்' எனப்படும் நதியா கொண்டை சிறப்பாக இருக்கும்.

**கூந்தலை வால் மாதிரி ஒல்லியாக வைத்துக் கொள்ளாமல் அளவாக 'கட்' பண்ணி அழகாகப் பராமரித்தால் அடுத்த கூந்தல் அழகி நீங்கள் தான்!**

## பெண்களைத் தடுக்காதீர்கள்!



1. பெண்களை ருதுவாகும் முன் விவாகம் செய்து கொடுக்கக் கூடாது.

2. அவர்களுக்கு இஸ்டமில்லாத புருஷனை விவாகம் செய்து கொள்ளும்படி வற்புறுத்தல் கூடாது.

3. விவாகம் செய்து கொண்ட பின்னர் அவள் புருஷனைவிட்டு நீங்க இடம் கொடுக்க வேண்டும். அதன் பொருட்டு அவளை அவமானப்படுத்தக் கூடாது.

4. பிதுரார்ஜிதத்தில் பெண் குழந்தைகளுக்கு சமபாகம் கொடுக்க வேண்டும்.

5. புருஷன் இறந்த பின்பு ஸ்த்ரீ மறுபடி விவாகம் செய்வதைத் தடுக்கக் கூடாது.

6. விவாகமே இல்லாமல், தனியாக இருந்து வியாபாரம், கைத்தொழில் முதலியவற்றில் கௌரவமாக ஜீவிக்க விரும்பும் ஸ்த்ரீகளை யதேச்சையான தொழில் செய்ய, ஜீவிக்க இடம் கொடுக்க வேண்டும்.

7. பெண்கள் கணவனைத் தவிர வேறு ஆண்களுடன் பேசக் கூடாதென்றும், பழகக் கூடாதென்றும் பயத்தாலும், பொறாமையாலும் ஏற்படுத்தப்பட்ட நிபந்தனைகளை ஒழித்துவிட வேண்டும்.

8. பெண்களுக்கு ஆண்களைப் போலவே உயர்தரக் கல்வியின் எல்லாக் கிளைகளிலும் பழக்கம் ஏற்படுத்த வேண்டும்.

9. தகுதியுடன் அவர்கள் அரசாட்சியில் எவ்வித உத்தியோகம் பெற விரும்பினாலும் அதைச் சட்டம் தடுக்கக் கூடாது.

இதையெல்லாம் யார் சொன்னது என்று நினைக்கிறீர்கள். எமது சுப்பிரமணிய பாரதியாரேதான்.

## சமைப்போம் சுவைப்போம்

(தொகுத்துத் தருவது-சுகந்தினி)

### பனீர் குருமா

**தேவையான பொருட்கள்:**

பச்சைப்பட்டாணி - 3 கப்
பனீர் - 200 கிராம் (செய்முறை கீழே தரப்பட்டுள்ளது)
பால் - 1 கப்
வெங்காயம் - 1 கப் (பொடியாக நறுக்கியது)
பூண்டு - 4 தேக்கரண்டி (பொடியாக நறுக்கியது)
கசகசா - 2 தேக்கரண்டி
மல்லித் தூள் - 1 தேக்கரண்டி
சீரகம் - 2 தேக்கரண்டி
இஞ்சிச் சாறு - 2 தேக்கரண்டி
ஏலக்காய் - சிறிதளவு
கறுவாப்பட்டை - சிறிதளவு
மிளகாய்த்தூள் 1/2 தேக்கரண்டி
நெய் - 2 தேக்கரண்டி
தக்காளி சோஸ் - 6 தேக்கரண்டி.
உப்பு - தேவையான அளவு

**செய்முறை**

பனீரை ஒரு அங்குல நீளத்திற்குத் துண்டுகளாக வெட்டி, வாணலியில் நெய் விட்டு, பொன்நிறமாகப் பொரித்து வைத்துக் கொள்ளவும். கசகசாவை ஒரு மணிநேரம் தண்ணீரில் ஊறவைத்து அரைக்கவும். மீதம் உள்ள நெய்யில் சீரகத்தைப் போட்டு, அது வெடித்தவுடன் ஏலக்காய், கறுவாப்பட்டை போன்றவற்றைப் போட்டுத் தாளிக்கவும். இத்துடன் பொடியாக நறுக்கிய வெங்காயத்தைச் சேர்த்து, நன்றாக வதக்கவும். வெங்காயம் வதங்கிய பின் இஞ்சிச்சாறு, பொடியாக நறுக்கிய பூண்டு, மிளகாய்த்தூள், மல்லித்தூள் என்பவற்றையும் சேர்க்கவும். இவை நன்றாக வதங்கிய பின் பொரித்த பனீர், பட்டாணி சேர்த்து ஒரு கப் தண்ணீர் விட்டு மூடி வைக்கவும். இது மிதமான நெருப்பில் 20 நிமிடங்கள் வரை இருக்க வேண்டும். பட்டாணி. நன்றாக வெந்த பின், பால், அரைத்த கசகசா, உப்பு இவைகளைச் சேர்க்கவும். இந்தக் கலவை கொஞ்சம் கெட்டியாகும் வரை கொதிக்கவிடவும்.

கடைசியாக தக்காளி சோஸ் சேர்த்துப் பரிமாறவும். இது சப்பாத்தி, பூரி ஆகியவைகளுக்கு தொட்டுக் கொள்ளச் சுவையாக இருக்கும்.

### பனீர் செய்யும் முறை

**தேவையான பொருட்கள்:**

பால் - 1 லீற்றர்
புளித்த தயிர் - 2 கரண்டி

**செய்முறை:**

பால் பொங்கி வரும் நேரத்தில் 2 கரண்டி புளித்த தயிரை ஊற்றி, மேலும் ஐந்து நிமிடங்கள் கொதிக்க வைத்தால், பால் திரிந்து கட்டியும், தண்ணீருமாகி விடும். இதை மெல்லிய துணியில் கட்டி, சிறிது நேரம் தொங்க விடவும். தண்ணீர் வடிந்த பின்னர் கிடைக்கும் திரிந்த பால் தான் பனீர் ஆகும். தண்ணீர் நன்றாக வடிந்த பின் பனீரை ஒரு தட்டின் மீது பரப்பி, பின்னர் கனமான பாத்திரத்தை அதன் மேல் வைத்து அழுத்த, மீதமுள்ள தண்ணீரும் வெளியேறிவிடும். இப்போது பனீரைக் கத்தியால் வெட்டித் துண்டு போட்டுக் கொள்ளலாம்.

## வித்தியாச விருந்து

### நெத்தியடியான சொல்!



பழ மொழிகளில் பல ரகம். சிரிக்க, சிந்திக்க, வசை பாட, நோகாமல் குத்த, நெருஞ்சி முள்ளாய் செருக என்று பல ரகம். அதில் சில இங்கே:

- கடன் வாங்கியும் பட்டினி; கல்யாணம் பண்ணியும்; பிரம்மச்சாரி.
- கப்பல்காரன் பெண்டாட்டி தொப்பைக்காரி. கப்பல் உடைந்தாலோ பிச்சைக்காரி.
- அகத்திற்கு அழகு அகமுடையாள்.
- அங்காடிக்காரியைச் சங்கீதம் பாடச் சொன்னால் வெங்காயம், கருவேப்பிலை என்று பாடுவாள்.
- ஆயுதமில்லாரை அடிக்கிறதா?
- ஆளான ஆள் புகுந்தால் ஆமணக்கு விளக்கெண்ணெய் ஆகும்.
- வாழைப்பழம் கொண்டு போனவன் வாசலில் இருந்தான், வாயைக் கொண்டு போனவன் நடு வீட்டில் இருந்தான்.
- அப்பத்தை எப்படித்தான் சுட்டாளோ? தித்திப்பை எப்படித்தான் நுழைத்தாளோ?
- ஊரிலே கல்யாணம் மாரிலே சந்தனம்.
- மயிற் கண்ணிக்கு மசக்கை, மாப்பிள்ளை அவஸ்தை.
- ஆணை அடித்து வளர், பெண்ணை போற்றி வளர்.
- ஆட மாட்டாதவள் கூடம் கோணல் என்றாளாம்.
- ஆசை அறுபது நாள், மோகம் முப்பது நாள். தொண்ணூறு நாளும் போனால் துடைப்பக்கட்டையடி.

**தவறியது**

சென்ற வார வித்தியாச விருந்தில் ஈழத்து மஹாகவி பற்றி எழுதியவர் அப்துல் ரகுமான். பெயர் இடம்பெறத் தவறிவிட்டது.

## மகளிர் மட்டும் -பரிசுப் போட்டி-

பரிசுக் கூப்பன்
மகளிர் மட்டும்
இல 17

**முதல் அதிஷ்டசாலிக்கு தங்கநகை**

- முரசு 90 முதல் தொடர்ந்து 25 வாரங்கள் பரிசுக்கூப்பன்கள் வெளியாகும்.
- 25 கூப்பன்களையும் பத்திரமாகச் சேகரித்துக்கொள்ளுங்கள்.
- 25 கூப்பன்களும் வெளியான பின்னர் நாம் அனுப்பச் சொல்லும்போது நீங்கள் கூப்பன்களை அனுப்பி வைக்கலாம்.
- முதல் அதிஷ்டசாலிக்கு தங்கநகை பரிசு காத்திருக்கிறது.
- 25 அதிஷ்டசாலிகளுக்கு அசத்தலான பரிசில்கள் காத்திருக்கின்றன.

பரிசில்களை வெல்ல தயாராகுங்கள்.

## காதலிக்கு.....

என் காதலியே!
இருளாகிப் போன
என் உலகின்
விளிம்பில் நின்று
உன்னை நான்
விசாரித்துக் கொண்டிருக்கிறேன்!
....
கவலை என்னும்
கொடிய வேதனையின்
குரூரம் பொறுக்க மாட்டாமல்
நான் உன்னை
தேடியழுகின்றேன்!
நீ
நிரந்தரமாய்ப்
போனதெங்கே....?
....
றோஜாக்களை
நட்டவன் நான்!
முட்களை அறுவடை செய்கிற
முகாரி ஏன், எனக்கு?
....
நீ
முழுதாய் மறைந்து போனாயா?
இல்லை
முகவரி மாறிப் போனாயா?
....
சரிந்து போனவள்
காதலி.... என்று
சரித்திரத்தில் இல்லை.
சரிந்து போன
காதலன் சரிதத்தை
காலம்
மறக்கவுமில்லை.
....
கயஸின்
கவிதைகள் எல்லாம்
அவன் கண்ட தோல்விதான்!
....
தேவதாஸின்
மதுவும் புகையும்
அவன் காதல்
பிறப்பித்த கேள்விதான்!
....
தோழி!
முடியுமானால் உன்
முகவரி தா;
என் மரணப் பயணத்துக்கு
உன்
வாழ்த்துப் பெற வேண்டும்!
....
பார்வதி, லைலாவாய்
என்னை விட்டுப்
பறந்து விடாதே...!
பௌர்ணமி,
காதலின் சரிதத்தை
மாற்ற முடியாதென்று
மோதல்கள்..... என்னைப் பார்த்து
முகாரியிசைக்கின்றன.
....
மரணிக்காமல்
மறைந்து போன
என் மதி!
நீ என்னை
தேடி வருவாயா?
இல்லை என்
கல்லறை வந்து
காணிக்கை தருவாயா?
....
என் காதலீ!
இருளாகிப் போன
தேசத்தில் இருந்து
இன்னும் உன்னை நான்
தேடிக் கொண்டிருக்கிறேன்....
புரிந்து கொள்!

**அம்தரவல்ல நிலாவாசன்**

## இதயம் எழுதும் கவிதை



கண்ணீர்த் துளிகள்
நடந்து சென்ற சுவடுகள்.
என்–
முகத்தில்
முகாமிட்டுக்கிடக்கிறது.....
மனம் அழுகிறது.
□□
இருதயச் சுவர்களில்
இரத்த வரிகளில்
எழுதிவைத்துள்ளேன்
ஏழெட்டுக் கவிதைகள்.
□□
கவலையான கனவுகளும்;
சோக சொட்டுகளும்
சொந்தமாகிப் போன
வாழ்வு பற்றியும்.....
□□
என் சோகத்தின்
நிஜ சொரூபம்–
விழிகள் விடும் துளிகள் பற்றியும்....
□□
நீண்ட நாட்களாக
நிம்மதி இழந்து
கண்ணீரில் குளித்து
காலம் கழித்து வருவது பற்றியும்....
□□
பௌர்ணமி பார்த்து – அதன்
பூர்ணிமை அழகில்
முகம் பதித்து
மனித நேயம் பேசிய
மனிதர்கள் பற்றியும்....
□□
அடி நெஞ்சில்
அடிமைப்படுத்தி வந்த வரிகளை
அவிழ்த்து விடுகிறேன்.
□□
எம்மை அடிமைப்படுத்தி வந்தவர்கள்
எழுதவிடுவார்களா சுதந்திரத்தை?
எமது சொந்த மண்ணில்
சுதந்திரமாய் சஞ்சரிப்பதற்கு...!.



**இஸ்லாஹிய்யா-கே.முனாஸ்**




## "நவம்பர்–25"

சோகம்.......
தாங்கமுடியாத சோகம்.....
.......
என்னை
மொத்தமாய்
மொய்த்துக் கொண்ட
சோகம்.....
★★
அன்றுதான்
அவளின்
ஜனன தினம்...!
என்
நேசங்களைக் கொன்றவளின்
நினைவு தினம்...!
★★
கிளியே!
வானத்திற்கு வெளியே
வாசல் போட்டு
வர வேற்கவா.....?
இல்லை.......
காயங்கள் சுமந்த
என்
கனவுகளால்
கவிதை எழுதி
பூஜிக்கவா.....?
★★
வசந்தங்களை இழந்த
எமது
வடக்குகிழக்கைப் போல்
நித்தமும்
யுத்த வடுக்களால்
துடித்துக் கொள்ளும்
என் இதயத்தை
அனுப்பி வைக்கவா......?
★★
நிலாக்களை உருவி
விழிகளில்
உடுத்திக் கொண்டவளே.....!
உன்
ஜனன சந்தோசங்களுக்கு
என்
மரணச் செய்தியை
பரிசளிக்கவா......?
ம்......
என்
உயிரில் தானே
உனக்கு அதிகம்
ப்ரியம்...!

**அ. சுதா சேகர்- பொத்துவில் 03**

## அவள் இருக்கும் ரோஜாக் காலம்....!



அவள்
மடியில் தலைவைத்து
படுத்துக்கொண்டிருக்கிறேன்..!
★★
எனக்கு
எதுவுமே
ஞாபகமில்லை.....!
★★
அவள் சேலையின்
செண்டு வாசத்தில்
என்–
சுவாசத்திற்கு
ஒக்சிசன் இல்லை..!
★★
ஆனால்
நான் சாகவில்லை!
★★
அவள்
புன்னகைக்கிறாள்!
★★
கன்னத்து
மடிப்புக்குள்
என்–
உணர்ச்சி
புதைந்து கொண்டிருக்கிறது...
★★
ஆனால்
நான் சிரிக்கவில்லை!
★★
கதைத்துக் கொண்டிருக்கிறேன்
அவள்
மடியில்
தலைவைத்தவாறு!

**பொத்துவில் பௌர்ணமி நிலா**

## யார் தவறு?



உதட்டின் கரையோரத்திலே
புன்னகை நான் பூக்கயிலே
ஓரக்கண்ணால் பூப்பறிச்சிப் போனானே!
++++
நேசமெனும் கயிறு திரிச்சு
நெஞ்சிரண்டை கோர்த்துக்கிட்டு
பட்டுப் பூச்சிபோல பறந்துகிட்டு போனானே!
++++
குருவிக் கூடு கட்டித்தந்தானே!
குஞ்சிச் சோறு சமச்சித்தந்தானே!
++++
ஒற்றை வழியில் ஒரு நிலவு
சுற்றித்திரிவது யார் தவறு?
ஒற்றை வழியில் ஒரு கனவு
விட்டுப் போனது யார் தவறு?
++++
பச்சை மரத்தில் சுகமிருக்கு
பட்டுப் போனால் யார் தவறு?
பார்க்கும் பூவில் அழகிருக்கு
வாசம் போனால் யார் தவறு?
++++
பழகும் போது அன்பிருக்கு
காதல் உடைந்தால் யார் தவறு?
வாழும் போது பலதிருக்கு
வழுக்கிப் போனால் யார் தவறு?
++++
சோகம் கொஞ்சம் சொல்லித்தந்தானே!
ஒரு தாடிக்குள்ளே என்னை புதைத்தானே!

**அக்கரையூர் - ஆர்.பி.றூமைஸா**






பெண்: சுவாமி...என் புருஷன் நான் என்ன சொன்னாலும் கேட்க மாட்டேங்கிறாரே... நீங்கள்தான் வழி சொல்லணும்.
சாமியார்: பேசாமல் என் ஆசிரமத்தில் சேர்ந்துவிடு.

□□

"நமது ஜனாதிபதிக்குப் பிடிக்காத படம் எது?"
"உன்னால் முடியும் தம்பி."

□□

யமதர்மன்: மகா பிரபோ! இருக்கிற நரகம் போதாதா? எதற்காக ஸ்பெசல் நரகம்?
இந்திரன்: போலிச் சாமியார் போன்ற குற்றவாளிகளுக்காக!




அவள்: அந்த ஆளுக்கு என்மேல் ஒரு கண்.
நண்பி: அதுதான் தெரியுதே.







## கூத்தரித்த கூடி ஜோக்ஸ்

நண்பர்: உங்க பையன் சாமியாராய் போயிட்டானாமே?
தந்தை: அவன் மூணு நாலு பெண்களை கட்டிக்கப் போறேன்னு சொன்னான். அது முடியாது என்றுவிட்டேன். அதனால்தான்...

முதல் பைத்தியம்: என்னிடம் பணம் இருந்தால் நான் உலகத்தையே விலைக்கு வாங்குவேன்.
இரண்டாவது பைத்தியம்: நான் விற்றால்தானே நீ வாங்குவதற்கு!

□□

அவன்: வர வர பிச்சைக்கார தொல்லை தாங்கமுடியேல்லை.
நண்பன்: ஏன்?
அவன்: சாப்பாடு ரெடியாச்சான்னு போன் பண்ணிக் கேட்கிறாங்க.

## இந்த வாரம் உங்கள் பலன்

(17.06.95 முதல் 24.06.95 வரை)

சோதிட மாமணி 'தில்லை'

### மீனம்: சுப நேரம்

(பூரட்டாதி நாலாங்கால், உத்திரட்டாதி, ரேவதி)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | தொழில் சிறப்பு, பணவரவு | காலை 6 மணி |
| திங்கள்- | பெரியோர் உதவி, மனமகிழ்ச்சி | காலை 7 மணி |
| செவ்வாய்- | அந்நியர் நட்பு, வீண் மனஸ்தாபம் | பகல் 12 மணி |
| புதன்- | புதிய முயற்சி, உயர்ந்த நிலை. | காலை 6 மணி |
| வியாழன்- | பயனற்ற செயல், செலவு மிகுதி. | பி.ப. 1 மணி |
| வெள்ளி- | தொழில மந்தம், வெளியிட வாழ்க்கை. | காலை 7 மணி |
| சனி- | பெரியோர் பகை, கௌரவக் குறைவு. | பகல் 12 மணி |

அதிஷ்டநாள்-வியாழன், அதிஷ்ட இலக்கம்-1

### மேடம்: சுப நேரம்

(அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | பொருள் பேறு, மனமகிழ்ச்சி. | பி.ப. 2 மணி |
| திங்கள்- | அந்நியர் உதவி, கௌரவம். | காலை 7 மணி |
| செவ்வாய்- | துன்பநிலை நீங்கும், முயற்சி பலிதம். | பகல் 12 மணி |
| புதன்- | வெளியிட வாழ்க்கை, உயர்ந்த நிலை. | காலை 6 மணி |
| வியாழன்- | துன்பமதிகம், தேகசுகம் பாதிப்பு. | பகல் 12 மணி |
| வெள்ளி- | வெளியிடத்தில் பிரச்சனை, செலவு மிகுதி. | காலை 6 மணி |
| சனி- | பொருள்வரவு, காரியசித்தி. | காலை 7 மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய் அதிஷ்ட இலக்கம்-1

### இடபம்: சுப நேரம்

(கார்த்திகைப் பின்முக்கால், ரோகிணி,மிருகசீரிடத்துமுன்னரை)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | தொழில் சிறப்பு, முயற்சி பலிதம். | காலை 7 மணி |
| திங்கள்- | அந்நியர் உதவி, மனக்கவலை நீங்கும். | பி.ப. 1 மணி |
| செவ்வாய்- | வீண் மனஸ்தாபம், தொழிலநிலை மந்தம். | காலை 7 மணி |
| புதன்- | காரிய சித்தி, பொருள் வரவு. | பகல் 12 மணி |
| வியாழன்- | வெளியிட வாழ்க்கை, பயனற்ற செயல். | காலை 7 மணி |
| வெள்ளி- | பெரியோர் உதவி, செய்தொழில் விருத்தி. | பகல் 12 மணி |
| சனி- | செலவு மிகுதி, முயற்சி மந்தம். | காலை 7 மணி |

அதிஷ்டநாள்-வெள்ளி, அதிஷ்ட இலக்கம்-6

### மிதுனம்: சுப நேரம்

(மிருகசீரிடத்துப் பின்னரை, திருவாதிரை, புனர்பூசத்து முன் முக்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | தொழில் சிறப்பு, காரிய சித்தி. | காலை 8 மணி |
| திங்கள்- | துன்பம் நீங்கும், அந்நியர் உதவி. | பகல் 12 மணி |
| செவ்வாய்- | பயனற்ற செயல், செலவு மிகுதி. | காலை 7 மணி |
| புதன்- | வெளியிட வாழ்க்கை, பணவரவு. | பி.ப. 2 மணி |
| வியாழன்- | பெரியோர் உதவி, முயற்சி பலிதம். | காலை 7 மணி |
| வெள்ளி- | பயனற்ற பயணம், செலவு மிகுதி. | பகல் 11 மணி |
| சனி- | தொழில் மந்தம், காரியத்தடை. | காலை 7 மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்-3

### கும்பம்: சுப நேரம்

(அவிட்டத்துப் பின்னரை, சதயம், பூரட்டாதி)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | தொழிலில் உயர்ச்சி, முயற்சி பலிதம். | பகல் 12 மணி |
| திங்கள்- | வெளியிட வாழ்க்கை, கௌரவக் குறைவு. | காலை 7 மணி |
| செவ்வாய்- | பெரியோர் நட்பு, முயற்சி தடை. | பகல் 2 மணி |
| புதன்- | தொழில் மந்தநிலை, வெளியிட வாழ்க்கை. | காலை 6 மணி |
| வியாழன்- | துன்பமதிகம், மனக்கவலை. | பகல் 12 மணி |
| வெள்ளி- | அந்நியர் சகவாசம், பணச் செலவு. | பி.ப. 1 மணி |
| சனி- | பணக்கஷ்டம், காரியத் தடை. | பி.ப. 2 மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்-3

### நவக்கிரக சஞ்சாரம்

| | |
|---|---|
| மிதுனம் | - சூரியன |
| சிம்மம் | - செவ்வாய் |
| துலாம் | - இராகு |
| விருட்சிகம் | - வியாழன் |
| கும்பம் | - சனி |
| மேடம் | - கேது |
| இடபம் | - வெள்ளி, புதன் |

சந்திரன்-கும்பம்,மீனம்,மேடம்,இடபம் ஆகிய இராசிகளில் சஞ்சரிப்பார்.

### கர்க்கடகம்: சுப நேரம்

(புனர்பூசத்து நாலாம் கால், பூசம், ஆயிலியம்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | பெரியோர் உதவி, காரியானுகூலம். | பகல் 12 மணி |
| திங்கள்- | புதிய முயற்சி, வெளியிடப் பயணம். | காலை 7 மணி |
| செவ்வாய்- | துன்பம் நீங்கும், கௌரவம். | காலை 6 மணி |
| புதன்- | உறவினரால் தொல்லை, மனக்கவலை. | காலை 7 மணி |
| வியாழன்- | உயர்ந்த நிலை, அந்நியர் உதவி. | காலை 9 மணி |
| வெள்ளி- | வீண் மனஸ்தாபம், செய் தொழில் கஷ்டம். | பகல் 12 மணி |
| சனி- | புதிய முயற்சி, கௌரவம். | காலை 7 மணி |

அதிஷ்டநாள்-வியாழன், அதிஷ்ட இலக்கம்- 4

### மகரம்: சுப நேரம்

(உத்தராடத்துப் பின்முக்கால், திருவோணம், அவிட்டத்து முன்னரை)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | தொழில் நிலை சிறப்பு, முயற்சி பலிதம். | காலை 7 மணி |
| திங்கள்- | வீண் மனஸ்தாபம், அந்நியர் சகவாசம். | பி.ப. 1 மணி |
| செவ்வாய்- | பெரியோா உதவி, முயற்சி தடை. | காலை 7 மணி |
| புதன்- | பணவரவு, காரியசித்தி. | பகல் 12 மணி |
| வியாழன்- | துன்பம் நீங்கும், கௌரவம். | காலை 7 மணி |
| வெள்ளி- | முயற்சிகளில் வெற்றி, பயணம். | பி.ப. 2 மணி |
| சனி- | காரிய சித்தி, பணவரவு. | காலை 8 மணி |

அதிஷ்டநாள்-சனி, அதிஷ்ட இலக்கம் -7

### சிம்மம்: சுப நேரம்

(மகம், பூரம், உத்தரத்து முதற்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | தொழில் நிலை உயர்ச்சி, பணவரவு. | பி.ப. 1 மணி |
| திங்கள்- | மனக்கவலை, காரியத் தடை. | காலை 6 மணி |
| செவ்வாய்- | அந்நியர் நட்பு, மனக்கவலை நீங்கும். | பகல் 12 மணி |
| புதன்- | வெளியிட பயணம், செலவு-மிகுதி. | காலை 6 மணி |
| வியாழன்- | மனக்கவலை நீங்கும், அந்நியர் நட்பு. | பி.ப. 1 மணி |
| வெள்ளி- | காரிய சித்தி, தொழில் சிறப்பு. | பகல் 12 மணி |
| சனி- | செலவு மிகுதி, பணக்கஷ்டம். | காலை 6 மணி |

அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்-9

### தனு: சுப நேரம்

(மூலம், பூராடம், உத்தராடத்து முதற்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | காரிய சித்தி, பொருள் வரவு. | காலை 7 மணி |
| திங்கள்- | பெரியோர் உதவி, மனமகிழ்ச்சி. | பகல் 12 மணி |
| செவ்வாய்- | வெளியிட வாழ்க்கை, அந்நியர் நட்பு. | காலை 9 மணி |
| புதன்- | துன்பம் நீங்கும், பொருள் வரவு. | பி.ப. 2 மணி |
| வியாழன்- | பொருள் நஷ்டம், மனக்கவலை. | காலை 7 மணி |
| வெள்ளி- | பயனற்ற செயல், அந்நியர் சகவாசம். | பி.ப. 2 மணி |
| சனி- | காரிய சித்தி, பொருள் வரவு. | பகல் 12 மணி |

அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம் -5

### விருட்சிகம்: சுப நேரம்

(விசாகத்து நாலாங்கால், அனுஷம், கேட்டை)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | பொருள் வரவு, காரியசித்தி. | காலை 7 மணி |
| திங்கள்- | புதிய முயற்சி, மனக்குறை நீங்கும். | பகல் 12 மணி |
| செவ்வாய்- | வெளியிடப் பயணம், கௌரவக் குறைவு. | காலை 7 மணி |
| புதன்- | துன்பம் நீங்கும், முயற்சி பலிதம். | பி.ப. 1 மணி |
| வியாழன்- | உயர்ந்த நிலை, பணவரவு. | காலை 7 மணி |
| வெள்ளி- | உறவினர் உதவி, கௌரவம். | காலை 6 மணி |
| சனி- | மனக்குறை நீங்கும், செலவு மிகுதி. | பகல் 12 மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷட்ட இலக்கம்-8

### துலாம்: சுப நேரம்

(சித்திரையின் பின்னரை, சுவாதி, விசாகத்து முன் முக்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | தொழில் சிறப்பு, காரிய சித்தி. | காலை 6 மணி |
| திங்கள்- | பெரியோர் நட்பு, மனமகிழச்சி. | பகல் 12 மணி |
| செவ்வாய்- | அந்நியர் உதவி, பணவரவு. | காலை 7 மணி |
| புதன்- | உயர்ந்த நிலை, புதிய முயற்சி. | பி.ப. 2 மணி |
| வியாழன்- | வீண் குறை கேட்டல், தொழில் சிறப்பு. | பகல் 12 மணி |
| வெள்ளி- | மனமகிழச்சி, கௌரவக் குறைவு. | காலை 7 மணி |
| சனி- | பயனற்ற செயல், உயர்ச்சி தடை. | காலை 6 மணி |

அதிஷ்டநாள்-வெள்ளி, அதிஷ்ட இலக்கம்- 4

### கன்னி: சுப நேரம்

(உத்தரத்துப் பின்முக்கால், அத்தம், சித்திரையின் முன்னரை)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | காரிய சித்தி, பொருள் வரவு. | பகல் 12 மணி |
| திங்கள்- | தொழில் சிறப்பு, முயற்சி மேன்மை. | காலை 6 மணி |
| செவ்வாய்- | துயர் நீங்கும், உயர்ந்த நிலை. | பகல் 11 மணி |
| புதன்- | பணவரவு, கௌரவம். | காலை 7 மணி |
| வியாழன்- | அந்நியர் உதவி, அதிகார விருத்தி. | காலை 9 மணி |
| வெள்ளி- | மனக்கவலை, பணவரவு தடை. | காலை 7 மணி |
| சனி- | பெரியோர் நட்பு, மனமகிழ்ச்சி. | பகல் 12 மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்-7

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்



"தெய்வம் பல பல சொல்லிப்-பகைத்
தீயை வளர்ப்பவர் மூடர்;
உய்வதனைத்திலும் ஒன்றாய்-எங்கும்
ஓர் பொருளானது தெய்வம்."
சுப்பிரமணிய பாரதியார்



## உடற்பயிற்சி



உடற்பயிற்சி செய்திடவே
உடலும் உறுதி யாகிடுமே
உடலும் உறுதி யாகிடவே
உயிருடன் நெடுநாள் வாழ்ந்திடலாம்.

காலை மாலை நாள் தோறும்
கணக்காய் பயிற்சி செய்திட்டால்
கால மெல்லாம் நோயின்றி
களிப்பாய் நாமும் வாழ்ந்திடலாம்.

இளமையான வயது முதல்
இனிதே பயிற்சி செய்துவரின்
வளமையான உடலோடு
வாழும் வரையில் நல்வாழ்வே.

ஆ. கோவிந்தன். -

## பாப்பா முரசு சிறு கதை

# நரியின் பலம்



ஒரு காட்டில் ஒல்லியான நரியொன்று வாழ்ந்தது. அது ஒல்லியாக இருந்ததால் காட்டிலுள்ள மிருகங்கள் எல்லாம் அதனை கேலி செய்தன.

நரி வசிக்குமிடத்தில் ஒரு பெரிய யானையும் வசித்து வந்தது. அந்த யானையின் அருகில் நரி நின்றால் கொசு போல் இருக்கும். யானைக்கு நரியைக் கண்டால் குஷி பிறந்து விடும். தன் துதிக்கையை நீட்டி நரியை வளைத்துப் பிடித்து மேலே தூக்கிக் கீழே 'தொப்' பென்று போடும். நரி வலி பொறுக்க முடியாமல் ஊளையிட்டு அழும். அது அழுவதைப் பார்த்து யானை மகிழ்ச்சிய டையும்.

சரி, யானைதான் நரியை இப்படித் தொல்லைப்படுத்துகிறதே என்றால் அங்குள்ள ஆற்றில் வசிக்கும் முதலையும் நரியைத் தொல்லைப்படுத்தும்.

நரி ஆற்றுக்குத் தண்ணீர் குடிக்க வரும்போதெல்லாம் முதலை, தன் நீண்ட வாயைத் திறந்து கூரான பற்களைக் காட்டி நரியைப் பயமுறுத்தும். நரி ஆற்றுக்குள் தண்ணீர் குடிக்க இறங்கினால் அதன் காலைப் பிடித்து முதலை இழுக்கும்.

இப்படி யானையாலும், முதலையாலும் தினசரி துன்பப்பட்டுக் கொண்டிருந்த நரி, இனிமேல் அவைகளின் தொல்லையில்லாமல் வாழ என்ன செய்யலாம் என்று யோசித்தது. வெகு நேரம் யோசித்த பின்னர், ஒரு முடிவுக்கு வந்தது.

முதலில் யானையிடம் சென்றது நரி, தன் எதிரே தைரியமாக வந்து நிற்கும் நரியை வியப்புடன் பார்த்தது யானை.

"யானையாரே! நீர் என்னைவிடப் பலசாலி என்று உம்மை எண்ணிக் கொண்டு எனக்கு அளவில்லாத துன்பங்களைக் கொடுத்து வருகிறீர். நானும் போனால் போகிறது என்று பொறுத்து வந்தேன். இனி அப்படி என்னால் பொறுமையாக இருக்க முடியாது. இனி என் பலத்தைக் காட்டப் போகிறேன். நாளை எனக்கும் உமக்கும் கயிறு இழுக்கும் போட்டி நடைபெறப்போகிறது. அதில் உம்மைத் தலைகுப்புற விழச் செய்து, உம்மைவிட நானே பலசாலி என்பதை நிரூபிக்கிறேன்." என்றது நரி.

முட்டாள் தனமாக நரி உளறுகிறது. அதற்குச் சரியான பாடம் படிப்பிக்க வேண்டும் என்றெண்ணிய யானை,

"கயிறு இழுக்கும் போட்டியில் என்னைத் தோற்கடிக்கச் செய்யப் போகிறாயா? உன்னை ஒரு இழு இழுத்துத் தள்ளிவிடுகிறேன் பார்" என்றது.

"நாளை ஆற்றங்கரையின் ஓரம் உள்ள காட்டின் பக்கத்தில் தான் போட்டி நடக்கும். தோற்கப்போகிறோமே என்று பயந்து வராமல் இருந்து விடாதீர்" என்று கூறிவிட்டு முதலையிடம் சென்றது நரி. "ஏய் முதலை" என்று அதட்டி முதலையை அழைத்தது நரி.

முதலைக்கு, நரியா தன்னை இப்படி அதிகாரமாக அழைக்கிறது என்று ஆச்சரியமாக இருந்தது. மெதுவாகக் கரைக்கு வந்தது முதலை.

"ஏய் முதலையே! உன் ஆட்டமெல்லாம் நாளையோடு முடியப்போகிறது. என்னைவிட நீ பலசாலி என்று நினைத்துத்தானே என்னைப் பயமுறுத்தி வருகிறாய். நாளை எனக்கும் உனக்கும் கயிறு இழுக்கும் போட்டி நடக்கப்போகிறது. அப்பொழுது தெரியும் யார் பலசாலி என்று" என மார்தட்டி பேசியது நரி.

"என்னுடன் நீ கயிறு இழுக்கப் போகிறாயா? நான் ஒரு மூச்சுப்பிடித்து இழுத்தால் நீ ஆற்றுக்குள் வந்து விழுந்து விடுவாய். உன்னை அப்படியே சாப்பிட்டு விடுவேன்" என்றது முதலை.

"அதைத்தான் நாளை பார்த்துவிடப் போகிறோமே" என்று சொல்லிவிட்டுச் சென்றது நரி.

மறுநாள்

ஆற்றங்கரைக்கு அட்டகாசமாக வந்து சேர்ந்தது யானை. கயிற்றின் ஒரு நுனியை யானையிடம் கொடுத்து நரி,

"யானையாரே! நான் அந்த மரத்துக்கு அப்பால் கயிற்றின் மறு நுனியைப் பிடித்துக் கொள்வேன். இழுக்கலாம் என்று நான் குரல் கொடுத்ததும், இருவரும் கயிற்றை இழுக்கத் தொடங்க வேண்டும்" என்றது நரி.

கயிற்றின் நுனியைத் தன் துதிக்கையில் சுற்றிக் கொண்டு நான்கு கால்களையும் தரையில் பலமாக ஊன்றி ஆயத்தம் செய்து கொண்டது யானை.

கயிற்றின் மறு நுனியோடு மரத்திற்கு அப்பால் சென்ற நரி, ஆற்றங்கரையில் தயாராகக் காத்திருந்த முதலையிடம் கொடுத்து,

"நான் மரத்தின் அப்பால் கயிற்றின் மறு நுனியோடு நிற்கிறேன். இழுக்கலாம் என்று நான் குரல் கொடுத்ததும், கயிற்றை இழுக்கத் தொடங்க வேண்டும்" என்றது நரி.

கயிற்றின் நுனியை தன் கூரான பற்களிடையே பலமாகச் சுற்றி வாயை இறுக்கமாக மூடி தண்ணீரில் இறங்கித் தயாரானது முதலை.

கயிற்றின் ஒரு நுனியை யானையிடமும், மறுநுனியை முதலையிடமும் கொடுத்துவிட்டுப் புதர் மறைவில் மறைந்து கொண்ட நரி, "இழுக்கலாம்" என்று குரல் கொடுத்தது.

மறுமுனையில் நரி இருப்பதாக நினைத்துக் கொண்டு யானையும், முதலையும் கயிற்றைப் பலமாக இழுத்தன. சின்னஞ் சிறிய நரிக்கு இவ்வளவு பலம் என்று வியந்தன.

போட்டி வெகுநேரம் கடுமையாக நடந்தது. கயிற்றின் நீளம் அதிகமாக இருந்ததால் இரு மிருகங்களும் நேருக்கு நேர் பார்க்க முடியவில்லை. அத்துடன் வழியில் மரங்களும், புதர்களும் அவற்றை மறைத்தன.

திடீரென்று அவை பிடித்திருந்த கயிறு படீர் என்று அறுந்தது. அது அறுந்த வேகத்தில் யானை பின் பக்கமாக ஒரு பள்ளத்தில் விழுந்தது. முதலை ஆற்றிற்குள் விழுந்தது.

நரி முதலில் முதலையிடம் வந்தது,

"ஏய் முதலையே! கயிறு அறுந்ததால் நீ உயிர் பிழைத்தாய்,

இல்லாவிட்டால் என்னிடம் நீ தோற்றிருப்பாய். இப்போது என் பலத்தைத் தெரிந்து கொண்டாயா?" என்று கேட்டது.

"உன் பலம் தெரியாமல் இவ்வளவு நாளும் உனக்கு நான் துன்பம் கொடுத்து விட்டேன், என்னை மன்னித்து விடு" என்றது முதலை.

பின்னர் யானையிடம் சென்றது நரி.

"என்ன யானையாரே! எப்படி பொத்தென்று போய் பள்ளத்தில் விழுந்தீர் பார்த்தீரா? எழும்பக் கூட முடியவில்லை இல்லையா?" என்று கேட்டது நரி.

"ஆமாம் நரியே! உன் பலம் தெரியாமல் உன்னைத் தொல்லைப் படுத்திவந்தேன். என்னை மன்னித்துக்கொள்" என்றது யானை.

அன்றிலிருந்து யானையும், முதலையும் நரியுடன் சினேகமாக இருக்கத் தொடங்கின.

## சிறந்த வர்ணத்திற்குப் பரிசுதரும் எண்ணம்!



மேலே உள்ள படத்திற்கு வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றுக்கு பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது. அனுப்பவேண்டிய கடைசித் திகதி 24.06.1995.

வர்ணம் தீட்டும் போட்டி இல: 95
தினமுரசு வாரமலர்
த.பெ.இல.1772
கொழும்பு.

### வர்ணம் தீட்டும் போட்டி இல: 92

பரிசுக்குரியவர்:
எம்.எம்.மஹ்தியா பீபி
ஸாஹாத் மகா வித்தியாலயம், அகுறஸ்ஸ.

பாராட்டுக்குரியவர்கள்

ஜெ. சோவினி
மட்டக்களப்பு

ஜென்சி காமிலா
நல்லாயன் கன்னியர்மடம், கொட்டாஞ்சேனை.

செல்வி. பாத்திமா சானாஸ் வபா
நாங்கல்ல, துல்ஹிரிய.

ஜெ.செ.முத்துச் செல்வி
பு/உடப்பு.தமிழ்.ம.வி.

வடிவேல் பாரதி
புனித மிக்கல் கல்லூரி, மட்டக்களப்பு.

நுஸ்ரத் எம். ஸாலிஹ்
பாத்திமா மகளிர் மகா வித்தியாலயம் புத்தளம்.

## அறிவோம் மனதில் பதிவோம்



தென் அமெரிக்காவில் ஆர்ஜென்டினா நாட்டில் வளரும் ஓம்பு என்ற மரத்தை கோடாரியில் வெட்ட முடியாது. அந்த மரத்தின் தன்மை ரப்பர் போல இருப்பதால், கோடாரி உள்ளே செல்லாமல் அதிர்ந்து வெளியேவரும்.



இப்போதுள்ள மென்மையான பற்பசை டியூப்கள் 1892ம் ஆண்டு அமெரிக்காவிலும், இங்கிலாந்திலும் புழக்கத்திற்கு வந்தது. அதற்கு முன்பு பற்பசை டப்பாக்களில் தான் விற்கப்பட்டது.

பாப்பா முரசுக்கு உங்கள் ஆக்கங்கள் வரவேற்கப்படுகின்றன. ஆக்கங்களை அனுப்ப வேண்டிய முகவரி:
பாப்பா முரசு
தினமுரசு வாரமலர்
த.பெ. இல. 1772
கொழும்பு.

## வாரம் ஒரு நாடு



# கொலம்பியா

**அமைவிடம்:** தென் அமெரிக்காவில் வடமேற்கில்- பனாமா நாட்டை ஒட்டியுள்ளது. வடகிழக்கில் வெனிஸுலா, தென்கிழக்கில் பிரேஸில், தெற்கே பெரு, தென்மேற்கே ஈக்குவேடர் ஆகிய நாடுகளையும் மேற்கே தென் பசுபிக் பெருங் கடலையும் எல்லைகளாகக் கொண்டுள்ளது.

**பரப்பளவு:** 1,138,400, ச.கி.மீ. (440,000 சதுரமைல்)

**மக்கள் தொகை:** 31,812,000.

**தலைநகர்:** பொகோடா (மக்கள் தொகை: 4,500,000)

**பேசும் மொழி:** ஸ்பானிஷ் மற்றும் ஆங்கிலம்.

**மதம்:** உரோமன் கத்தொலிக்கம்

**ஆட்சிமுறை:** குடியரசு.

கொலம்பியா முன்னர் ஸ்பானிய அரசின் ஓர் அங்கமாக இருந்து 1819 கொலம்பிய மக்கள் இராணுவத்தினால் விடுவிக்கப்பட்டது. அருகிலுள்ள நாடுகளை இணைத்து 'கொலம்பிய மகா ராஜ்ஜியமாக' அமைக்கப்பட்டது. ஆனால் இது 10 வருடங்களே நீடித்தது. தலைநகரான பொகோடா கடல் மட்டத்திலிருந்து 2621 மீட்டர் உயரத்தில் -அன்டீஸ் மலையில் அமைந்திருக்கிறது.

இங்கு அதிக அளவில் உற்பத்தியாகி, பிற நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படும் கோப்பி, பிரதான அந்நியச் செலாவணியைத் தேடித்தருகிறது. வாழைப்பழம், மலர்கள், பருத்தி, புகையிலை, கோதுமை, சோளம், ஆகியவையும் உற்பத்தி செய்யப்படுகின்றன. மரகதக் கல் உற்பத்திக்கு உலகில் முதலிடம் வகிக் கிறது. நிக்கல், தங்கம், பிளாட்டினம் போன்ற கனிமங்களும் கிடைக் கின்றன.

**பார்க்க வேண்டியவை:** புராதன வரலாற்றுச் சின்னங்கள் இந்நாட்டில் ஏராளமாக உள்ளன. மிகப் புராதன கால தங்க ஆபரணங்களும் வேறு பல பொருட்களும் கொண்ட காட்சி சாலையான 'மியூசியோடெல் ஒறோ' பொகோடோ நகரில் உள்ளது. இது தவிர அகழ்வாராய்ச்சி நூதன சாலையும் தேசிய வரலாற்று நூதன சாலையும் இங்கு வரும் எவராலும் தவறவிடப்படாதவை. பண்டைக் காலத்தில் கட்டப்பட்ட அழகான தேவாலயங்களும் இங்குள்ளன.

கொலம்பியா மரகதக்கல் உற்பத்தியில் முன்னனி வகிப்பதால், இவை பட்டைதீட்டப்படுவதும், பல்வேறு உருவங்களில் வடிவமைக்கப்படுவதும் குடிசைத் தொழிலாகவும், தொழிற்சாலைகளில் பிரதான மானவையாகவும் உள்ளன. யாத்திரீகர்கள் இவற்றைப் பார்வையிடுவதுடன் மலிவான விலையில் கொள்முதல் செய்வதுமுண்டு.

கார்ட்டஜேனா என்ற வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த நகரம் பல முக்கியமான இடங்களைக் கொண்டுள்ளது. பழைய கோட்டை கொத்தளங்கள், தேவாலயங்கள், மாளிகைகள் ஆகியவையும் பயணிகளை ஈர்க்கும் அம்சங்களாகும். கரிபியன் கடலை ஒட்டிய நகரமாக விளங்குவதால் இந்நகரை 'தென் அமெரிக்காவின் தங்கவாயில்' என்று வர்ணிக்கின்றனர்.

## ஊதா பலூன்



"டேய் என்ன பலூன் வாங்கி வந்திருக்கிறான் உள்ளே ஓட்டை இருக்கும் போலிருக்குது. என்ன ஊதினாலும் ஊதவில்லையே"

"நீங்கதானே ரொம்ப நன்றாக இருக்கும் ஊதா பலூன் வாங்கிட்டு வா என்று சொன்னீர்கள்."

"நான் சொன்னது ஊதா நிற பலூனை, ஊதாத பலூனை அல்ல."

அனுப்பியவர்-மோ. தமிழரசி.
மத்திய கல்லூரி, கிளிநொச்சி

www.padippakam.com

நன்றி - நூலகத்திட்டம்

# ஒரு தேவி என்னைத் தேடுகிறாள்

4

திகில் கதை மன்னன் **ராஜேந்திரகுமார்**

லக்ஷ்மம்மா!

இருபத்தைந்து வயதுக்குள் அதிகார ஆணவம் அதிகமாக யாரையும், எதையும் அலட்சியப் பார்வை பார்ப்பாள்.

அப்புண்ணி? நோய் வாய்ப்பட்டவர். ஒவ்வொன்றுக் கும் அவள்-அவன் வரக்கூடாது. அதற்குள் ஏதாவது செய்து அவனை அழிக்க வேண்டும். எப்படியும் தந்தையையும் மகனையும் ஒன்று சேர விடக்கூடாது. வழியிலேயே அவன் கதை முடிய வேண்டும்.

எப்படி? எப்படி?

பின்தொடரும் பயங்கரத்தை உணராமலே திட்டம் போட்டுக்கொண்டிருந்தாள் லக்ஷ்மம்மா.

இருமும் கணவனைப் பார்த்தாள்.

"அமாவாசை, பவுர்ணமியில் நோயின் கடுமை அதிகமாகும் தான். பயப் படாதீர்கள். நாளைக்கு அமாவாசை-தவிர சூரிய கிரகணம் வேறு உபாதை அதிகமிருக்கும்."

பஞ்சாபி டிரஸ் போட்டுக் கொண்டு வெளியே வந்தாள். அமைதியாக யோசிக்கும்- ஆசைவரும் போதெல்லாம் அவள் குதிரையில் ஏறி வேகமாகப் போவது வழக்கம்.

வெள்ளை நிற அராபிக் குதிரை திண்ணென்று நின்ற இடம் நில்லாமல் தவித்துக்கொண்டிருந்தது. ஏறியமர்ந்து சவுக்கை சுண்டிவிட-எடுத்த எடுப்பில் குதிரை காற்றாகப் பறக்கிறது.

"எப்படி? எப்படி?" மனம் புலம்பிக் கொண்டேயிருந்தது.

"எப்படி?"

"விஷம்!"

"வேண்டாம். பொலிஸ் கேசாகி விடும்."

"சென்னையிலிருந்து இங்கே வரும் வழியிலே ஆட்களை விட்டுக்கொன்று-

"வேண்டாம் ஆட்கள் நம்பிக்கைக்கு அப்பாற்பட்டவர்கள். அப்புறம் நானே ப்ளாக்மெயில் செய்யப்படலாம்."

எப்படியும் அவன் உயிரோடு வரக்கூடாது. அழிய வேண்டும்.

சோளக்காட்டு நடுவே குதிரைக்கால் தரையில் பாய்வது உணரமுடியாத அளவு வேகத்தில் போய்க் கொண்டிருந்தது.

சோளக் கொல்லையிலிருந்து திடீரென்று வெளிப்பட்டாள் அந்தப்பெண்.

முழு வேகத்தோடு வந்த குதிரையை நிறுத்த முழுப்பலத்தையும் பிரயோகித்து லகானை இழுக்க வேண்டி வந்தது.

"முண்டம். குதிரை வருகிறது தெரியல்ல? இப்படியா திடீர்னு மேடேறி வர்றது?"

அந்தப் பெண் பதிலுக்கு வேகமாக உற்றுப் பார்த்தாள்.

மெலிதாகச் சிரித்தாள்.

"என்ன பார்க்கிறே?"

"நீதான். அடுத்தது நீதான்!"

"என்ன அடுத்தது?"

"என் தேவன் தேர்ந்தெடுத்த அடுத்தது..."

குதிரையின் அமைதியற்ற கனைப்பு அவள் சொன்ன மீதியைக் கேட்க விடாமல் தடுத்தது.

"உன் புருஷனுக்கு உடம்பு சரியில்லை இல்லையா?" என்றவளை வியப்புடன் பார்த்தாள் லக்ஷ்மம்மா.

"ஊரறிஞ்ச விஷயம் உனக்குத் தெரிஞ்சதில் எனக்கு ஆச்சரியமில்லே! நகர்."

"உன் கவலை என்ன? உன் குழப்பம் என்ன என்று எனக்குத் தெரியும். அதைத் தீர்த்துவைக்க தேவன் ஒருவனால்தான் முடியும்."

"யார் நீ?"

"தற்சமயம் உன் நம்பிக்கைக்கு உகந்த சிநேகிதி. இந்தா!"

"என்ன அது?"

"எலுமிச்சம்பழம்."

"நீயே அறுத்துத் தலையில் தேச்சுக்க. முன் பின் தெரியாத ஒருத்தியிடம் என் சொந்தக் கவலைகளைத் தெரிவிப்பதற்கு இல்லை. நீ நகர்"

சவுக்கால் ஓங்கி ஓங்கி அடித்ததும் குதிரை நகராமல் கனைப்பும் அமைதியின்மையுமாக முன்னங்கால்களை உயர்த்தி திணறிக் கதறியதுடன்-

அவளை பின்புறமாகச் சரிய வைத்து தள்ளியது.

மல்லாந்து விழுந்தவளிடமும் நீட்டினாள் எலுமிச்சம்பழத்தை.

"என்ன இது? நோன்செனஸ்!"



"இதைப் பத்திரமாக வச்சிக்க இது உன்னோட இருந்தால் உன்புருஷன் உயிருக்கு வந்த ஆபத்து மறையும்!"

"ஏன்? அவருக்கு என்ன ஆபத்து?"

"இன்றைக்கு ராத்திரி அவருக்கு ஒரு பெரிய கண்டம் இருக்கு. அதிலிருந்து மீளணும்னா இந்தப் பழம் உன்கிட்டே இருக்கணும். வாங்கிக்க"

"முட்டாள் பெண்ணே! அவரைப் பாதுகாக்க டாக்டர் இருக்கார். நகர்"

மீண்டும் குதிரை ஏறி சவுக்கால் அடிக்க அது பறந்தது.

கொஞ்ச தூரம் போனதும்-

யாரோ பிடித்து இழுத்தாற் போல குதிரை நின்றது. கால்களால் உதைத்துப் பார்த்தாள்.

சவுக்கை வீறவிட்டு சொடேர் சொடேர் என்று அடித்த போது சட்டென்று பறிக்கப் பட்டால் போல சவுக்கு நின்றது. அது இழுக்கப்பட்டதும் மீண்டும் மல்லாந்து விழுந்தவள்-

தரையில் விழாமல் அந்தரத்தில் நின்றாள்.

அந்த ஆணழகன் தாங்கி நின்றான். இரும்பு போன்ற உறுதியான கைகள் தாங்கின. சதை இறுகிக் கெட்டித்துப் போன செதுக்கினாற் போன்ற மார்புகளின் உறுதியை அவள் தோளால் உணர முடிந்தது.

அவளையுமறியாமல் அவளது இடது கை உயர்ந்து அவன் கழுத்தை வளைத்து இழுத்தது. அவனும் இணக்கமாய் முகம் கிறங்கி அவள் உதட்டைக் கவ்வி முத்தமிட்டான்.

என்னை அடிமையாக்கும் ஆண் மகனே! யார் நீ?" என்று மிகவும் கிறங்கியவளாக-"என்னைப் பைத்தியமாக அடிக்கிறாய் நீ! உன்னை தனியே சந்திக்க ஆசைப்படுகிறேன்-கட்டிலில்."

"சந்திக்கத்தான் போகிறாய். இன்று இரவு என்னைத் தேடி வருவாய்!"

திக்கென்று விழித்தாள்.

"இன்றைக்கா? முடியாதே! என் எதிரி வருகிறான். அவனை அழிக்க வேண்டாமா? செய்வதறியாமல் திணறுகிறேன். ஒன்று செய்யேன்"

"என்ன?"

"உன் கம்பீர உடலுக்கு எதையும் துணிந்து செய்வாய் போல் இருக்கிறது. எனக்கு உதவேன்!"

"என்ன உதவி?"

"என் கணவரின் மகன் சென்னையிலிருந்து புறப்பட்டு நாளைக் காலையில் எர்ணாகுளம் வருகிறான். அங்கிருந்து அவன் இந்த ஊருக்குத் தன் வீட்டுக்கு வரக்கூடாது. வழியிலேயே தீர்த்து விட வேண்டும்."

"இரவு என்னைத் தேடி வருவாய்." என்றவன் மீண்டும் முத்தமிட-மயங்கினாள்.

"எங்கே வர வேண்டும்."

"திரும்பிப் போகும் போது உன்வீட்டு வாசலில் எலுமிச்சம் பழம் இருக்கும். இதை எடுத்துக் கொள்!"

"எடுத்தால்..?"

"அது வழி சொல்லும்!"

"அதற்கென்ன வாயா இருக்கிறது? நீ வீட்டுக்கே வாயேன். கிழவனுக்குத் தூக்க மாத்திரை கொடுத்து தூங்கப் பண்ணி விடுகிறேன். அப்புறம் நீ, நான் சொர்க்கம்."

"அது எதற்குப் போலி சொர்க்கம்? என்னைத் தேடி வா! உன்னை நிஜமான சொர்க்கத்திற்கே வழி காட்டுகிறேன்."

"நிஜமாகவா? ஆனால் இந்த ஊரிலேயே எங்கள் வீடுதான் பெரியது; விசாலமானது. ஆனால் சொர்க்கம் மாதிரியே-"

மீண்டும் அவள் உதட்டைக் கவ்விப் பேச்சை நிறுத்தினான்.

"வருகிறாய் நீ! வருகிறாய் தேவி! நீ வருகிறாய் என்னைத்தேடி."

அவளைத் தள்ளிவிட்டு நடந்தான்.

"ஏய்! இரு, இரு." என்றவள், அவன் நடந்த வேகத்திற்கு ஈடுகொடுக்க முடியாமல் திரும்ப ஓடிக் குதிரையைத் தாவி ஏறிப் பிடிக்க விட்டுத் தொடர்ந்தாள். அதற்குள்-

அவன் மலைப்பாதையின் மறுமுனையில் திரும்பி இருந்தான்.

குதிரை ஓடவிட்டு திருப்பத்தில் திரும்பியபோது-அவனில்லை.

நீளமாகச் சென்றது சாலை. கண்ணுக்கெட்டிய தூரம் வரை கண்களால் துளாவினாள். காணோம்.

ஒரு வேளை பக்கவாட்டில் இறங்கிப் போயிருப்பான் என்று குட்டைச் சுவருக்கு அப்பால் பார்த்தாள்.

சரேலென்று சில நூறடிக்குக் கீழே தரையில் மரங்கள் செடிகளாகித் தெரிந்தன.

வியர்த்துப்போய் நிமிர்ந்தாள். "அப்பா! என்னமாய் ஒரு பள்ளம். இதிலாவது-அவனாவது இறங்குவதாவது? முடியாத காரியம்."

திரும்பியவள் ஒரு உருவத்தின் மீது மோதிக் கொண்டு தடுமாறிப் பார்த்து-

வியந்தாள்: "நீயா? எலுமிச்சம் பழம்?"

அவள் பதில் சொல்லாமல் முறைத்துப் பார்த்தாள்.

"தெரியும்! நீ சொல்லச் சொல்ல பழத்தை வாங்காமலே போய்ட்டேன்னு கோபம். அப்படித்தானே? பரவாயில்லை கொடு! அவனே சொல்லிவிட்டான் வாங்கிக்கச் சொல்லி. கொடு!""

அவள் அசையாமல் நின்று பார்க்கவே கொஞ்சம் கோபமே வந்தது.

"என்ன பார்க்கிறே? என்ன தான் வேணும் உனக்கு?"

மெல்ல நாலடி பின்வாங்கிச் சட்டென்று கையை நீட்டினாள்.

"நீ"-அழுத்திச் சொன்னாள். "நீதான் வேண்டும்."

"நானா?" சிரித்துவிட்டாள். "நான் ஒரு பெண். நீயும் ஒரு பெண். நான் உனக்குப் பயன்படமாட்டேன். கம்பீர ஆண்மகனாகத் தேர்ந்தெடு. அவனைக் கட்டிலில் சந்தி. சுவாரஸ்யமாக இருக்கும்."

அழுத்தி முரட்டுக்குரலில் சொன்னாள். "நீ...நீதான் வேண்டும்."

அவள் பார்வையின் வெறுமை-மூக்கின் உக்ரம்-விறைத்து நின்று சுட்டிக்காட்டும் விரல்.

மெலிதான நடுக்கம் வந்தது. அவளுக்கு இது புதிய அனுபவம்.

அலட்சியமாகவும் மிரட்டியும் பார்த்து அவள்தான் மற்றவர்களைப் பயமுறுத்தியிருக்கிறாளே தவிர-

யாரைக் கண்டும் இவள் பயந்தவளல்ல. ஆனால் இவள்?

இந்தப் பெண்!

இவள்தான் முதல் பெண்.

அவள் போகத் திரும்பினாள்.

"ஏய்! என்ன பழத்தைக் கொடுக்காமலே திரும்பிப்போறே?"

"வேண்டாம்னு சொன்னே. இப்ப ஏன் கேட்கிறே?"

"என் தேவன் இட்ட கட்டளை, கொடு!"

நடந்தாள்.

"ஏய்" ஓடிப்போய் குறுக்கே நின்று தடுத்தாள். "என்ன திமிரா? கேட்கிறேன். பதிலும் சொல்லாம, பழமும் தராமப் போனா என்ன அர்த்தம்?"

"இருக்க வேண்டிய இடத்தில் இருக்குன்னு அர்த்தம்!"

"எந்த இடத்தில்?"

"சொல்லியிருப்பாரே!" என்றவாறு போய் விட்டாள்.

குழம்பினாள் லக்ஷ்மம்மா. "எங்கே? எங்கே என்று சொன்னாள்?"

சேணத்தில் கால் வைத்து எகிறிக் குதிரை மீது ஏறினாள்.

தட்டிக் கொடுத்தாள். அவசரமே இல்லாமல் மெதுவாக நடத்தினாள்.

மனதுக்குள்ளே இனம் புரியாத ஒரு பயம் இருந்து கொண்டே இருந்தது.

வீட்டு வாசலில் வந்ததும் படிக்கட்டில் அந்த எலுமிச்சம் பழம் இவளை ஈர்த்தது.

சந்தனம் பூசி சிகப்பாக குங்குமம் வைத்து-

சட்டென்று கையால் பறித்தவள் உள்ளங்கையில் சுருக்கென்று ஊசி குத்தவே உதறினாள். அப்படியும் ஒட்டிக்கொண்டிருந்த அதை-

அதன் பயங்கரத்தை உணராமலே "சே! சனியன்" என்று உதறி எறிய, அது மண்ணில் புரண்டது.

"முட்டாள் பெண்! ஊசி இருக்கு, ஜாக்கிரதைன்னு சொல்லமாட்டாளா? ஐயோ ரத்தம்!"

உள்ளங்கையைப் பார்த்தாள். சின்னப் பொட்டாக துளித்த ரத்தம்-திடீரென்று பெருகுவது போன்ற பிரமை ஏற்பட்டது. கைக் கட்டை விரலால் அழுத்த அழுத்த மேலும் மேலும் பெருகுவது போன்ற பிரமைக்கு நடுங்கிப் போனாள்.

அவள் போட்ட கூச்சலுக்குத் தோட்டக்காரன், வேலைக்காரி மட்டுமல்லாமல் அப்புண்ணியே மெல்ல எழுந்து ஜன்னல் வழியாப் பார்த்தான் திகிலாக.

"என்ன நடந்தது? ஏன் கத்தினே?"

"ஏதோ எலுமிச்சம்பழம் கிடந்தது. எடுத்தேன். அதிலிருந்த ஊசி உள்ளங்கையைக் குத்திடுச்சிங்க. ரத்தமா பெருகுது."

"எங்கே காட்டுங்கம்மா?" என்ற வேலைக்காரிக்குப் பிரித்துக் காட்டிய உள்ளங்கை சுத்தமாக இருந்தது-

பொட்டு இரத்தம் கூட இல்லாமல்

"எங்கேம்மா இரத்தம்?"

"கொட்டிச்சே! நான் பார்த்தேனே! எவ்வளவு இரத்தம்!"

வேலைக்காரிகளின் பார்வையே 'என்ன உளர்றே?' என்பது போல பார்க்கவே தவித்தாள்.

"நான் பார்த்தேன், உணர்ந்தேன்."

"அந்த எலுமிச்சம் பழம் எங்கே அம்மா?"

"இங்கேதான் உதறினேன்."

எல்லோரும் குனிந்து ஆராயத் துவங்க-

அங்கிருந்தே கத்தினார் அப்புண்ணி. "என்ன நடக்கிறது அங்கே? எதைத் தேடறீங்க?" அவர்கள் சொன்னதும்-

"முட்டாள்களா! ஒரு பழத்துக்கு இத்தனைபேர் தேடணுமா? பின்னால் மரமே இருக்கு. பறிச்சுக்க வேண்டியதுதானே? சனியன்களா! கூத்து போதும். வாங்க உள்ளே!" என்று கத்தவே-

பழம் தேடும் வேலை நின்றது. திரும்பி பங்களாவை நோக்கிப் போனார்கள்.

இவள் கூடவே நடந்த வேலைக்காரி கேட்டாள், "இங்கே எப்படிம்மா எலுமிச்சம் பழம் வரும்? அதிசயமாயிருக்கே!"

"வழியிலே ஒருத்தி கொடுத்தாள். வேணாமுட்டேன். அப்புறம் இங்கே வந்து பார்க்கிறேன். கிடந்தது. அதைப்பார்த்தும் குதிரை கூட மிரண்டு கத்திச்சு சண்டித்தனம் செய்தது-"

"குதிரை எங்கேம்மா?"

"ஓடியே போயிடுச்சு." சிரித்தாள். "ஏண்டி குதிரைக்கு எலுமிச்சம் பழம்னா அவ்வளவு பயமா?"

"ஏதோ விபரீதமா படுதும்மா. அந்த எலுமிச்சம் பழம் எப்படி இருந்தது?"

"சந்தனக் கீற்றுக்கு நடுவில சிகப்பாக குங்குமப் பொட்டு வைச்சு நடுவில ஊசி குத்தி வைச்சிருந்தது. ஏன்?"

"அம்மா கையைக் காட்டுங்க!"

அவள் வலது கையைப் பார்த்தபோது துளியூண்டு இரத்தம் கட்டியிருந்தது. கண்டதும் வேலைக்காரி முகம் மாறினாள்.

"அதே கதை! மறுபடியும் அதே கதை!"

"எதே கதை?"

"சில வருஷங்களுக்கு முன்னால் ஷோபா என்கிற பெண்ணுக்கும் இதே மாதிரி எலுமிச்சம் பழம் ஊசி குத்தி வந்தது."

வீட்டுப்படியேறியவாறு- "உம் சொல்லு."

"இல்லேம்மா, வேண்டாம்! அதை நீங்க கேட்க வேண்டாம். இது ஏதோ ஏவல், ஜாக்கிரதையா வீட்டுக்குள்ளேயே இருங்க. நான் போய் மந்திரவாதி ஒருத்தரைக் கூட்டிட்டு வாரேன்."

சிரித்துவிட்டாள்.

"பைத்தியம்! இதெல்லாம் நம்பிக்கிட்டு. போ! போய் உன் வேலையைப் பாரு?"

"அம்மா இது விளையாட்டு விஷயமில்லே. சொன்னாக் கேளுங்க."

அலட்சியமாக நடந்தவள் திரும்பிப் பார்த்து வேலைக்காரியின் கன்னத்தில் அறைந்தாள்.

"திமிர் பிடிச்சவளே! என்னைப் பெயர் சொல்லி லக்ஷ்மம்மான்னா கூப்பிடுறே?"

"நான் கூப்பிடல்லியேம்மா!"

"இப்பத் தெளிவா கேட்டதே."

"அம்மா! என்னை என்போக்கில் விடுங்க. இது விளையாட்டுத்தனமாக விடுகிற விஷயமில்லே. நான் போய்.."

"சாப்பாடு எடுத்துவை. ஏகப்பட்ட தூரம் செய்த குதிரை சவாரிக்குப் பசி வயிற்றை எரிக்கிறது."

"மறுபடியும் சொல்றேன். இதை விளையாட்டா நினைக்காதீங்க. இது விபரீதம்."

"நீ இன்னுமா உள்ளே போகல்லே?"

"சரிம்மா. உங்க இஷ்டம். நடக்கிறதைத் தடுக்க யாரால் முடியும்?"

தன் அறைக்குள்ளே போய் ஆடைகளை மாற்ற முயன்று காஷ்மீர பலகை தடுப்புக்குப் பின்னால் போன போது-

களைந்து பிறகு பிறந்த மேனியாக வெளியே வந்து அவசரமே இல்லாமல் பீரோவைத் திறந்து புடவையைத் தேர்ந்தெடுத்த போது-

அணியும்போதெல்லாம்-

வாசலில் நாய் ஆக்ரோஷமாகக் குலைத்துக்கொண்டேயிருந்தது.

'தோட்டக்காரா! அந்த சனியனுக்கு என்ன ஆச்சு பாரு' என்று அப்புண்ணி கத்துவதும் கேட்டுக்கொண்டேயிருந்தது.

தற்செயலாகச் சாத்திய கண்ணாடி ஜன்னலை பார்த்தவளுக்கு முதலில் பயமும் பிறகு சந்தோஷமும் பிரகாசமாக வந்தது.

ஜன்னலுக்குப் பின்னே அவன் தெரிந்தான்.

அதே ஆணழகன்.

ஓடிப்போய் ஜன்னல் கதவைத் திறந்தபோது அங்கே யாருமில்லை. திரும்ப முயலுமுன் தற்செயலாகக் கவனித்தாள்.

முதல்நாள் பெய்த மழையினால் கொதகொதப்பாகிப் போன செம்மண் தரையில் காலடிகள் நீளமாகத் தெரிந்து மறைந்திருந்தன.

(தொடர்ந்து வரும்)

## பேனா நண்பர் அரங்கம்



பெயர்:-எம். ரபீப்
வயது:-23
முகவரி:-10/2, தெஹிவளை வீதி, மகரகம.
பொ.போ:- ரீ.வி, பத்திரிகை, வானொலி.



பெயர்:-வி. நாதன்
வயது:-29
முகவரி:-10, ,ST. DENIS DR, # 834, DON MILLS TORONTO-ONT. M3C- 1E9, CANADA.
பொழுது .போக்கு:- வழமையானவை.



பெயர்:-ஜே. ஜெஸ்மின் ஹனீபா
வயது:- 25
முகவரி:-உப தபால் அலுவலகம், உப தபாலக வீதி, மாளிகைக்காடு-02.
பொ. போ.:-தொலைக்காட்சி, தையல்.



பெயர்:-ஜே. ஜான்ஸிராணி
வயது: 17
முகவரி: புளியங்குளம், சாம்பல் வீதி. திருகோணமலை.
பொழுது போக்கு:- வழமையானவை



பெயர்:-எல். அலெக்சாந்தர்
வயது:-19
முகவரி:-எதன்சைட் எஸ்டேட், கொட்டகலை.
பொ. போ.:-பத்திரிகை, வானொலி.

பெயர்:-ஜே. சிவகுமார்
வயது:-19
முகவரி:- இல. 159, நுவரெலிய வீதி, பாரதெக்க.
பொ. போ:-கிரிக்கெட், வானொலி, பத்திரிகை.

பெயர்:-எம். பாயிஸ்
வயது:-15
முகவரி:-விரு தோடை, மதுரங்குளி.
பொழுது போக்கு:- பத்திரிகை, வானொலி,

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்

# தாய்

## 29

## மக்சீம் கார்க்கி

“நீங்கள் ஒரு விசித்திரப் பிறவி, அம்மா” என்று கூறிச் சிரித்தான் ஹஹோல்; “மக்களுக்கு எத்தனையோ விஷயங்கள் தேவையாயிருக்கின்றன. ஆனால் ஒரு தாய்க்குத் தேவையான பொருள் எல்லாம் ஒன்றே ஒன்றுதான்-பாசம்!”

“இல்லை, அந்திரியுஷா! அந்த மக்களை நீங்கள் பார்த்திருக்க வேண்டும்” என்று திடீரென்று ஏற்பட்ட உத்வேக உணர்ச்சியோடு பேசத் தொடங்கினாள் அவள். “அவர்களுக்கு அதெல்லாம் பழகிப் போய்விட்டது! அவர்களது பிள்ளைகளை அவர்களிடமிருந்து பிடுங்கிப் பறித்துச் சிறைக்குள்ளே தள்ளி விட்டார்கள். என்றாலும், அவர்கள் எதுவுமே நிகழாதது மாதிரி நடந்து கொள்கிறார்கள். சும்மா வெறுமனே வந்து உட்கார்ந்து காத்திருந்து, ஊர் வம்புகளைப் பேசிக்கொண்டிருக்கிறார்கள். படித்தவர்களே இந்த மாதிரி நடந்து கொண்டால், அறிவில்லாத பாமர மக்களிடம் நீ என்னத்தைத்தான் எதிர்பார்க்க முடியும்.?”

“புரிகிறது. அது இயல்புதானே!” என்று தனக்கே உரிய கேலித்தொனியில் பதிலளித்தான் ஹஹோல். “பார்க்கப் போனால், சட்டம் நம்மீது கடுமையாய் இருப்பதுபோல் அவர்களிடம் கடுமையாக இருப்பதில்லை. ஆனால் நம்மைவிட அவர்களுக்குத்தான் சட்டத்தின் உதவி அதிகம் தேவை. எனவே சட்டம் அவர்கள் தலையில் ஓங்கியறைந்தால், அவர்கள் சத்தம் போடுவார்கள்; ஆனால் வெளிக்குத் தெரியாமல் சத்தம் போடுவார்கள்; தன் கையிலுள்ள தடியைக் கொண்டு தானே தன் தலையில் அடித்துக் கொண்டால், அந்த அடி அப்படியொன்றும் உறைக்காது. நம்மவர் அடித்தால்தான் உறைக்காது, வலிக்காது!......”

ஒருநாள் இரவில் தாய் மேஜையருகே அமர்ந்து காலுறை பின்னிக்கொண்டிருந்தாள்; ஹஹோல் பண்டைக்கால ரோமானிய அடிமைகளின் புரட்சிச் சரித்திரத்தை அவளுக்குப் படித்துக் காட்டிக்கொண்டிருந்தான். அந்தச் சமயம் யாரோ கதவைப் பலமாகத் தட்டும் ஓசை கேட்டது.

ஹஹோல் எழுந்து சென்று கதவைத் திறந்தான். நிகலாய் வெஸோவ்ஷிகோவ் கையில் ஒரு மூட்டையுடன் உள்ளே வந்தான். அவனது தொப்பி தலையின் பின்புறமாகச் சரிந்து போயிருந்தது; முழங்கால் வரையிலும் சேறு தெறித்துப் படிந்திருந்தது.

“போகிறபோது இங்கே விளக்கு வெளிச்சம் தெரிந்தது. சரி, பார்த்துவிட்டுப் போவோம் என்று உள்ளே வந்தேன். சிறையிலிருந்து வருகிற வழி” என்று ஒரு விபரீதத் தொனியில் பேசினான் அவன். பிறகு பெலகேயாவின் கரத்தைப் பிடித்து மன நிறைவோடு குலுக்கிவிட்டு மேலும் சொன்னான்: “பாவெல் தன் வணக்கங்களைத் தெரிவிக்கச் சொன்னான்.”

அவன் மிகவும் சிரமப்பட்டுக் கீழே உட்கார்ந்தான். சோர்ந்து மங்கிய சந்தேகக் கண்களோடு அறையைச் சுற்று முற்றும் பார்த்துக் கொண்டான்.

முன்னெல்லாம் தாய்க்கு அவனைக் கண்டால் பிடிக்கவே பிடிக்காது. அவனது விகாரமான மொட்டையடித்த தலையும், சின்னஞ் சிறு கண்களும் அவளை ஏனோ பயமுறுத்திக் கொண்டேயிருந்ததுண்டு. ஆனால் அன்றிரவிலோ அவனைப் பார்த்த போது அவள் மகிழ்ச்சி கொண்டாள்; அவனோடு பேசும் போது அன்பு ததும்பப் புன்னகை செய்தாள்.

“நீ எவ்வளவு மெலிந்துவிட்டாய்! அந்திரியுஷா, இவனுக்கு ஒரு குவளைத் தேநீர் கொடுப்போம்.”

“நான் தேநீர்ப் பாத்திரத்தை அப்போதே கொதிக்க வைத்தாயிற்றே” என்று சமையல் கட்டிலிருந்தவாறே பதில் கொடுத்தான் ஹஹோல்.

“சரி. பாவெல் எப்படி இருக்கிறான்? உன்னைத் தவிர வேறுயாராவது விடுதலையானார்களா?”

நிகலாய் தலையைத் தொங்கவிட்டான்.

“பாவெல் இன்னும் பொறுமையோடு காத்துக்கொண்டு தானிருக்கிறான். அவர்கள் என்னை மட்டும்தான் விடுதலைசெய்தார்கள்.” அவன் தன் கண்களைத் தாயின் முகத்துக்கு நேராக உயர்த்தினான்; பற்களை இறுகக் கடித்துக்கொண்டு மெதுவாகப் பேசினான்: “நான் அவர்களிடம் சொன்னேன்-! 'போதும், போதும். என்னைப் போகவிடுங்கள். இல்லையென்றால் நான் இங்கேயே உங்களில் யாரையாவது கொன்று தீர்த்துவிட்டு நானும் தற்கொலை செய்து கொள்வேன்' என்று சத்தம் போட்டேன். எனவே அவர்கள் என்னை விட்டுவிட்டார்கள்.”

“ஆ!” என்று பின்வாங்கியவாறு அதிசயித்தாள் தாய். அவனது குறுகிய குறுகுறுத்த கண்களை அவளது கண்கள் சந்தித்தபோது அவள் தன்னையுமறியாமல் கண்களை மூடிக்கொண்டாள்.

“பியோதர் மாசின் எப்படியிருக்கிறான்? இன்னும் கவிதை எழுதிக் கொண்டுதான் இருக்கிறானா?” என்று சமையலறையிலிருந்தவாறே கத்தினான் ஹஹோல் .

“எழுதுகிறான். ஆனால், அதெல்லாம் எனக்குப் புரிவதில்லை” என்று தலையை அசைத்துக் கொண்டு சொன்னான் நிகலாய். “அவன் தன்னைப் பற்றி என்னதான் நினைத்திருக்கிறானோ? வானம்பாடியென்று நினைப்பு போலிருக்கிறது! அவர்கள் அவனைக் கூண்டில் பிடித்து அடைத்து விட்டார்கள்; அந்த வானம்பாடியோ உள்ளேயிருந்து கொண்டு பாட்டுப்பாடுகிறது. எனக்கு ஒரு விஷயம் மட்டும் தெளிவாகப்படுகிறது. நான் என் வீட்டுக்குப் போக விரும்பவில்லை.”

“வீட்டுக்குப் போய்த்தான் ஆகப்போகிறதென்ன?” என்று முனகினாள் தாய். “காலியான வீடு, எரியாத அடுப்பு, எல்லாம் குளிர்ந்து விறைத்துக் கிடக்கும்.....”

அவன் பதில் சொல்லவில்லை. கண்களை மட்டும் சுருக்கிச் சுழித்தான். பிறகு தன் பாக்கெட்டிலிருந்த சிகெரட் பெட்டியை எடுத்து, ஒரு சிகெரட்டைப்



பற்றவைத்துக் கொண்டான். தன் முன்னே திரிதிரியாகப் பறந்து செல்லும் புகை மண்டலத்தை ஒரு சோம்பேறி நாயைப்போல வெறுமனே கூர்ந்து கவனிக்க ஆரம்பித்தான் நிகலாய்.

“ஆமாம். எல்லாமே குளிர்ந்து போய்த்தான் கிடக்கும். தரையில் பாச்சைகள் செத்து விறைத்துக் கிடக்கும்; எலிகள் கூட செத்துக் கிடக்கும். பெலகேயா நீலவ்னா, இன்று இரவை நான் இங்கே கழிக்கிறேனே, முடியுமா?” என்று அவளைப் பார்க்காமலேயே கரகரத்துப் பேசினான் அவன்.

“தாராளமாய், இதற்குக் கேட்க வேறு வேண்டுமா?” என்று அவசர அவசரமாக பதிலளித்தாள் அவள். அவனது முன்னிலையில் இருப்பது அவளுக்கு என்னவோ போலிருந்தது.

“இந்தக் காலத்திலே, பிள்ளைகள் தங்கள் பெற்றோர்களுக்காகக் கூட வெட்கித் தலை குனிய வேண்டியிருக்கிறது....”

“என்ன?” என்று திடுக்கிட்டு அதிசயத்தோடு கேட்டாள் தாய்.

அவன் அவளைப் பார்த்தான். பிறகு கண்களை மூடிக்கொண்டான்; அப்போது அவனது அம்மைத் தழும்பு விழுந்த முகத்தில் கண்களும் குருடாகிப் போய்விட்டன போலத் தோன்றியது.

“இல்லை. பெற்றோர்களைக் கண்டுகூட பிள்ளைகள் வெட்கப் பட வேண்டியிருக்கிறது என்று சொன்னேன்” என்று பெருமூச்சுடன் பதிலளித்தான் அவன். “பாவெல் உன்னைக் கண்டு வெட்கப்படவில்லை. நானோ என் தந்தைக்காக வெட்கப்பட வேண்டியிருக்கிறது. நான் இனிமேல் அவன் வீட்டில் காலடிகூட எடுத்துவைக்க மாட்டேன். எனக்கு அப்பனே கிடையாது; எனக்கு வீடும் கிடையாது. பொலிஸ்காரர்கள் என்னைக் காவலில் வைத்திராவிட்டால், நான் சைபீரியாவுக்கே போயிருப்பேன். அங்கு கடத்தப்பட்டு, அங்கிருப்பவர்களை விடுதலை செய்வேன்; ஓடிப்போய்விட உதவி செய்வேன்....”

அவன் துயரப்படுகிறான் என்பதை அவளது உணர்ச்சி பூர்வமான இதயம் உணர்ந்தது. எனினும் அவனது வேதனை அவள் இதயத்தில் அனுதாப உணர்ச்சியை உண்டாக்கவில்லை.

“அப்படி நினைத்தால், நீ போய் விடுவதே நல்லது.”

என்று பதில் சொன்னாள். ஏதாவது பதில் சொல்லாதிருந்தால் அவனைத் துன்புறுத்தியதாகும் எனக் கருதியே இப்படிச் சொன்னாள்.

அந்திரேய் சமையலறையிலிருந்து வெளியேவந்தான்.

“நீ என்ன உபதேசிக்கிறாய்?” என்று கேட்டுக்கொண்டே சிரித்தான்.

தாய் எழுந்து நடந்துகொண்டே, “நமக்கு ஏதாவது சாப்பாட்டுக்கு வழி பண்ணப் போகிறேன்” என்று தனக்குள் சொல்லிக் கொண்டாள்.

ஹஹோலையே சிறிது நேரம் கூர்ந்து பார்த்துவிட்டு, நிகலாய் திடீரென்று சொன்னான்:

“எனக்குச் சில பேரைக் கண்டால் கொன்று தீர்க்க வேண்டும் போலிருக்கிறது.”

“ஓஹோ! அப்படியா? எதற்காக?” என்றான் ஹஹோல்.

“அவர்களை ஒழித்துக் கட்டத்தான்.”

நெட்டையாகவும் மெலிதாகவும் இருந்த ஹஹோல் அந்த அறையின் மத்தியில் வந்து நின்றுகொண்டு, பாதங்களை உயர்த்தித் தன் உடம்பை ஆட்டிக்கொண்டான்; நிகலாயைப் பார்த்தான். நிகலாயோ நாற்காலியில் அசையாமல் சிலைபோல் அமர்ந்து புகை மண்டலத்தைப் பரப்பிக் கொண்டிருந்தான். அவனது முகம் திட்டுத் திட்டாகச் சிவந்து கனன்றது.

“நான் அந்தப் பயல்-இஸாய் கர்போவின் மண்டையை உடைக்கிறேனா இல்லையா, பார்!”

“ஏன்?”

“அவன் ஒரு ஒற்றன்; கோள் சொல்லி! அவன்தான் என் அப்பனைக் கெடுத்தான். அவன் என் தந்தையைத் தன் கையாளாக மாற்றிவிட்டான்” என்று அமுங்கிப்போன குரோத பாவத்தோடு அந்திரேயைப் பார்த்துக்கொண்டே பேசினான்.

“அப்படியா! ஒரு முட்டாள்தான் உன்னை இப்படி எதிர்ப்பான்” என்றான் ஹஹோல்.

“முட்டாளும் புத்திசாலியும் ஒரே இனம்தான்” என்று உறுதியோடு சொன்னான் நிகலாய். “உன்னையும் பாவெலையும்தான் பாரேன். நீங்கள் இரண்டு பேரும் புத்திசாலிகள் தான். இருந்தாலும் நீங்கள் பியோதர் மாசினையும், சமோய்லவையும் பார்க்கிற மாதிரியா என்னைப் பார்க்கிறீர்கள்? இல்லை, நீங்கள் ஒருவரையொருவர் மதித்துக் கொள்வது போல் என்னை மதிக்கிறீர்களா? பொய் சொல்லாமல் சொல்லு. எப்படியானாலும் நான் உன்னை நம்பமாட்டேன். நீங்கள் எல்லோரும் ஒன்று சேர்ந்துகொண்டு என்னை ஒதுக்கி வைக்கிறீர்கள்; தனிமைப் படுத்துகிறீர்கள்.”

“நிகலாய்! உன் மனம் புண்பட்டிருக்கிறது” என்று அன்பும் இதமும் ததும்பச் சொல்லிக்கொண்டே அவனருகே சென்று உட்கார்ந்தான் ஹஹோல்.

(தொடர்ந்து வரும்.)

# சீதையும் சீர்வரிசையும்

## சேத்தூர் எஸ்.பகீரதி

ஹோலினுள் அம்மா பிள்ளையாய் பவ்யமாக அமர்ந்தவாறே விழிகளால் தன்னைத் தேடும் ப்ரவீணை ஜன்னலூடாகப் பார்த்து சிரித்துக் கொண்டாள் ஸ்ருதி.

தரகரைப் பார்த்து ப்ரவீணின் தாயார் ஏதோ சொல்ல தரகர் ஸ்ருதியின் அப்பாவிடம் “பெண்ணை கூப்பிடுங்களேன்” என்றார்.”

“மரகதம் மகளை கூட்டிக் கொண்டு வாயேன்” குரல் கொடுத்ததும் அறையினுள் இருந்து தாயுடன் வெளிப்பட்ட ஸ்ருதி சின்னப் பதட்டத்துடன் தேனீர்க் கோப்பைகளை நீட்டினாள். புன்னகை என்பதே காண முடியாத முகத்துடன் மிடுக்கான கம்பீரப் பார்வையோடு தன்னையே நோட்டமிடும் ப்ரவீணின் தாயை பார்த்ததும் ஸ்ருதிக்கு மனசுக்குள் ஏதோ செய்தது. தன்னுடன் கலகலவென்று சிரிப்புடன் பேசும் ப்ரவீணா இப்படி “உம்” என்று இருக்கிறார். சரியான அம்மா பிள்ளை என நினைத்துக் கொண்டாள்.

“ஸ்ருதி உள்ளே போம்மா” என்றார் தரகர். ஸ்ருதி அறையினுள் நுழைந்ததுமே இரண்டு தங்கைகளும் அவளைச் சீண்ட அவள் முறைத்துக் கொண்டாள்.

திருமணமான அவளது மூத்த அக்கா சின்னச் சிரிப்புடன் ஸ்ருதியை பார்த்துக் கொண்டாள். “பெண்ணைப் பிடிச்சிருக்கு...” என்ற சம்பிரதாயப் பேச்சுடன் சீர்வரிசை பற்றிய பேச்சும் ஆரம்பமானது.

ப்ரவீணின் அம்மா பேசத் தொடங்கினாள்: “எங்களுக்கு இருக்கிறது ஒரே பையன். ப்ரவீணுக்கு எத்தனையோ இடங்களில இருந்து நிறைய சொத்துக்களோட பெண்ணைத் தருவதாகச் சொல்லி திருமணம் பேசுறாங்க. ஆனா ப்ரவீண் உங்க பொண்ணு ஸ்ருதியை விரும்பறதாச் சொல்றான். என்னோட விருப்பமே தன்னுடைய விருப்பம் என்றும் ப்ரவீண் சொல்லிவிட்டான்.”

‘திடுக்’ என நிமிர்ந்த ஸ்ருதி ப்ரவீணின் தாயாரின் பேச்சை தொடர்ந்து கேட்டவள் அதிர்ந்தே போனாள்.

“அதிகமா தேவையில்லை. ஏதோ என் மகன் ப்ரவீண் ஆசைப்படுறான். அதனால பொண்ணுக்கு வீட்டோட காணி தோப்பு கொடுக்கிறதோட பதினைஞ்சு பவுணில நகையும் போட்டுடுங்க. கல்யாணச் செலவும் உங்களுடையதுதான். என்ன சொல்றீங்க?” என ஸ்ருதியின் அப்பாவையும் அம்மாவையும் ப்ரவீணின் தாய் மாறி மாறிப் பார்த்தாள்.

ஐந்து பெண்ணைப் பெற்ற அவமானத்துடன் ஸ்ருதியின் அப்பா பேசத் தொடங்கினார். “அம்மா! எவ்வளவோ கஷ்டப்பட்டு என்னோட மூத்த பொண்ணுக்கு வாழ்க்கை அமைச்சுக் கொடுத்து விட்டேன். ஸ்ருதியோட சேர்த்து இன்னும் நாலு பொண்ணு இருக்கம்மா. ஏதோ என்னால முடிஞ்சதை செய்யுறேம்மா” என்று பணிவுடன் தனது தந்தையார் இரந்து கேட்பதைப் போல் நின்றிருப்பதைக் கண்ட ஸ்ருதி கலங்கிப்



போனாள்.

ப்ரவீண் எதுவும் பேசாது மௌனமாகவே இருப்பதைக் கண்ட ஸ்ருதிக்கு கோபம் கோபமாக வந்தது.

“அதெல்லாம் முடியாது. கல்யாணத்துக்கு முதலிலேயே நான் சொன்னதை எல்லாம் நீங்க செய்திடணும். உங்க முடிவு எதுவோ அதை தரகர்கிட்ட நாளைக்கு சொல்லி அனுப்புங்க. ஒரு வாரத்துக்குள்ள சொல்லிடுங்க...” கூறிவிட்டு ப்ரவீணின் அம்மா கதிரையை விட்டு எழுந்தார்.

“அம்மா கொஞ்சம் நில்லுங்க” என்ற குரல் கேட்டு அனைவரும் திரும்பினர். எதுவுமே பேசாது சிலை மாதிரி நிற்கும் ப்ரவீணை ஒரு வினாடி ஏளனமாகப் பார்த்து விட்டு ப்ரவீணின் தாயாரிடம்,

“அம்மா நீங்க தந்த ஒரு வார டைம் தேவையில்லை. நீங்க சொல்லுகிற சீர்வரிசை செய்ய எங்களால முடியாது. அதனால நீங்க உங்க வேலைகளைக் கவனிங்க” என்றவாறே, திகைத்து நின்ற தாயையும் தந்தையையும் பார்த்து தலையைக் குனிந்தவாறே ஸ்ருதி அறைக்குள் நுழைய ப்ரவீணின், அம்மா ஒரு பார்வை பார்த்து விட்டு ‘விருட்’ என வெளியேறினாள். ப்ரவீணும் அவள் பின்னே மந்திரிக்கப்பட்ட ஒரு பொம்மை போல் வெளியே சென்றான்.

‘சே...என்ன மனிதர் இந்த ப்ரவீண் ‘நீ கிடைக்கலைன்னா சத்தியமாக என்னால வாழமுடியும்னு நான் நினைக்கல ஸ்ருதி. நான் எவ்வளவு ஆழமாக உன்னை நேசிக்கிறேன் தெரியுமா? நீ எனக்குக் கிடைச்சா பெரிய அவார்ட் கிடைச்சதை விட பெருமைப்படுவேன்' என தன் பின்னே அலைந்த ப்ரவீணா இது’ என ஸ்ருதி தவித்தாள். கல்லூரி நாட்களிலே தன்னை ஸ்ருதிக்கு அறிமுகப்படுத்தி பல தடவைகளில் தனது நேசத்தை வெளிப்படுத்தியவன்தான் ப்ரவீண். கல்லூரி நாட்களில் படிப்பைத் தவிர எதையும் நினைக்காத ஸ்ருதி கல்லூரி நாட்களின் பின் மெல்ல மெல்ல ப்ரவீணை நேசிக்கத் தொடங்கியிருந்தாள்.

ப்ரவீணுக்கு அலுவலகம் ஒன்றில் உதவி மனேஜராக வேலை கிடைத்தது. அருகிலுள்ள மற்றுமோர் அலுவலகத்தில் ஸ்ருதிக்கும் வேலை கிடைத்தது. இருவரும் முதலில் தற்செயலாகவும் பின்னர் திட்டமிட்டும் சந்தித்தனர். நீண்ட பல சந்திப்புக்களில் ப்ரவீணின் நேசத்தை ஸ்ருதி ஏற்றுக் கொண்டு அவனை நேசிக்கத் தொடங்கினாள்.

ஒரு மாலை நேரம் எல்லோரும் ஆறுதலாக உள்ள போது ஸ்ருதியின் அப்பா ஸ்ருதியின் திருமணம் பற்றிப் பேச, தனது எண்ணத்தை தயங்கியவாறே தாயின் மூலம் தந்தையிடம் சொன்னாள். அவர் மௌனமானார்.

ப்ரவீணிடம் இது பற்றி ஸ்ருதி சொன்ன போது தனது தாயாருடன் ப்ரவீண் முறைப்படி வருவதாகச் சொன்னான். ப்ரவீண் சொன்ன படி வந்து போனான். ஆனால் நடந்தது.... ‘அம்மா சொல் கேட்கத்தான் வேண்டும். அதற்காக அம்மாவின் அதிகாரமான பேச்சையும் ப்ரவீண் கேட்க வேண்டுமா? ஒரு வார்த்தையேனும் பேசாமல் போய் விட்டாரே’ என ஸ்ருதி தனக்குள் வெதும்பினாள்.

அலுவலகம் செல்லும் ஸ்ருதி ப்ரவீணின் பார்வையில் படுவதைத் தவிர்த்தாள். எதேச்சையாக அவனைக் கண்டு கொண்டாலும் காணாதது போல் யாருடனாவது கதைத்துக் கொண்டு போய் விடுவாள். ஸ்ருதிக்கு இப்போதெல்லாம் ப்ரவீணைப் பார்க்கவே பிடிக்கவில்லை.

கடற்கரை மணலில் கால் புதைய நடந்து கொண்டு புதிய காற்றை அனுபவித்த சுகத்தோடு ஜன சந்தடியற்ற அந்தப் பாறையில் அமர்ந்திருந்தவாறே ஸ்ருதி தூரத்தே கடலில் மிதக்கும் படகுகளை வெறித்துக் கொண்டிருந்தவள்,

“ஸ்ருதி” குரல் கேட்டு படபடப்புடன் திரும்பினாள்.

ப்ரவீண் அவள் எதிரிலேயே அமர்ந்து கொண்டான்.

“எனக்குத் தெரியும் ஸ்ருதி என் மேல உனக்கு நிறையக் கோபம் இருக்கும். ஆனா நான் என்ன செய்ய முடியும்? அம்மா சொல்கிறபடிதானே நான் நடக்கணும்.” என்ற ப்ரவீணை ஒரு கணம் பார்த்து விட்டு மீண்டும் எங்கோ வெறித்தாள்.

“என்னைப் பெத்து வளர்த்து படிப்பிக்க வைத்து சமூகத்தில ஒரு அந்தஸ்தை கொடுத்தது என்னுடைய அம்மாதானே! அதனால.....” ப்ரவீண் முடிக்கும் முன்பே;

“ப்ரவீண்! உங்க அம்மா உங்களை மட்டும்தான் பெத்து வளர்த்தாங்க. ஆனா எங்கம்மாவுக்கும் அப்பாவுக்கும் என்னையும் சேர்த்து ஐந்து பிள்ளைகள். இதுவரைக்கும் ஒரு கஷ்டமும் எங்களுக்குத் தெரியாமத்தான் எங்க அப்பாவும் அம்மாவும் எங்களை வளர்த்து ஆளாக்கினாங்க. அது சரி உங்களோட அம்மாவிடம் கேட்டு விட்டு என்னை நீங்க ‘லவ்’ பண்ணியிருக்கலாமே...?” என்ற ஸ்ருதியை ப்ரவீண் சின்னக் கோபத்துடன் பார்த்தான்.

ஸ்ருதி தொடர்ந்தாள். “என்னைப் பொறுத்தவரைக்கும் சீதனம் கொடுக்கிறதுல வாங்குறதில கொஞ்சம் கூட இஷ்டமில்லை. உங்களை எப்படி படிப்பிச்சு வேலை எடுத்துக் கொடுத்தாங்களோ அதே மாதிரித்தான் என்னையும் படிப்பிச்சு எங்க அப்பா வேலை எடுத்துத் தந்திருக்கிறார். ஸோ...நீங்களும் நானும் சமம். பிறகு ஏன் நீங்க சீதனம் கேட்கிறீங்க? உங்கம்மாதான் கேட்கிறாங்கன்னா..உங்களோட புத்தி எங்கே போய்விட்டது? சொல்லப் போனா பெண்களுத்தான் சீதனமா-இல்லாவிட்டாலும் கூலிப்பணமாவது கொடுக்கணும் ஏன் தெரியுமா? கல்யாணமானதும் உங்களோட உடுப்புக்களைத் துவைக்கணும்; சமைக்கணும் குழந்தைகளைக் கவனிக்கணும் எக்ஸட்ரா, எக்ஸட்ரா...” ஸ்ருதி தொடர்ந்து அழுத்தமாய் பேச ப்ரவீண்,

“ஸ்ருதி” எனக் கத்தினான்.

“ப்ரவீண் இப்படி கத்தி ஆர்ப்பாட்டம் செய்யுறது எனக்குப் பிடிக்காது. ஒரு வழி சொல்லுறன் கேளுங்க. உங்கம்மா உங்களுக்குச் சொன்ன விலைப்படி எங்கப்பாகிட்ட சொல்லி உங்களை வாங்கிடுறேன்.பிறகு நான் சொல்கிறபடியெல்லாம் நீங்க கேட்பீங்களா?” என்று ஸ்ருதி ப்ரவீணிடம் கேட்க, “என்னடீ சொன்னே?” என்றவாறே ப்ரவீண் கையை ஓங்க, “சும்மா மிரட்டாதீங்க! நீங்க செய்யப்போறதை என்னாலையும் செய்ய முடியும். இது உங்களைப் போல சுய புத்தியில்லாத-மனத்தைரியமில்லாத ஆண்களுக்குச் சொல்றது! காதலித்த பெண்ணிடமே பெண்களோட சீதனத்தை எதிர்பார்க்கிறதைவிட பிச்சை எடுக்கலாம்.”

ஸ்ருதி திருப்தியாக நடக்க, ப்ரவீண் திகைத்து நின்றான்.

www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்

# என்னவளே... அடி என்னவளே.

நாங்கல்ல
அமானுல்லாஹ்

அந்த அழகு நிலா இந்தப் பூமியின் பாதையிலே அசைந்து போய்க் கொண்டிருந் தாள். பக்கத்தில் வேலியோரத்துப் பூக்கள் வெட்கத்தால் மொட்டு வெடித்துப் பூப் பெய்திக் கொண்டிருந்தன. முன்சிரா நடந்து போகும் பாதச்சுவடுகளை பின்பற்றி பௌசி அடி தொடர்ந்தான். அவனுக்கும் அந்த மைனாக்குஞ்சுக்கும் கொஞ்சம் இடைவெளி....

-மீண்டும் தொடர்கிறான்.

முன்சிரா திரும்பிப் பார்த்து பௌசியை முறைக்கிறாள். அந்த முறைப்பைக் காணும்-கண்டு இரசிக்கும் பாக்கியமாவது கிடைத்ததே என மனசுக்குள் திருப்திப்பட்டுக் கொண்டான்.

'என்னவளே அடி என்னவளே எந்தன் இதயத்தைத் தொலைத்து விட்டேன்' முணு முணுத்தான். அதோ அவனது இதயம் முன்சிராவின் காலடியில் தவம் செய்து கொண்டிருந்தது.

இது இன்று நேற்றல்ல. அந்தக்கன்னி நிலவை கண்டபின் சத்தியமாய் இவன் காதல் கலவையால் சுத்திகரிக்கப்பட்டான். அன்றிலிருந்து முன்சிராவை காற்றைப் போல தொடர்ந்தான்.

காதல்! முன்சிராவின் மீது நெஞ்சு கொள்ளாக் காதல்! நேற்று அவன் முன்சிராவுக்கு கொடுத்தனுப்பிய இரண்டாவது கடிதத்துக்கு இன்றாவது பதில் கிடையாதா? என ஏங்கினான்.

ஆனால் இத்தனைக்கும் அந்த நிலவு மௌனமாய் ஒன்றும் சொல்லாது போய்க் கொண்டிருக்கிறதே 'என் நெஞ்சத்துக்




கூட்டுக்குள் நேசக் குஞ்சுகளைப் பொரித்த காதல் குருவியே! ப்ளீஸ் எங்கே உன் சம்மதம்?' நெஞ்சு தாபத்தால் கிடந்து தவித்தது.

முன்சிரா அவனைத் திரும்பிப்பார்த் தாள். அந்தப் பார்வையில் வெறுப்பின் சாயல்கள், தன்னை நிராகரித்து விடும் நிழற் கோலங்கள் நிறைந்திருப்பதனைக் கண்டான்.

அவள் நின்று விட்டாள்.

அவனும் தொடர்ந்த இடத்திலேயே 'திக்' கோடு' நின்றான். அந்த நிலவு இவனை நோக்கி நகர்ந்து வந்தது.

நெருங்கி விட்டாள்.

"ஏய் மிஸ்டர் பௌசி! ஏனிப்படி பின்னால சுத்தறீங்க? ஒங்களுக்கெல்லாம் வெட்கமாயில்ல? அன்னிக்கே செருப்பத்தூக்கி எண்ட வெறுப்ப காட்டினேனே! அப்புறம் கூட உங்களுக்கு வெவஸ்த வரல்லையா? ஏன் மீண்டும் மீண்டும் என்னையத் தொந்தரவு பண்ணறீங்க....? ச்சீ... வெட்கம் கெட்ட ஜென்மங்கள்!" நிலவு மறைந்தது.

"மிஸ்.... முன்சிரா ஒங்கள நான் மனப்பூர்வமா லவ் பண்ணறேன். ப்ளீஸ் என்னைய மறுத்திடாதீங்க! அத என்னால தாங்க முடியாது. எண்ட வாழ்க்கைத் துணைன்னா அது நீங்களாத்தானிருக்கும். ப்ளீஸ் எண்ட ஆரம்பத்துக்கு நல்லதொரு முடிவத்தாங்க!" காதல் நெஞ்சம் அவனுக்கு.

"மிஸ்டர்.... ஒங்களத்தான் நான் விரும்பலியே!"

"நான் விரும்புறேனே ஹண்ட்ரட் பேர்சன்ட்!"

"இனிமே இப்படி வார்த்தைகளை யூஸ் பண்ணீங்க, நான் பெண்ணா இருக்க மாட்டேன். இன்னும் சொல்றேன்! நான் ஒங்கள விரும்பல! விரும்பல! விரும்பல!! போதுமா? என்னைய இல்ல எண்ட தூசக் கூட ஒங்களால தொட முடியாது. இதற் கப்புறமும் எம்பின்னால அலஞ்சீங்க, அப் புறம் நடக்கறதே வேற! ம்..... இவ்வளவு ஒங்களோடு பேசினதே வேஸ்ட்!" வெடுக் கென திமிருடன் நடந்தாள். கோபம் வர பௌசி "முன்சிரா நான் ஒங்கள மிச்சம் விரும்பி னேன்; ஒங்களோட இணைய ஆசைப் பட்டேன். நிச்சயம் அது நடக்கத்தான் போகுது!" அவன் சொன்னது அவளது காதில் மங்கலாய் ஒலித்தது.

நாட்கள் கொஞ்சம் நகர-

அன்று 'வறக்காப்பொளை'யிலிருந்து வகுப்பு முடிந்து பஸ்ஸில் பிரயாணம் செய்துகொண்டிருந்தான் பௌசி. அவனது நெஞ்சில் அவள் நிறைந்திருந்தாள். பஸ், பஸ் ஸ்டாண்டில் நிற்க கொஞ்சம் பேர் ஏறினர். பௌசி ஏறியவர்களைப் பார்க்க, அங்கே...

அவள்.. அவள்.....!

சந்தோஷக் குமிழிகள் சங்கமித்தன.

பஸ் நகர அவள் சன நெருக்கடியில் இவனது சீட்டுக்கு கொஞ்சம் அருகாமையில் நின்று கொண்டிருந்தாள். ஆனால் பௌசியை அவள் இன்னும் பார்க்கவில்லை. அப்போது திடீரென பஸ் 'பிரேக்' அடிக்க பயணிகள் தங்களையறியாமலே மற்றவர் மேல் முட்டி மோதினர்.

நிலை கொள்ளாது தவித்த முன்சிரா இந்த எதிர்பாராத சம்பவத்தினால் கைப் பிடியை நழுவ விட்டு பக்கத்தில் நகர்ந்தாள்... ந..க...ர்....ந்து அப்படியே பௌசியின் மடியில் போய் தொப்பென விழுந்தாள். திடீரெனத் திரும்பிய முன்சிரா அவனின் மடியில் இருந்து எழும்ப முடியாத நிலையில் பௌசியைத் திரும்பிப்பார்த்தாள்.

தலைக்குள் 'தௌஸண்ட் வோல்ட்' மின்சாரம்.

பௌசி இதை எதிர்பார்க்கவில்லை... என்றாலும் அவளைப் பார்த்து புன்னகைத் தான்.

"முன்சிரா! நான் உங்களுக்கு-நீங்க எனக்கு! நீங்க அன்று சொன்னீங்க எண்ட தூசு கூட நீங்க மிதிக்கமாட்டீங்கன்னு. ஆனா இன்று எண்ட மடியிலேயே வந்து தஞ்சமாயிட்டீங்க. இதற்கு என்ன அர்த்தம்? யெஸ் இறைவன் ஒங்கள எப்பவும் எனக்கே எழுதிட்டான் தேங்ஸ் கோட்" அவனது குரலில் கனிவு இருந்தது.

இப்போது அவள் பௌஸியின் மடியிலிருந்து மெல்ல வெட்கத்துடன் எழுந் தாள். அவனைத்திரும்பிப்பார்த்தாள். அந்தப் பார்வையில் காதல் சம்மதம் கலந்திருந்தது.

# முற்றுப் புள்ளி

கன்ஸியா

நீண்ட நாட்களாய் எதுவும் எழுதவில்லை, கண் முன்னே நிகழ்வுகள் குவிந்து கிடந்தாலும், உள்ளுக்குள் உணர்வுகள் ஊர்ந்து கிளர்ந்து கூச்சமூட்டினாலும், எதனையும் பதிய விடாமல் எதுவாகினும் ஓர் அசுரத்தடை வந்து கொண்டுதான் இருக்கிறது. நேற்று கண்டிக்குப் போயிருந்தேன். "ஒரு நல்ல கதபடிச்சி ரொம்ப நாளாச்சி எழுதுங்க ளேன்". என்றாள் ரசிகை ஒருத்தி- மண்டி கிடக்கும் கருக்கள் மூலம் உற்பத்தி செய்ய முடியாது படைப்பை, என்னில் அன்றில் சமூகத்தில் விழும் கீறல்கள் என் பேனாவின் சீறல்களாய் இருக்க வேண்டும்.

அச்சம்பவம் மனதை அரித்துக் கொண் டிருந்தது. பொன்னி வண்டு தின்னும் வாகைமர இலை போல், நிஷ்டூரமாய் ஆத்மாவுக்குள் அது மெல்ல மெல்ல கரைந்து போயிற்று. மிச்சமிருந்தவற்றையாவது, எழுதவேண்டும். வேதனை வியாபகம் பெற்றது.

என் நீண்ட காலத் தோழன், என்னுடனே ஒட்டிக்கொண்டு, என் மௌனத்தை மொழி பெயர்த்து, உள்ளுக்குள் ஊறும் ஊற்றினை உறிஞ்சி வெளியில் கொட்டும் யு.கே.பாக்கர் பேனாவை திறந்து எழுத ஆரம்பித்தேன். விறுவிறுவென்று முனையில் விழுந்தது சொற்கள். வேகமாய், காய வைக்கும் உஷ்ணக் காற்றாய் வார்த்தைகள் ஈரம் வற்றிப் போயிற்று.

"மகன், இஞ்சவாங்க" உச்சமாய் எழுதிக் கொண்டிருந்தநான் நிறுத்திவிட்டு "என்னம்மா" என்றேன், எழும்ப மனமின்றி: "அடுத்த வீட்டு மாமாவுக்கு சொகமில்லயாம், ஒருத்தரும் இல்லப் போல, ஒரு ஆட்டோ பிடிச்சி ஆஸ்பத்திரிக்கு கூட்டிப்போங்க." உம்மாவின் பேச்சை தட்ட முடியாமல், மாமாவை ஆட்டோவில் ஏற்றி மருந்தெடுத்து வீட்டில்கொண்டு போய் விட்டு வரும் போதும் 'மூட்' கலையாமல் அந்த கதையை எழுதி முடிக்க வேண்டும் என்ற வேகம் இருந்தது.

இரண்டு பக்கம் எழுதி முடித்து மூன்றாம் பக்கம் தொடரும் போதே, பெல்சத்தம் காதுக்குள் கர்ண கடூரமாய் எரிந்தது. "உம்மா யாரெண்டு பாருங்க" எழுதியதைத் தொடர்ந்தவாறே கூவினேன். "நான் குளிக்கன் மகன்." மனமின்றி எழுந்து கதவைத் திறந்த போது "குட் ஈவினிங் ஸேர்" காதுக்குள் தேன் மழை பொழிய இரண்டு மாம்பழக்குருவிகள் நின்றிருந்தன. பொட்டு வைத்த முகம். "குட் ஈவினிங். வெல்கம். உட்காருங்கள்" என்றேன். எதிரே கிடந்த கதிரையில் அமர்ந்து அளவெடுத்ததில் கண் வலித்தது.

"நீங்க.." நான் முடிப்பதற்குள் துடுக்காய் பேசினாள் ஒருத்தி: "நான் சுகன்யா. இவ



கலா ரெண்டு பேரும் உங்கட தீவிர விசிறிகள். முந்தநாள் 'பப்ளிக்மீட்டிங்'கல பேசினிங்க. 'ஓட்டோ கிராப்'புல கையெழுத்து வாங்கணும்னு வந்தம். போயிட்டிங்க-அதான் இப்ப..." அவள் இழுத்தவாறே அடுத்தவளை நோக்க "உங்களை தொல்லைப் படுத்து றோம்னு நெனக்காம ஏதாவது எழுதித் தாங்க." சிரித்துக் கொண்டே ஓட்டோ கிராப்பை நீட்டினார்கள்.

குளித்து விட்டு வந்த உம்மாவிடம் ரீக்கு ஓடர் பண்ணும் போதே உம்மாவின் பார்வை திருப்தியாய் விழவில்லை. "இவங்க என்னோட கதபடிச்சி, பாராட்ட வந்தவங் களாம், அதுவந்து இரசிகைகள்," எப்படி, உம்மாவுக்கு புரிய வைப்பது என்றே புரியவில்லை. இந்த நேரம் பார்த்து தங்கச்சி கூட, மாலை வகுப்புக்கு போயிட்டாளே, ஆண்டவா. உம்மாவின் பார்வையை சகிக்க முடியல்ல. "ஒண்ணுமில்ல, பார்க்கிற வங்க தப்பா நெனப்பாங்க. எனக்குத் தெரியும் தானே ஒங்கள." அப்பாடா ஐஸ் மழை மனசுக்குள் ஜலஜலவென்று குளிர்ந்தது. "வீடு தேடி வர்றவங்கள உபசரிக்காம என்னம்மா பண்ண? அவனவன் எப்பிடி எண்டாலும் பேசட்டும்."

"இப்ப நீங்க ஏன் எழுதுறதில்ல?" கலாதான் கேட்டாள். "எழுதுறன். ஒங்களப் போல இரசிகர்களுக்கு கடிதம்" 'களுக்' கென்று சிரிப்பு. பாத்திரத்தில் நிரப்பி எடுக்கணும் போல் சங்கீதமாய் இருந்தது.

"அப்ப நாங்க வாறம்!" "ரொம்ப தேங்க்ஸ்." வாசல்வரை சென்று வழி அனுப்பும் போதே, "நேரம் கெடச்சா அடிக்கடி வாங்க," என் றேன். இன்னும் ஒரு ஐந்து பக்கம் எழுதி விட்டால் போதும். மீண்டும் இடைஞ்சல் இல்லாமல் இருக்கவேண்டுமே, மேசையில் குந்தி பேனாவைத் திறக்க மனம் தளர்ந்து போயிருந்தது. எழுதமுடியாத சோர்வு. கொஞ்ச நேரம் வெளியே சென்றால் தேவலை.

ஆலமலர சந்திக்கு வந்து, 'பிறேக்' போட்டேன். நண்பர்கள் அரட்டை ராஜ் ஜியத்தில் லயித்துக் கிடந்தார்கள். திரும்பி வரும்போது எட்டையும் தாண்டி விட்டது. சாப்பிடாமலே உம்மா பாயில் குந்திக் கொண்டிருந்தா. தங்கையின் அறையில் 'லைட்' எரிந்தது. படிக்கிறாள். பரீட்சை நெருங்கிவிட்டது. பேச்சுக் கொடுக்கவில்லை. கொடுத்தால் போச்சு. அறுவை அறுத்தே என்மானத்தை வாங்குவாள். போதாக் குறைக்கு, இன்றுமாலை வந்தவர்கள் பற்றிய தகவலையும் உம்மா சொல்லியிருப்பா, என்னைச்சீண்ட இது ஒன்றே போதுமே. வாப்பா இன்னும் வரவில்லை. சாப்பிட்டு விட்டு, மேசைக்கு வந்து 'டெஸ்க்' லாம்பை தட்டி விட்டு விட்ட இடத்திலிருந்து தொடர ஆரம்பித்தேன்.

கதை விறுவிறுப்பாய் நகரும் தருணம். வாசற்படியில் சத்தம் கேட்டது. "ராத்தோய் தம்பி வந்துட்டாரா?" உம்மா படுக்கை யிலிருந்து எழும்பாமலே "ஓ இப்பதான் வந்த. வாபுள்ள." றனீஸா ராத்தாதான். நேராக என் அறைக்குள் வந்தாள். வலிய வந்த சிரிப்பு "இருங்க ராத்தா" என்றேன்.

"பின்நேரமும் வந்தன்-தம்பி இல்ல, இந்த 'போம'க் கொஞ்சம் நிரப்பணும். சன சக்தி போம். காலயில நேரத்தோட குடுக்கணும்." கையில் ஒரு தொகை விண்ணப் பங்கள். வாங்கி நிதானமாய் படித்து, அத் தனை தகவல்களையும் நிரப்பி, கையில் கொடுத்து விட்டு நிமிர்ந்தபோது சுவரில் இருந்த'சிற்றிஸன்' பத்தையும் தாண்டி ஓடிக் கொண்டிருந்தது. எழுதி வைத்த கதை பக்கங்கள் காற்றிக் கலைந்து வெளிவிறாந்தா விலும் விசிறிக் கிடந்தது. எழுந்து சென்று, பொறுக்கி எடுத்து நிமிர்ந்த போது, சாப்பிட்டு முடிந்து உம்மா கை துடைத்துக் கொண்டிருந் தாள்.

காலையில் முதல் வேலையாய் அந்த கதையை முடித்து அவசரமாக அனுப்ப வேண்டும். சஞ்சிகை ஒன்று கடிதம் போட்டி ருந்தது, சிறுகதை அனுப்பும்படி. ரீயை உறிஞ்சிக் கொண்டே எழுத உட்கார்ந்தேன்.

பள்ளிவாசல் ஒலி பெருக்கியில் ஏதோ ஓர் அறிவித்தல், கவனம் செல்லவில்லை. யாராவது இறந்துவிட்டார்கள் போல. முன்னர் எழுதிய பக்கமொன்றை மீளவாசித்து பேனாவை குத்தி எழுதத் தொடங்கினேன். முடியும் தருணம். இன்னும் ஒரு பக்கம் எழுதினால் போதுமென்றிருந்தது. உம்மா பதைபதைத்து ஓடி வந்தா.

"மகன் பன்னெண்டு வயசுக்கு மேல உள்ளவங்கள, ஸ்கூல் கிரவுண்டுக்கு வரட் டாம். ஆமி அறிவித்தல் எண்டு பள்ளியில சொல்றாங்க." வாலிபர்களும் வயோதிபர் களுமாய் திமுதிமுவென்று ஆண்கள் கூட்டம் நடந்து சென்றனர். பேனாவை மூடி லாச்சியில் போட்டேன். ஐடின்டி எடுத்து, செருப்பை மாட்டி வீதியைக் கடக்கையில் என்னைக்கடந்து சீறிச் சென்றது இந்திய ட்ரக் வண்டி.

சீக்கியன் ஒருவன் கையை அசைத்தான். முற்றுப்புள்ளி இடப்படாமல் கிடப்பில் கிடக் கும் என் கதையைப் போல் அவன் தாடியை நான் வெறித்துப் பார்த்தேன். என்னைக் கடந்து இன்னும் ஜவான்கள் நடந்து சென்றனர்.

# காதலெனும் மேடையிலே!

முண்டியடித்துக் கொண்டு பஸ்ஸினுள் ஏறிய போது கால் சுளுக்கிக் கொண்டது ரகுவிற்கு. எப்படியோ பாடுபட்டு 'சீட்' பிடித்து உட்கார்ந்து பயணித்தான். சனம் நிரம்பி வழிந்தது. வியர்வையைத் துடைத்துக் கொண்டான். பக்கத்தில் நின்ற சாறமணிந்த, தாடிவைத்த நபரிடமிருந்து சாராய நெடி மூக்கைத் துளைத்தது. குமட்டியது.

இந்தப் பட்டப்பகலில் குடித்திருக் கிறானே என திட்டியபடி அமர்ந்திருந்தான் ரகு. தாடியின் கையில் ஒரு பை. அதில் இருப்பதும் போத்தல் தான் என உணர்ந் தான் ரகு. தாடி தடுமாறினான். போத்தல் பையை வைத்துக்கொண்டு நிற்க சிரமப் பட்டான். ரகு கவனித்தும் கவனியாதது போல் எரிச்சலாயிருந்தான்.

சாரதி திடீர் 'பிரேக்' போட, தாடியின் கையிலிருந்த போத்தல் பை யன்னல் சட்டத்தில் மோதி 'ணிங்' என்றது. மேலெல் லாம் தண்ணீர் கொட்டுவதையுணர்ந்து ரகு பார்க்கும் போது மூக்கினுள் இரண்டு துளி விழுந்தது.

தாடி அசடு வழிந்தான். குளறினான். ரகுவிற்கு செய்வது என்னவென்று புரிய வில்லை. உடலெங்கும் வழிந்தோடிய நீரின் மணம் அது 'தண்ணி' என புரியவைத்தது. பொறுத்துக் கொண்டான். சண்டை போடுவ தால் பயனில்லை.

பஸ்ஸை விட்டு இறங்கினான் ரகு. அவனது கோலத்தைப் பார்க்க அவனுக்கே சிரிப்பு வந்தது. சுளுக்கிய கால், சாராய நெடி வீசும் தேகம், கலைந்த தலை, சுருங்கிய ஷேர்ட் ஹா... ஒரு பஸ் பிரயாணம் தந்த அடையாளச் சின்னங்கள் இவை! தன்னையறியாமலே வாய் விட்டுச் சிரித்தான்.

"ரகு"- பழகிய குரல் மிக அண்மையில் ஒலிக்க திடுக்கிட்டு சிரிப்பை நிறுத்தினான்.



ஷர்மிளா இஸ்மாயில்

சஹானா! அவனை உறுத்துப் பார்த்தவாறு இருந்தாள். கண்களில் கேள்விகள் கொக்கிக ளாய்த் தொங்கின. "இதென்ன கோலம்?" வாய்விட்டுக் கேட்டாள். "ம்...." மூக்கை இழுத்து மணம் பிடித்தாள். "ஓ..... சாராய....நெ...டி.....கடவுளே.....ரகு, என்ன இது?" அதிர்ந்தாள். தானாக வேறு சிரிக் கிறான். எத்தனை நாள் பழக்கமோ? அதுவும் எனக்குத் தெரியாமல்! நினைக்கையிலேயே அவள் மனது அதிர்ந்தது. புகை பிடித்தலும், மது குடித்தலும் சஹானாவிற்கு மிகவும் வெறுப்பைத் தரும் இரு நிகழ்வுகள். அவள் மனதைக் கவர, ரகுவிற்கு இப்பழக்கங்கள் இல்லாமல் இருந்ததே முக்கிய காரணம். ஆனால்.....?

சஹானாவின் கண்களில் ரத்தச் சிவப்பு. வார்த்தைகளில் எரிமலையின் சீற்றம்...... ரகு தனக்குள் சிரித்தான். இவளைக் கொஞ்சம் கலங்கவைக்க வேண்டும். திட்டம் போட்டான் நிமிசமாய். "அ.... அது..... வ....வந்து சஹானா டா....டார்லிங்.... தெரியாதா என் ப்ரென்ட்ஸ்......கொ....கொஞ்சம்.....அதிகமில்ல. கொ..... கொஞ்சம் குடிடான்னாங்க...... மறுக்க முடி..யும்....மா அதான்....." தள்ளா டிய படி குளறினான்.

சிலையாய் ஒரு கணம் நின்றவள் புயலாய் போய் விட்டாள். மீண்டும் சிரித்துக் கொண்டான் ரகு. "ஏமாற்றிவிட்டேன்.... நல்ல நடிப்பு தான்."

வீட்டில் அம்மாவும் அதிர்ந்தாள். விளக்கினான். சிரித்தாள். யார் யாரையோ கூப்பிட்டு சுளுக்கிழுக்க வைத்தாள். கால் சரியாயிற்று. மீண்டும் மீண்டும் சஹானாவை ஏமாற்றியது நினைவில் வர தங்கையிடம் சொல்லி சிரித்தான். "பாவம்.... என்னெண் டாலும் அப்படி ஏமாற்றியது சரியில்ல அண்ணா" தங்கை பரிதாபப்பட்டாள். "போடி ஊடலின் சுகம் உனக்குப் புரியாது" சொல்லியவன் மீண்டும் சிரித்தான்.

"தினமுரசை" விரித்து படித்தபடி பஸ் ஸ்டாண்டில் நின்றிருந்தான் ரகு. கண நேரம் பார்வையை நிமிர்த்தினான். தூரத்தில் சஹானா வருவது தெரிந்தது. மீண்டும் பார்வையைத் தாழ்த்திக் கொண்டான். 'சினி விசிட்' டில் பிரியமான சஞ்சய் தத்தின் அழகிய படம். விவரங்கள். வாசித்தான்.

"ரகு" குரலில் இனிமை. சஹானா தான். "ஹாய்..." என்றவன் அவள் பக்கத் தில் நின்ற இளைஞனைப் பார்த்து விசா ரணை அம்புகளை விடுத்தான்... கண்ணால் தான் சஹானா அழகாகச் சிரித்தாள்.

"இவர் தான் நான் 'மெரி' பண்ணப் போற சஞ்சீவ். இவர் ரகு. என்னோட நீண்ட நாள் நண்பர்" அறிமுகப்படுத்தினாள். ரகுவுக்குள் சகலதும் அதிர்ந்தது. நா வரண்டது. கால் துவண்டது. சமாளித்தான். சஞ்சீவ் அழகாக "ஹலோ....மிஸ்டர் ரகு...." என புன்னகைத்தான்.

"சஹா..... எ..என்ன இது? விளையாடுறியா?" ரகு சஞ்சீவை அலட்சியப் படுத்தி சஹானாவை விளித்தான். மீண்டும் அவளது புன்னகை.

"எதுக்காக நான் விளையாடணும். எனக்கொண்ணும் கள், மது குடிக்கிற பழக்கமில்லையே. நான் உளறல்ல குளறல்ல. நல்லாத்தான் சுய நினைவோட பேசறேன்." கடுப்பாய்ச் சொன்னாள்.

ரகு திணறினான், திக்கினான், ரகுவைப் பார்க்க சஞ்சீவுக்கு பரிதாபமாய் இருந்தது போலும். "மிஸ்டர் ரகு.....இவளுக்குப் பைத்தியம். நான் இவளோட பெரியம்மா மகன், அண்ணன் முறை! நீங்க அன்றைக்கு குடிச்சிட்டு ரோட்ல தள்ளாடிப் போறதக் கண்டதா வந்து வீட்டுல என்கிட்ட சொல்லி அழுதாள். அன்றைக்கு உங்களுக்கு பஸ்ல என்ன நடந்தது என எனக்குத் தெரியும். அதே பஸ்ல உங்களுக்குப் பின் 'ஸீட்'ல நான்! எனக்கு உங்கள தெரியும். இவ உங்க போட்டோவை காட்டியிருக்கிறபடியால் உங்க முகம் ஞாபகமிருக்கு. ஆனா, உங்க ளுக்கு என்னைத் தெரிய நியாயமில்ல. நான் நீங்க குடிக்கல... என்கிறதையும் சொன் னேன். உங்க பொய் நடிப்பை புரிஞ்சுக் கிட்டா. பின் உங்களை ஏமாத்துறதுக்கு அவ போட்ட நாடகம் இது. என்னையும் நடிக்க வெச்சுட்டா...எனக்கு நீங்க கஷ்டப் படுவதைப் பார்க்க முடியல.... அதான் சொல்லிட்டேன்....யப்பா..."

நீண்டதாக சொல்லி மூச்சை விட்டு ஆசுவாசப் படுத்திக் கொண்டான்.

சஹானா கைக்குட்டையை நீட்டினாள். ரகுவின் முகத்தில் வடியும் அசடை துடைத்துக் கொள்ள!

# நெஞ்சில் ஒரு முள்



தருவது-ரசிகன்

இடை சுமந்த குடம் தளும்பாமல் அவள் நடந்த தடம் தொடர்ந்தான். அவளை வடம் பிடித்துப்போவதுபோல் இரு வாழைத்தண்டில் உடல் சுமந்த தங்கமகள் முன்னே நடந்து சென்றாள்.

வழியெல்லாம் வண்ணச் சோலை. தரையெல்லாம் உதிர்ந்து கிடந்த மல்லிகை, முல்லை; தங்க மகள் பாதம் வைக்க இயற்கை விரித்த செங்கம்பளப் பாதை.

பின்னால் என்னவோ சத்தம். சங்கு மணிக்கழுத்தசைத்து திருப்பிப் பார்த்தாள்; மாமன் மகன் மாறன் தான் பின் தொடர்ந்தான்.

விருப்பம்தான் அவளுக்கு மாறனின் மேல்!

'பின்தொடர மட்டும்தான் தெரிகிறது. தானே முன்வந்து பேசும் துணிச்சல்மட்டும் இல்லையாக்கும் இவருக்கு',

என்றுதான் அவள் நினைத்ததுண்டு. 'அவராகப் பேசட்டும் என்று இருந்தது போதும். இனி நான் பேசிவிட வேண்டியதுதான்' என்றுதான் இன்று இல்லத்திலிருந்து புறப்படும் போது எண்ணிவந்தாள் வண்ணமயில்.

இப்போது பின்தொடரும் மாறனின் மூச்சுக்காற்று தென்றலில் ஏறிவந்து தன் மேனியில் தீண்டுவதாய் உணர்ந்தாள்.

அதனால் சிலிர்த்தாளே தவிர, இதழ் சிறையுடைத்து பேசும் துணிச்சல்மட்டும் அமாவாசை அன்று காணாமல் போகும் நிலவு போல எங்கோ மறைந்துகொண்டது.

ஆனால், என்னே ஆச்சரியம்! பத்துத் திங்களாய் பாற்குடத்தை சுற்றிவந்த பூனைக்கு இன்று துணிச்சல் வந்து விட்டது.

அருகே வந்து வழியின் குறுக்கே நின்று அவளின் விழிக்குள் குதிக்கப் போவது போல் ஒரு பார்வை.

"ஓடி விடலாமா" என்று துடிக்கும் இதயத்திடம் வெட்கத்தை தூதனுப்பி விசாரித்தாள் வில்விழியாள்.

'வேண்டாம் நில்! பழம் நழுவிப் பாலில் விழ வரும்போது பாற்குடமே ஒதுங்காதே'

சந்தனக் காதலில் சிக்கிய இதயம் சிந்தைக்குச் சொன்னது.

வாழைத்தண்டுகளாய் கால்கள் இருந்தமையாலோ வாழைக்குலைபோல அவள் முகம் தரை நோக்கிச் சரிந்திருந்தது.

வாழைப் பொத்தியின் நிறத்தில் வதனம்; அது வெட்கம் செய்த மாயம்!

"ஓடவா பார்க்கிறாய் அதுதான் இன்று நடக்காது?"

என்றான் குறுக்கே நின்றிருந்த மாறன்.

அவன் நின்ற தோற்றத்தில் திடம் தெரிந்தது. விரிந்த மார்பின் உரம் புரிந்தது. விரிந்த மார்பில் விழிகள் பட்டதில் மேலும் அவளுக்குள் வெட்கம் வளர்ந்தது.

என்றாலும் திக்கித்திணறி செந்தூர இதழில் முதல் கேள்வி பிறந்தது.

"என்...என்ன வே...வேண்டும்?"

"வழிப்பறியா நடக்கிறது இங்கே.!நெஞ்சு துடிப்பதுமேன், கொஞ்சும் இதழ்களில் வார்த்தை தவிப்பதும் ஏன்? வந்தது நான் வழிப்பறி செய்யவல்ல; சொந்தப் பூங்குயிலை வாரியணைக்க!"

"ம்ஹூம்....ஆசைதான்!"

"ஆம்...அதிகம்தான்."

"நான் போகவேண்டும்"

"ஆம், போகவேண்டும்; நானும், நீயும். இல்லத்துக்கல்ல, இன்பலோகத்துக்கு!"

"இது என்ன பேச்சு?"

"பேச்சல்ல இது; இன்பத்தின் வீச்சு!"

"துணிவைப் பார்!"

"தவறு பெண்ணே! பணிவைப்பார் என்று சொல்லு! விழி அம்பு உன்னிடம்,பழிச் சொல் அம்பை எய்யாதே என்னிடம்!"

"என்ன வேண்டும்?"

"தா என்றால் தருவாயோ?"

"தராவிட்டால் என்னவாம்?"

"பணிவுக்குப் பதில் துணிவுவரும்!"

"துணிவு வந்தால்?"

"பூஞ்சோலையை மூடிய திரை இருக் காது!"

'இவர் என்ன பேச்சோடு மட்டும் நின்றுவிடுகிறாரே என்று அவள் தன் மனதுக்குள் எண்ணச்சரம் தொடுத்தாள்.

மாறன் அவள் இடுப்பில் இருந்த குடத்தைப் பற்றினான். இறக்கிக் கீழே வைத்தான். அவள் தடுக்கவில்லை என்பதால் இசையாக இணைய இசைவாக இருக்கிறாள் என்று குறிப்பறிந்தான்.

இப்போது பொற்குடமாய் நின்றவளின் கரம் பற்றி கல்தூணைப்போலிருந்த தன்னோடு சேர்த்தணைத்தான்.

'அப்பாடா என்ன ஒரு வலிமை' என்று அவள் வியக்க, 'அம்மாடி எப்படித்தான் இப்படியோர் குளிர்மை' என்று அவன் மகிழ்ந்தான்.

"என்ன கோபமா?"

"ஏன்....?"

"தேன் கூட்டைத் திருடியதால்!"

"இது திருட்டல்ல.."

"எப்படி?"

"தெரிந்தே எடுப்பது திருடல்ல; திரட்டல்!"

"அப்படியானால் முதலில் மறுத்தது?"

"வெறுப்பால் அல்ல, வெட்கத்தால்!"

சொல்லி அவள் இதழ்மூட முடியாமல், தேன் அள்ளிக்கொள்ள அவன் உதடுகள் இறங்கின. சிந்தாமல் தேன் குடித்துப் பின் சொன்னான்,

"எட்ட நின்று பார்த்தபோது ஏங்க வைத்தாய்! இப்போது கிட்ட வந்து தொட்டபோது நீந்த வா என்று கெஞ்ச வைத்தாய்!"

"நீரோடை இங்கில்லை. அது அங்கே!"

"நூலாடை மூடிய பளிங்குத் தேனோடை அங்கில்லை-இங்கேதான்."

"குறும்பு போதும் விடுங்கள் என்னை!"

"இனி நான் எறும்பாவேன், மலர்மீது பசியாறும் வண்டாவேன்; ஆற்றின்மீதினிலே ஊர்ந்து செல்லும் படகாவேன்."

"அய்யய்யோ அப்படியா? நான் என்னாவேன்?"

"ஆலையிலே சிக்குண்ட கரும்பாவாய்! அவனியிலே காணாத இனிமையெல்லாம் கறந்து தரும் கற்பகதருவாவாய்! இன்னும் சொல்லவா, எதிரேதான் சொர்க்கபுரி, நீயே ரதமாவாய், நீயே வடமாவாய், நீயென் வசமாவாய், நானுன் நினைவாவேன். நானே நீயாவேன், கலையே நீதானே, கலைஞன் நான்தானே, விலையே இல்லாத உலகை நாம் காண்போம், தடையே செய்யாதே உறையால் வாள் எடுத்தேன்; இனி நாம் உவகைக் களம் காண்போம்!"

சூரியன் சுறுசுறுப்பாக தாமரை மகிழ்ந்து மொட்டவிழ்த்தது.

மேலே மலர்களுக்கும் வெட்கத்தில் வியர்த்தது. தென்றல் வந்து வருடி வியர்வை துடைத்தது.

கூடியிருந்த மயிலுக்கு களிப்பொரு பக்கம், கவலை மறுபக்கம். இன்பத்தில் மயங்கிய நெஞ்சில் ஒரு முள்ளாய் தைத்தது அந்தக் கவலை.

களிப்பென்னும் கடலில் நீந்தும்போது கவலைக்கு என்ன வேலை?

நீந்தும் போது அவள் மனதுக்குள் ஊர்ந்தது ஒரு நினைவு.

கவலைக்குக் காரணம் அதுதான்.

அது என்ன நினைவு?

"பார்வையால் என்னை அவர் உண்டபோது இன்பம் வந்தது. இப்போது என்னைக் கூடி அவர் இருக்கும்போது பிரிவு வந்துவிடுமோ என்று துன்பம் வந்து அச்சம் தருகிறது."

என்றுதான் நினைத்தாள் பூமகள்.

இதனைத்தான் சொன்னார் திருவள்ளுவர்.

எப்படி? இப்படி:

**"இன்கண் உடைத்தவர் பார்வல் பிரிவஞ்சும்**
**புன்கண் உடைத்தால் புணர்வு"**

அதிகாரம் 116, பாடல்: 1152

(இன்கண்=இன்பம்.புன் கண்=துயரம்.)



## இலக்கிய நயம்

## குறுக்கெழுத்துப் போட்டி இல-105

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1 | | | 2 | ■ | 3 | 4 |
| | ■ | ■ | 5 | | | |
| 6 | | 7 | | | ■ | |
| | ■ | | | ■ | 8 | |
| | ■ | | ■ | 9 | | |
| ■ | 10 | | ■ | ■ | | ■ |
| 11 | | | | | | ■ |

### இடமிருந்து வலம்

01. நவதானியங்களில் ஒன்று.
03. தோழனுக்குரிய ஒருசொல்.
05. இராமருக்கு உதவியவர்கள்.
06. சிலர் மற்றவர்களுடன் இது பார்த்துத்தான் பழகுவார்கள்.
09. அரசியல்வாதிகளுக்கு இதில் ஒரு பிடிப்பு இருக்க வேண்டும்.
10. இந்த வருடத்திற்குரிய பெயர்.
11. முற்காலத்தில் கணவன்மார்களை இதன் மூலம் தெரிவு செய்வார்களாம்.

### மேலிருந்து கீழ்

01. எஜமான் பிறப்பிப்பது.
02. கிருஷ்ணபரமாத்மாவின் அரசிருக்கை.
04. முருகனுக்கு உகந்த நட்சத்திரம்.
07. உண்மைகள் நிறைந்தது.
08. இது வருவதற்கு முன் அணைகட்ட வேண்டும்.

இதற்குரிய சரியான விடையைக் கூப்பனில் நிரப்பி அஞ்சலட்டையில் வெட்டி ஒட்டி 24.06.1995க்கு முன்னர் எமக்குக் கிடைக்கும்படி அனுப்பிவையுங்கள். அனுப்பிவைக்க வேண்டிய முகவரி:

குறுக்கெழுத்துப் போட்டி இல-105
தினமுரசு வாரமலர்
த.பெ.இல. 1772
கொழும்பு.

சரியான விடையை எழுதி அனுப்புபவர்களில் பத்து அதிஷ்டசாலிகள் தெரிவு செய்யப்பட்டு, ஒவ்வொருவருக்கும் தலா ரூபா 50/= பரிசளிக்கப்படும்.

### குறுக்கெழுத்துப் போட்டி இல-103ற்கான சரியான விடைகள்:

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1 தீ | ர் | 2 வை | ■ | 3 அ | ப | லை |
| க் | ■ | ய | ■ | க | ■ | ■ |
| 4 கு | தூ | க | ல | ம் | ■ | 5 க |
| ச் | ■ | ம் | ■ | 6 பா | ர | தி |
| சி | 7 வி | ■ | 8 சே | வ | க | ர் |
| ■ | சி | ■ | வ | ம் | ■ | க |
| 9 ம | றி | ய | ல் | ■ | 10 மு | ள் |

**குறுக்கெழுத்துப் போட்டி இல. 103இல் வெற்றி பெற்ற அதிஷ்டசாலிகள்.**

1. எம். மகேஸ்வரன், மட்டக்குளி.
2. வி. நவமோகன், மருதானை.
3. வி.லட்சுமிபிரபா, பலாங்கொடை.
4. செல்வி. ஜெயமதி, வவுனியா.
5. எம். ரஷாட் சுபைதீன், புத்தளம்.
6. கே.ஸ்ரீஸ்கந்தகுமார்.திருகோணமலை
7. எஸ். செந்தூரன் நுவரெலியா.
8. திருமதி.ஜெ.ஆனந்த், கல்குடா.
9. திருமதி.ஆர்.ரஜினி, கொலன்னாவை
10. பாத்திமா சன்பறா அமீர், சம்மாந்துறை.

இவ் அதிஷ்டசாலிகள் ஒவ்வொருவருக்கும் பரிசாக தலா ரூபா 50/= வழங்கப்படும்.



**அன்று கண்ணகி மதுரையை எரித்தாள். இன்று?**

திருமதி சந்திராணி தங்கத்துரை-சவளக்கடை.

*அதே மதுரையில் கண்ணகிகள் எரிகிறார்கள். காரணம்: சீதனம் பற்றாக்குறை!*

▫▫

**பெண்களிடம் இரகசியம் சொல்லக் கூடாது என்பார்களே ஏன்?**

ஜே.ஜிப்ரி-அக்கரைப்பற்று.

*பெண்களிடம் மட்டுமல்ல, யாரிடமும் சொல்லக்கூடாது! அதுதான் இரகசியம்.*

▫▫

**உள்ளத்தில் நல்ல உள்ளத்தை எங்கே தேடலாம்?**

சி.விஜி விஜயகுமார்-உடபுசல்லாவ.

*உங்கள் தலைக்கு மேலே வெள்ளம் வரும்போது திரும்பிப் பாருங்கள். உதவிக்கு நீளும் கரம் எதுவோ அதன் இதயம் சுத்தம் என்று நம்புங்கள். இங்கே வெள்ளம் என்று சொல்லப்பட்டது கஷ்ட நஷ்டங்களைக் குறிக்கும்.*

▫▫

**கொப்பி அடித்து வெற்றிபெறலாம் என்று நினைப்பவர்கள் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?**

எஸ்.சாந்தகுமார்-கொழும்பு-06.

*ஏறக்குறைய இப்படியொரு கேள்வியை இளையராஜாவிடம் கேட்டிருந்தார்கள். அவரது இசை வளர்ச்சியைக் கண்டு பிரமித்து அவரை வசை பாடிக்கொண்டே சில கற்றுக்குட்டிகள் அவரது இசையைக் கொப்பி அடித்தனர். ஆனால் நிலைக்கவில்லை. அது பற்றி இளையராஜா என்ன சொன்னார் தெரியுமா? "பாவம்; இல்லாதவர்கள் பிச்சை எடுக்கிறார்கள்."*

▫▫

**காதல் என்றும் நிலைத்து நிற்க காதலர்கள் என்ன செய்ய வேண்டும்?**

பி.எம்.எம்.நியாஸ்-மாத்தறை.

*காதல் பயிர் என்றால் அன்புதான் நீர். நல்ல புரிந்துணர்வுதான் வேர்.*

▫▫

**அரசியல் தீர்வு சாத்தியம்தானா சிந்தியா?**

கே.இராமச்சந்திரன்-மட்டக்களப்பு.

*ஏற்கெனவே பலர்குழம்பவைத்துக் கொண்டிருக்கிறார்கள். இதில் நான் வேறு கருத்துச் சொல்லிக் குழப்புவானேன்? மே21-27 1995, முரசில் மூன்றாம் பக்கத்தை புரட்டுங்கள். அரசியல் தீர்வை முன்வைக்க தாமதமாகலாம் என்று காரணமும் சொல்லப்பட்டிருந்ததே.*

▫▫

**குரங்கில் இருந்து மனிதன் தோன்றியிருந்தால் மனிதனில் இருந்து ஏன் வேறு ஒரு இனம் தோன்றவில்லை?**

சே.நாகேந்திரா-ஹட்டன்.

*மனிதனில் இருந்து இன்னமும் குரங்கின் பாதிக் குணாம்சம் மறையாமல் இருப்பதால்தானோ....!*

▫▫

**கேட்க வேண்டியது எது? ஏற்க வேண்டியது எது?**

எம்.ஐ.ஹலீம்-ஆலங்குடா.

*நல்ல கேள்வி, தக்க பதில்.*

▫▫

**நல்ல உள்ளம் யாரிடம் இருக்கிறது? கண்டு பிடிக்க முடியுமா?**

செல்வி, நஸீராஸ்சம்சுதீன்-கந்தளாய்.

*நீங்கள் பின்நோக்கி செல்வது நல்லது. மூன்றாவது கேள்விக்கு அளித்துள்ள விடையைப் பார்க்கலாம்.*

▫▫

**ஒரு பெண் என்னைக் காதலித்து ஏமாற்றி விட்டாள், அவளை என்ன செய்வது?**

எஸ்.விஜயன்-அக்கரைப்பற்று-07.

*இனிமேலும் அவளைக் காதலிக்காமல் இருக்கலாமே.*

▫▫

**அன்பின் சிந்தியா! காரியத்தில் உறுதியாய் நிற்க என்ன செய்ய வேண்டும்?**

த.ரொகான்-கோமாரி.

*"ஆரியக் கூத்தாடினாலும் காரியத்தில் கண்ணாயிருக்க வேண்டும்." இது நம் முன்னோர் சொன்னது.*

▫▫

**காலத்திற்கு ஏற்ப கோலத்தை மாற்றுபவர்கள் பற்றி உங்கள் எண்ணம்...?**

எம்.நிஸா முஸம்மில்-தொடம்வத்தை.

*உயிரியல் விதிப்படி பச்சோந்திகளுக்குத்தான் அப்படி ஒரு குணம் இருப்பதாக வெகு உறுதியாக கண்டறிந்துள்ளார்கள்.*

▫▫

**இந்தியப் பிரதமர் நரசிம்மராவ் இப்போது என்ன செய்கிறார்?**

கோ.தேவராஜ்-பதுளை.

*முன்பென்றாலும் அத்தி பூத்தாற்போல புன்னகைப்பது உண்டாம். தற்போது அதுவுமில்லையாம்.*

▫▫

**பாகிஸ்தான் வீரர் இம்ரான்கான் பற்றி உமது கருத்தென்ன, அதைச் சொல்லும்?**

கோ.மாலினி-கண்டி.

*அவர் குறிவைத்து வீசிய பந்துகளில் நேர்த்தியாக வீழ்ந்தவை விக்கெட்டுக்கள் மட்டுமல்ல என்பது எனது கருத்து.*

▫▫

# மகாபாரதம்

அங்கம் 83

**இவ்வாரம் (18.06.95 ஞாயிறு மாலை 7.00மணி) எம்.ரி.வியில் மகாபாரதம் தொடரைப் பார்க்கும் உங்கள் கரத்தில் முரசும் இருக்கட்டும்.**

**அழகு தமிழில் தருவது- இராஜகுமாரன்**

**காலத்தின் குரல்:**

சோகமுகில் சூழ்ந்தெங்கும் சொரியும் மழைபோல
வேகமதாய்க்கண்ணீர் விண்ணோரும்தான் பொழிய
நீதிநெறி பிறழ்ந்த நீசர்களின் கையாலே
க்ஷத்திரியச்செயல் வீரன் சூழ்ச்சிக்கிரையானான்..!
போர்க்களத்தில் கடைப்பிடிக்கும் போர்க்கலையைப் போதிக்கும்
ஆற்றல்மிக்க ஒரு துரோணர் அநீதிதனை அணைத்தனரோ...?
பரசுராம மாமுனியின் பாதம்தனில் கிடந்து
வரிசையுடன் கலைபயின்ற கர்ணனவன் வஞ்சனையன்
சீர்தனையே தொட்டதுபோல் சீரழிவைச் செய்தனனோ...?
குருச்சேத்திரம் இன்று கோர உருக் கொண்டு
கொடுமைகளினிருப்பிடமாய் காட்சி தருகிறதே...!

**—காட்சி தொடக்கம்—**

துவாரகை-சுபத்திரையின் அந்தப்புரம். தோழி ஒருத்தி குருச்சேத்திரத்தில் இருந்து வந்த ஓலையுடன் சுபத்திரையிடம் வருகிறாள்.

**தோழி:** மகாராணி...! குருச்சேத்திரத்திலிருந்து தங்களுக்கு ஓலை வந்திருக்கிறது.

**சுபத்:** மகன் அபிமன்யுதான் அனுப்பியிருக்க வேண்டும்....! (ஓலையைப் படிக்கிறாள்) மதிப்புக்குரிய அம்மாவுக்கு.... வணக்கம்.... 'ஆண்டவன் அருள் வானாக மகனே......' நேற்று போர் முனையில் பிதாமகர் அவர்களின் ஆசிகளைப் பெறும் வாய்ப்பினைப் பெற்றேன்....! 'மகனே! உன்னைப் பார்க்கும் போது என்னுடைய இளமைக் காலம் நினைவுக்கு வருகிறது' என்று கூறினார். அவ்வாறு கூறும் போது அவருடைய கண்களில் பெருமை பொங்குவதைக் கண்டேன் அம்மா....!

இதனைப் படிக்கும் போது சுபத்திரையின் கண்களில் கண்ணீர் வடிகிறது. விம்முகிறாள். இதனை வாசுதேவரும் காண்கிறார்.

**வாசு:** என்ன மகளே! என்ன நடந்தது?

**சுபத்:** அப்பா..... என்னமோ தெரியவில்லை.... குருச்சேத்திரத்திலிருந்து அபிமன்யு அனுப்பியுள்ள கடிதத்தைப் படிக்கும்போது எனக்கு விவரிக்க முடியாத சோகம் உண்டாகி அழுகையும் வருகிறதே.....எண்ணற்ற அம்புகள் என் இதயத்தை துளைப்பது போல் வேதனை ஏற்படுகிறது அப்பா....அண்ணா!(கிருஷ்ணரை நினைத்தவளாய்) ஏதோ விபரீதம் ஏற்பட்டு விட்டது போலத் தோன்றுகிறது. என் மகனுக்கு ஏதாவது நேர்ந்தால் அண்ணா.....! நீதான் பொறுப்பேற்க வேண்டும்!

**—காட்சி மாற்றம்—**

அஸ்தினாபுரம்-திருதராட்டிரர் அரண்மனை-மன்னருடன் சஞ்சயன்.

**திருத:** ஓ சஞ்சயா...! அபிமன்யுவைக் கொலை செய்த பின்னர் இனி எந்த வகையிலும் சமாதானம் ஏற்படப் போவதில்லை. எனது எஞ்சியுள்ள புதல்வர்களையும் பாண்டவர்கள் கொன்று விடுவார்கள். எமது குடும்பத்தில் இது ஒரு பெரும் கறையினை ஏற்படுத்தி விட்டது. அர்ச்சுனன் எங்கே இருக்கிறான் என்பதைப் பார்த்துக் கூறு சஞ்சயா!

**—காட்சி மாற்றம்—**

குருச்சேத்திரத்துக்கு அப்பால் அர்ச்சுனன் கணைகளால் தாக்குண்டு சுசர்மன் மரணமடைகிறான்.

**அர்ச்:** கேசவா..! வாருங்கள் திரும்பிச் செல்வோம்! கண்ணா....! ஏனோ தெரியவில்லை ....அழ வேண்டும் போன்ற எண்ணம் தோன்றுகிறது. ஏதோ விபத்து ஏற்பட்டிருக்க வேண்டும்!

**கிருஷ்:** அர்ச்சுனா...! தர்ம யுத்தத்தின் போது ஒழுக்கம் நிலை குலைந்திருந்தால் மட்டுமே விபரீதமோ விபத்தோ ஏற்பட்டிருக்க முடியும்!

**அர்ச்:** என் கண்களில் கண்ணீர் சுரக்கின்றதே! இதற்கு என்ன காரணம்?

**கிருஷ்:** உன் கண்கள் போதிய பயிற்சி பெற வில்லைப் போலும்!

**—காட்சி மாற்றம்—**

பாண்டவர் அணி- யுதிஷ்டிரரிடம் வீரன் வந்து அபிமன்யு கொல்லப்பட்ட தகவலைக் கூறுகிறான்.

**யுதிஷ்:** இல்லை..... இருக்காது! நீ வேறு யாரோ மரணமடைவதைப் பார்த்திருக்கிறாய்! பீமா...பீமா! கேட்டாயா இந்தச் சேதியை....? என்னுடைய அபிமன்யு உண்மையில் மாண்டு விட்டானா.....? அந்த மாவீரனான சிறுவன் திரும்பிவரமுடியாத இடம் தேடிப்போய் விட்டானா? கடவுளே! அர்ச்சுனனை எவ்வாறு நான் தேற்றப் போகிறேன்.....?

**—காட்சி மாற்றம்—**

அர்ச்சுனனும் கிருஷ்ணரும் பாண்டவர் கூடாரங்களை அண்மிக்கின்றனர். வீரர்கள் எவரும் வழமையாக அளிக்கும் மரியாதையைத்தராதமையால் அர்ச்சுனன் மேலும் கலக்கமடைகிறான்.

**அர்ச்:** கேசவா! எமது பாசறையில் என்றுமில்லாத அமைதி காணப் படுகிறதே?

**கிருஷ்:** போய்ப்பார்த்தால் தானே தெரியும்.....!

**அர்ச்:** வாசுதேவா! வீரர்களும் நமக்கு வழமையான மரியாதை தரவில்லையே! நான் வரும்போது அபிமன்யு தன் சகோதரர்களுடன் ஓடோடி வருவானே! அவனும் வரவில்லையே! (ஒரு வீரனை அணுகி) வீரனே இன்று போர்க்களத்தில் என்ன நடந்தது? குருதேவர் மகாராஜாவை கைது செய்துவிட்டாரா? யாராவது நடந்த சம்பவத்தைக் கூற மாட்டீர்களா? பாசறையில் கொடி பறக்கிறதே?



**வீரன்:** ஆச்சாரியார் துரோணர் இன்று சக்கரவியூகம் அமைத்தார் பிரபு!

**அர்ச்:** கேட்டாயா மாதவா? குருதேவர் சக்கரவியூகம் அமைத்தாராமே! கண்ணா! நம் இருவருக்கு மட்டும் தானே சக்கரவியூகத்தை வெற்றிகரமாக ஊடுருவும் வழி தெரியும்! வீரனே....! என் மகன் அபிமன்யு வியூகத்தினுட் சென்றானோ? ஜனார்த்தனா! அவனுக்கு வெளியே வரும் மார்க்கம் தெரியாதே!

**கூடாரத்துள் அபிமன்யுவின் இருக்கை காலியாக இருப்பதைக் காணும் அர்ச்சுனன் அதிர்ச்சியடைகிறான்.**

**அர்ச்:** (யுதிஷ்டிரரிடம்) அண்ணா! அபிமன்யுவின் இருக்கை காலியாக இருக்கிறதே? பீமண்ணா, நகுலா, சகாதேவா! அபிமன்யுவின் இருக்கை காலியாக இருப்பதற்கான காரணம் என்ன வென்று சொல்லுங்கள்! நீங்கள் எதுவும் கூறாவிட்டால் உத்தரை உண்மையைக் கூறுவாள்! அபிமன்யு என்மகனே...!

**கிருஷ்:** பார்த்தா! வீரச்சத்திரியனின் நிழலை எப்போதும் ஆயுதங்கள் துரத்திக் கொண்டே தொடரும்! எமது பாத அடிகளை மரணம் என்றும் பின் தொடரும்! போர் முனையில் எம்மை என்றும் பின்தொடர்வது சாவுமட்டும்தான்! போர் முனையை விட்டு ஓடாதிருப்பவர்கள் ஒன்றில் வெற்றியைத் தழுவுவார்கள் அல்லது வீர மரணமடைவார்கள்! இங்கு நிலவும் அமைதி அபிமன்யுவின் மறைவையே குறிக்கிறது பார்த்தா!

**அர்ச்:** இல்லை...! கேசவா...! இல்லை....! என் அபிமன்யுவை நான் இழக்க முடியாது!

**கிருஷ்:** அமைதி அடை அர்ச்சுனா! நீ இவ்வாறு அழுது புலம்புவதால் அபிமன்யுவின் வீர மரணத்தைக் களங்கப்படுத்தியவனாவாய்! ஆச்சாரியார் முதற் கொண்டு அத்தனை மகா வீரர்களையும் தன்னந்தனியனாக நின்று எதிர்த்து வீரமரணமடைந் திருக்கிறான் உன் மகன். இதற்காகப் பெருமைப் படக் கடமைப்பட்டவனப்பா நீ!

**அர்ச்:** ஆனால் கேசவா! இங்குள்ள வீரர்களுக்கு சக்கரவியூகத்தை அவன் ஊடுருவிச் சென்றாலும் வெளியே வரும் மார்க்கம் தெரியாதவன் என்பது தெரிந்திருக்குமே!

**பீமன்:** எங்களுக்கு அது தெரியும் தம்பி அர்ச்சுனா! அபிமன்யுவை முன் விட்டு நாங்கள் பின்தொடர்ந்தோம்..ஆனால்:..

**நகுல:** சிந்து மன்னன் ஜயத்ரதன் எங்களை முன்னேறாது தடுத்துவிட்டான்!

**கிருஷ்:** ஜயத்ரதன் சிவபிரானிடம் பெற்ற வரத்தின்படி இன்றைய தினம் அவனை வீழ்த்தியிருக்க எவராலும் முடியாது அர்ச்சுனா! முன்னொரு தடவை திரௌபதியைக் கடத்துவதற்கு ஜயத்ரதன் முயன்று, உங்களால் தண்டிக்கப்படவிருந்தான். அவனை நீங்கள் மன்னித்து உயிர்ப்பிச்சை அளித்தீர்கள். இதன் பின்னர் சிவபிரானை நோக்கி தவமிருந்தான். என்றாவது ஒருநாள் பாண்டவர்களில் நால்வர் சேர்ந்து தாக்கினாலும் தோல்விகாண முடியாத வரத்தைப் பெற்றான். அந்த வரத்தை இன்று பயன்படுத்தினான். உன் சகோதரர்கள் நால்வரும் ஒன்றாக நின்று போரிட்டும் அவனை இன்று வெற்றிகொள்ள முடியாமற் போய்விட்டது.

**அர்ச்:** ஜயத்ரதனா.....! என் மகனின் சடலம் எங்கே...?

**—காட்சி மாற்றம்—**

அபிமன்யுவின் சடலம் கிடத்தப் பட்டிருக்கிறது. உத்தரை புலம்புகிறாள், ஏனையோர் துயரம் தோய்ந்த நிலையில் காணப்படுகின்றனர்.

**உத்த:** எழுந்திருங்கள் நாதா! நீங்கள் இதைப்போன்று எப்போதும் தூங்கியதில்லையே! அம்மா முதலானோர் வந்து காத்துக் கொண்டிருக்கிறார்களே! நீங்கள் ஏன் எழுந்திருக்கவில்லை! (திரௌபதியிடம்) அத்தை நீங்கள் அவருக்கு அளவுக்கு மீறி செல்லம் கொடுத்து விட்டீர்கள்! அவர் எழுந்ததும் அவரைத் திட்டுங்கள்!

அர்ச்சுனனும் சகோதரர்களும் கிருஷ்ணரும் பிரவேசிக்கின்றனர்.

**உத்த:** பார்த்தீர்களா! நம் பெரியவர்களேல்லாம் வந்து நிற்கிறார்களே! நீங்கள் இவ்வாறு தூங்கிக் கொண்டிருந்தால் பெரியவர்கள் என்ன நினைப்பார்கள்? அப்பா, மாமா...! இவர் ஏன் இன்னும் எழுந்திருக்கவில்லை?

**அர்ச்:** கேசவா....! உத்தரைக்கு என்ன பதில் கூறட்டும்? இதோ இரத்தம் தோய்ந்து கிடக்கும் சடலம் வெறும் கட்டை! அது ஆத்மா அல்ல என்று அவளுக்கு விளக்க முடியுமா? சொல்லு கண்ணா.....!

**கிருஷ்:** இந்த மா வீரனின் பெற்றாரும், அவனை மணம் முடித்த மனைவியும் இங்கு இந்தக் காட்சியைக் கண்ணுறும் அனைவரும் ஆசிர்வதிக்கப்பட்டவர்களே! எழுந்திரு மகளே! ஏனைய சத்திரிய வீராங்கனைகளைப் போல் நீயும் இந்த வீரனுக்கு விடை கொடு! உலகின் கண் சகல இளைஞர்களுக்கும் இவன் என்றும் ஒரு சிறந்த உதாரணமாகத் திகழுவான்! மரணம் தான் இறுதியான உண்மை! இருப்பினும் இத்தகைய வீர மரணம் எல்லோருக்கும் கிடைப்பதில்லை! பெரும் ஆற்றல் மிக்க படைகளே, கேள்விப்பட்டாலே பயந்து நடுங்கும் பேராற்றல் மிக்க வீரர்களை தன்னந்தனியனாக எதிர்த்து நின்று வீரமரணமடைந்திருக்கிறான். அவனை சகல பந்தங்களிலிருந்தும் விடுவித்து விடுங்கள். அக்கினி சாட்சியாக நீ அவனுக்கு அளித்த பந்த உறவுகளை அறுத்து அவனுக்கு விடை கொடு மகளே! சகோதரி சுபத்திரையின் சார்பில் அவளுடைய பந்தங்களை நானே அறுத்துவிடுகிறேன், பார்த்தனே! இவனுடைய இறுதி யாத்திரைக்கான ஆயத்தங்களைச் செய்!

**அர்ச்:** மகனே! நாளை சூரிய அஸ்தமனத்துக்கு முன் ஜயத்ரதனை நான் கொல்வேன்! இல்லையேல் நானே தீயுடன் ஐக்கியமாகி விடுவேன்! இது உன்மேல் ஆணை!

சுடுகாடு—வேதியர்கள் மந்திரங்களை ஓதி அபிமன்யுவின் இறுதிக் கிரியைகளைச் செய்கின்றனர். துரியோதனர், துரோணர், கர்ணன், ஜயத்ரதன், சகுனி முதலானோர் வருகின்றனர், அர்ச்சுனன் அவர்களை அணுகி.....

**அர்ச்:** என் மகன் அபிமன்யு வீரர்களாகிய உங்கள் அனைவருடனும் போரிடும் போது பயப்படவில்லை என்று நம்புகிறேன்!

**துரோ:** அர்ச்சுனா! இந்த யுத்தகளம் அபிமன்யுவைப் போல் ஒரு வீராதி வீரனைக் கண்டதில்லை. அவனுடைய பாணங்களால் எங்களில் எவரும் காயப்படாமல் தப்பவில்லை, அத்தகைய வீரனுக்கு மரியாதை அளிக்கவே வந்தோம், யுதிஷ்டிரரைக் கைது செய்ய முடியாமல் என்னைத் தடுக்கும் முயற்சியில் தான் அபிமன்யு மரணமானான்.

**கர்ணா:** சுபத்திரையின் மைந்தனே! எனது இறுதி அஞ்சலியினை ஏற்றுக் கொள். உன் பெற்றாரும் உன் மனைவி உட்பட உன் உறவினர்களும் உன்னால் பெருமை அடைகிறார்கள்!

இவ்வாறு ஒவ்வொருவரும் தத்தமது இறுதி அஞ்சலியை அளிக்கையில் ஜயத்ரதனும் அங்கு வருகிறான்.

**அர்ச்:** சிந்து மன்னா! ஜயத்ரதா! நீ அவனுடைய உடலை தீண்ட வேண்டாம்!

**யுதிஷ்:** தம்பி அர்ச்சுனா! என்ன செய்கிறாய் நீ!

**அர்ச்:** என் மகன் இவ்வாறு இழிவு படுத்தப்பட அனுமதியேன்! இவன் எமது அடிமையாகக் கிடக்க வேண்டியவன். தாங்கள் இவனை அன்று மன்னித்து விடுதலை அளித்தீர்களே! ஜயத்ரதா! நாளை சூரிய அஸ்தமனத்தை நீ காணமாட்டாய்! அதற்கிடையில் உன்னைக் கொல்வேன்; இல்லையேல் நானே தீயில் விழுந்து மடிவேன்! இது சத்தியம்!

சிதைக்கு தீ மூட்டப்படுகிறது.

**—காட்சி மாற்றம்—**

குருச்சேத்திரம்-துரோணரின் பாசறை. துரோணர் சோகமே உருவாக இருக்கிறார். கிருபாச்சாரியார் வருகிறார்.

**கிருப:** போரின் போது வீரர்கள் மடிவது சகஜம் தானே!

**துரோ:** அப்போ நான் வீரன் இல்லையா? எனக்கேன் சாவு வரவில்லை? அபிமன்யு ஒரு சிறுவன்! போர் விதிகள் அனைத்தையும் மீறி அவனைக் கொன்று விட்டோமே! இனி எவ்வாறு கங்கை மைந்தரின் முகத்தில் விழிக்கப் போகிறேன்?

ஜயத்ரதன் வருகிறான்

**துரோ:** மன்னர் ஜயத்ரதரே! நாளை உதயத்தில் போர்முனை செல்ல வேண்டிய நீங்கள் சற்று ஓய்வெடுக்க வேண்டாமா?

**ஜயத்:** எனக்கு அமைதி ஏற்படவில்லை குருதேவரே! என் மனதுக்கு அமைதி தேடித்தர வேண்டியவர் தாங்களே! அர்ச்சுனனும் எங்களைப் போன்று தங்களின் மாணாக்கனே! அவ்வாறிருந்தும் அர்ச்சுனன் மட்டும் சிறந்த வீரன் என்ற பெயர் பெறக் காரணம் என்ன?

**துரோ:** உங்கள் அனைவருக்கும் ஒரே மாதிரியான கல்வியையே புகட்டினேன. அர்ச்சுனன் கூடிய சிரத்தை எடுத்து பல விடயங்களைக் கற்றுக் கொண்டான். அதனால் திறமைசாலியானான். இது இப்போது உனது துயரத்துக்கு காரணமல்ல என்று கருதுகிறேன். மரணம் வீரனையும் அணைப்பது போல் கோழையையும் வீழ்த்துகிறது. நானே இன்று கவுரவப் படையின் தளபதியாக இருந்து அந்தச் சிறுவனின் மரணத்துக்கு துணை போகவில்லையா? நாளை என் அருகிலேயே நீ நின்று போரிடுவாய்! உன் பாதுகாப்புக்கு நான் உத்தரவாதம்! போய் அமைதியாகத் தூங்கு.

துரியோதனன் பாசறையில் கர்ணன், சகுனி முதலானோர்.

**கர்ண:** அர்ச்சுனனிடமிருந்து ஜயத்ரதன் தப்புவது முடியாத காரியம். நாளையப் பொழுது அஸ்தமிக்கும் வரை ஜயத்ரதன் தப்பிவிட்டானானால் அர்ச்சுனன் தன் முடிவைத் தானே தேடிக் கொள்வான்.

**துரி:** ஏனையோரை சுலபமாக நாம் முறியடித்து விடலாம்.

**கர்ண:** பீமனை மறந்துவிட்டாயா நண்பனே?

**துரி:** பீமனைப்பற்றி எனக்குத்தான் நன்றாகத் தெரியும்! அவன் உடம்புதான் பெரிது! ஒரு முட்டாள் அவன்! அவனைக் கொல்வது ஒன்றும் பெரிய விடயமல்ல! அர்ச்சுனன் தான் சற்றுக் கடினமானவன். அவனுடைய தேரோட்டி மாயாவி கிருஷ்ணனின் தந்திரோபாயங்களும் தான் கிலேசம் தருகின்றன.

**சகுனி:** நாளை சிந்து மன்னனை அர்ச்சுனன் கொன்றாலும் கொல்லாமற் போனாலும் அர்ச்சுனனின் மரணம் மட்டும் நிச்சயம்!

**துச்சா:** அவ்வாறு நிச்சயமாகக் கூறக் காரணம் என்ன மாமா?

**சகுனி:** எல்லாம் ஒரு சாபம்தான்! ஜயத்ரதனின் தலையை எவராவது சீவி அத்தலை மண்ணில் வீழ்ந்தால் அவனைக் கொன்றவனின் தலை சுக்குநூறாக வெடித்து அவன் சாவான். ஜயத்ரதனின் தந்தை விரட்சத்திரன் கானகத்தில் தவம் செய்து கொண்டிருக்கிறான். தந்தையைக் காண தனயன் அங்கு செல்கிறான்.

**—காட்சி பின்னோக்கு—**

கானகத்தில் விரட்சத்திரன் தவத்திலிருக்கையில் மகன் ஜயத்ரதன் அவரிடம் வருகிறான்.

**ஜயத்:** தந்தையே! வணக்கம்.....அஸ்தினாபுரி மன்னர் சந்தனு மகாராஜா தன் மகன் பீஷ்மருக்கு அளித்த வரத்தினைப் போல் எனக்கும் ஒரு வரம் அருள வேண்டுகிறேன்!

**விரட்:** நீ கங்கை புத்திரனுமல்ல; நான் சந்தனுவுமல்ல, உனக்கு நான் ஒரு சாபம்தான் தரலாம்! உன்னுடைய தலையை யார் துண்டித்து தரையில் வீசுகிறார்களோ, அவர்களுடைய தலை சுக்குநூறாக வெடிக்கும்.

**—பின்னோக்கு முடிவு—**

**சகுனி:** நாளை அர்ச்சுனன் ஜயத்ரதனின் தலையைச் சீவினால் விரட்சத்திரனின் சாபத்தால் அர்ச்சுனன் மரணமடைவான். இல்லையேல் அர்ச்சுனனின் சபதப்படி அவன் தீயில் புகுந்து வெந்து மடிவான்! ஆகவே மருமகனே! நாளை நமக்கு ஒரு விசேடமான நாள், போரே நாளை முடிவடையப் போகிறது!

ஜயத்ரதன் வருகிறான்.

**துரி:** வாருங்கள் ஜயத்ரதரே அமருங்கள்!

**கர்ண:** என்ன சிந்து மன்னரே வாட்டமுற்றிருக்கிறீர்?

**ஜயத்:** அர்ச்சுனனைப் போன்ற ஒரு வீரன் என்னை நாளை கொல்வதாக சபதமேற்றிருக்கும் போது எப்படி நிம்மதியாக இருக்க முடியும்? இன்று இரவோடு இரவாக நாடு திரும்பப் போகிறேன்!

**சகுனி:** சிந்து மாமன்னரே! நாளை தங்களை துரோணாச்சாரியார் முதல் சகல மகா வீரர்களும் பாதுகாக்க திட்டமிட்டிருக்கும் போது நீங்கள் ஏன் அச்சமடைய வேண்டும்! நாளை மரண தேவன் தனது கணைகளை எதிர்ப்புறமன்றோ திருப்புவான்!

**துரி:** தங்களைப் போன்ற ஒரு வீரன் பின்வாங்கி ஓடிவிட்டால் இப்படைகள் அனைத்தும் சோர்வடைந்துவிடுமே! இதனால் நிச்சயம் எமது அணி தோற்றுவிடலாம் அல்லவா?

**ஜயத்:** மாமா அவர்கள் கூறியது போல் நீங்கள் அத்தனைப் பேரும் என்னைக் காப்பாற்றுவீர்கள் அல்லவா?

**துரி:** அச்சத்தைத் தவிர்த்துவிடுங்கள் சகோதரரே! நாங்கள் எல்லோரும் தங்களுடனேயே நிற்போம், போய் அமைதியாக ஓய்வெடுங்கள்!

(தொடர்ந்து வரும்)

எம்.ரி.வி. தொலைக்காட்சி நிறுவனத்தின் உரிமை பெற்று மகாபாரத கதை வசனம் வெளியிடப்படுகிறது.

அருள் ஜுவலர்ஸ்

வண்ண நகைகளின் கூடம்
எண்ணம் முழுதும் அதை நாடி
436331
3 SEA STREET, COLOMBO 11
3 செட்டியார் தெரு, கொழும்பு 11

# எங்க பாட்டன் சொத்து

www.padippakam.com

இந்தியாவில் ராஜஸ்தான் மாநிலத்தைச் சேர்ந்தவர் கல்யான் ராம்ஜி. வயது-66.

அவரது பேத்திகளுக்கு ராம்ஜி சொத்தாக சேர்த்துக் கொடுத்திருப்பது தனது நீள மான மீசையைத்தான். அதாவது நீளமான மீசை மூலம் உலக சாதனை படைத்து விட்டதால், சாதனை வீரரின் பேத்திகள் என்று சொல்லிக் கொள்ளலாம் அல்லவா.

ராம்ஜி மீசை வளர்த்தது ஒரு தனிக் கதை. கண்ணில் கோளாறு வந்து வைத்தியரிடம் போனார் ராம்ஜி. முகம் பார்க்கும் → கண்ணாடியைப் பார்க்க வேண்டாம் என்றார் வைத்தியர். அன்று முதல் கண்ணாடியில் முகம் பார்க்காமலேயே மீசையை கிசு கிசுவென்று வளர்த்து விட்டார்.

மீசையின் நீளம் இடது புறம் 65 அங்குலம், வலது புறம் 62 அங்குலம். பேத்திகளுக்கு பொழுது போக்கும் தாத்தாவின் மீசைதான்.

Kala

JEWELLERY
புன்னகை சிந்தும் பெண்ணுக்கு பின்னிடும் பொன்னகை பேரழகு
433686
61 SEA STREET, COLOMBO 11
61 செட்டியார் தெரு, கொழும்பு 11






## மனைவி சொல்லே மந்திரம்

'மனைவி சொல்லே மந்திரம்' என்பதை யார் நம்புகிறார்களோ இல்லையோ அமெரிக்க ஜனாதிபதி பில் கிளின்டன் படு நிச்சயமாக நம்புகிறார்.

வெள்ளை மாளிகையில் நடைபெறும் மிக முக்கிய ஆலோசனைக் கூட்டங்களில் ஹிலாரி தவறாமல் ஆஜராகி விடுகிறார்.

ஹிலாரியின் செல்வாக்கைப் புரிந்து கொண்டிருப்பதால் தானோ என்னவோ சமீபத்தில் தெற்காசிய விஜயம் செய்த ஹிலாரிக்கு பயங்கரமான மரியாதை. இந்தியா, பாகிஸ்தான், இலங்கை போன்ற நாடுகளின் தலைவர்கள் ஹிலாரிக்கு கிலோக் கணக்கில் நல் வைத்து அனுப்பினார்கள்.

இது பக்காவான தந்திரம். கணவரை வளைக்க மனைவியை கைக்குள் போட்டுக் கொள்ள வேண்டும் என்பதை தெற்காசிய தலைவர்கள் நினைவில் வைத்திருக்கிறார்கள்.

அமெரிக்க அரசியலில் ஹிலாரியின் வசீகரமும் பில் கிளின்டனுக்கு கை கொடுத்து வருகிறது.

## தருவது - வியோடெ

'பேபீஸ் டே அவுட்' ஹொலிவுட் படம் வசூலை மழையாகப் பொழிந்து கொண்டிருக்கிறது.

வசூல் மழைக்குக் காரணம் ஒரு மழலை! சொன்னால் நம்பவே மாட்டீர்கள். மழலையின் வயது ஆக ஒன்பதே மாதங்கள்.

ஒரு வசதியான குழந்தையை மூன்று பேர் கடத்திச் செல்கிறார்கள். குழந்தை தவறிவிடுகிறது. குழந்தை பஸ், டாக்சி என்று பயணம் செய்து மிருகக்காட்சி சாலை, பூங்கா என்று எங்கும் தவழ்ந்து திரிவதுதான் படத்தின் கதை.

கதைக்கு ஏற்ப ஒன்பது மாதக் குழந்தை நடித்து அசத்தியிருப்பதுதான் உண்மையில் பெரிய கதை.

படத்தில் இருப்பதுதான் அந்தக் குழந்தை. பல கோடி ரூபாய் ஊதியம் கொடுத்து நடிக்க வைக்க ஹொலிவுட் தயாரிப்பாளர்கள் இப்போது கியூவில் நிற்கிறார்கள்.

குழந்தைதானே என்று அலட்சியம் வேண்டாம். உங்கள் குழந்தைகளிடம் மறைந்திருக்கும் திறமைகள் ஒளிந்திருக்கலாம். கண்டு பிடித்து ஊக்குவியுங்கள்.

## அசத்தலான குழந்தை





104வது முரசில் பழங்களால் செய்யப்பட்ட கம்பீர சிங்கம் ஒன்று பார்த்திருப்பீர்கள். அது போலவே இதுவும் சுவைக்குரிய பழங்களால் சொக்க வைக்கும் கலையால் உருவானதுதான். பழங்காலக் குதிரை வண்டியை பழங்களால் உருவாக்கி 'டிஸ்னி லாண்டில்' (அமெரிக்கா) பார்வைக்கு வைத்திருக்கிறார்கள். கண்ணுக்கு விருந்து!

## பிறந்த நாள் வாழ்த்து



பாத்திமா ரமீஸா

கொழும்பு கிராண்பாஸ் 157/21 இல் 23.06.1995 அன்று தனது பன்னிரண்டாவது பிறந்தநாளை பாசமாய் பண்புடன் வளர்க்கும் அப்பா-உம்மும்மா குடும்பத்தினர், வாப்பும்மா குடும்பத்தினர் பள்ளித் தோழர்கள் மற்றும் உற்றார் உறவினர்களுடன் குதூகலமாய் மனநிறைவுடன் கொண்டாடுவதை-

அன்பும் பண்பும் பாசமும் பணிவும் நிறைந்தவளாய் பல்லாண்டு வாழ்கவென வாழ்த்துகிறார்கள்.

குவைட்டில் வசிக்கும் அன்புப் பெற்றோர்.

பாருக்-பௌஸியா தம்பதி.

# இணைந்த வியட்நாமின் 20ம் ஆண்டு

சோவியத் யூனியன் சிதறிய பின்னரும் சோசலிச கொள்கையில் உறுதியாகவுள்ள மிக அரிதான நாடுகளில் ஒன்று வியட்நாம்.

மா பெரிய நாடு, மாவல்ல படை என்று மார்தட்டி போர் தொடுத்த அமெரிக்காவை, அதனோடு ஒப்பிடும் போது கடுகுபோல் இருந்த வியட்நாம் 'ஓடு-வராதே' என்று விரட்டியது.

தென் வியட்நாமையும், வட வியட்நாமையும் இணைய விட மாட்டோம் என்று சூளுரைத்த அமெரிக்கா-1975இல் வியட்நாமை விட்டு மூட்டை முடிச்சுக்களோடு வெளியேறியது.

வியட்நாம் விடுதலையான 20வது ஆண்டு விழாக் கொண்டாட்டம் சமீபத்தில் ஹோசிமின் நகரில் விமரிசையாக நடந்தது.

வியட்நாம் தலைவர் அமரர் ஹோசிமின் படத்தின் முன்பாக படை வீரர்கள் அணிவகுத்து மரியாதை செலுத்தினார்கள். உடல் மறைந்தும் புகழ் மறையாத தலைவர்.

